
251

வள்ளுவர்

# தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பு



251
1 ...

TB
031, 6 152
N60
139725.

நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

# வள்ளுவர் தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பு

வித்துவான் S. நாகராசன், M.A., B.T.,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மேரி போதனமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்-1.

**சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்**
ஈ ரோ டு

பதிப்புரிமை] 1960 [விலை ரூ. 0-95.

முதற் பதிப்பு—1959
இரண்டாம் பதிப்பு—1960

79
03,65
N60

*Approved by the Madras Text Book Committee, Madras for class use, Vide Fort St. George Gazette dated 18-5-60, Par. I-B, Page 11.*

600 008.
139725

[24 இராத்தல் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டுள்ளது]

தார்வின் பிரின்டிங் ஒர்க்ஸ், எழும்பூர், சென்னை—12

# முன்னுரை

அரசியலார் அண்மையில் (25-12-57) வெளியிட்டுள்ள தொடக்கநிலைப் பள்ளிகளுக்கான பாடத்திட்டப்படி ஐந்தாம் வகுப்புக்குரிய இப்பாட நூல் வரையப்பட்டுள்ளது. பாடங்களின் இறுதியிலும், செய்யுட்களின் இறுதியிலும் குறிப்புகள், வினுக்கள், பயிற்சிகள் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன ; மனப்பாடம் செய்யவேண்டிய 100 வரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை, பாடம் கற்பிக்கும் ஆசிரியர் விருப்பத்திற்கே விடப்பட்டுள்ளது.

பாடத்திட்டத்திற்குரிய இலக்கண விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை இளஞ்சிறுர்கள் படித்துப் பயனடைய உதவிபுரியுமாறு பள்ளித்தலைவர்களையும், ஆசிரியர்களையும் வேண்டுகிறேன்.

ஆசிரியன்.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடை** | | |
| 1. | தாய்மொழி | ... | 1 |
| 2. | பாரதியார் | ... | 6 |
| 3. | ஒரு நாள் மன்னன் | ... | 12 |
| 4. | ஐவகை நிலங்கள் | ... | 17 |
| 5. | கரை கட்டிய காவலன் | ... | 23 |
| 6. | மகாபலிபுரம் | ... | 28 |
| 7. | அசோகர் | ... | 34 |
| 8. | நான்கு கோடிகள் | ... | 39 |
| 9. | தெனாலிராமன் | ... | 44 |
| 10. | செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு | ... | 48 |
| 11. | வானூர்தி | ... | 53 |
| 12. | பாரி வள்ளல் | ... | 58 |
| 13. | செய்தித்தாள்கள் | ... | 65 |
| 14. | மாணிக்க நாய்க்கர் | ... | 69 |
| 15. | கடிதங்கள் | ... | 74 |
| 16. | இயேசு நாதர் | ... | 79 |
| 17. | முத்துக்குளிப்பு | ... | 86 |
| 18. | கொடி காத்த குமரன் | ... | 89 |
| 19. | பவானி அணை (உரையாடல்) | ... | 94 |
| 20. | பாட்டியும் பேரனும் (நாடகம்) | ... | 99 |

## செய்யுள்

I. வாழ்த்து :
1. தேவாரம் ... 106
2. திருவாசகம் ... 106
3. திவ்யப் பிரபந்தம் ... 106
4. தேம்பாவணி ... 106
5. சீருப்புராணம் ... 107
6. திருக்குறள் ... 107

II. நீதி :
1. திருக்குறள் ... 112
2. நீதி வெண்பா ... 113
3. அறநெறிச்சாரம் ... 114
4. ஆசாரக் கோவை ... 115

III. கதை :
1. பஞ்ச தந்திரம் ... 120
2. குலவிச்சை ... 122

IV. பல்சுவை :
1. நாட்டு வணக்கம் ... 125
2. நாய் ... 125
3. விண்மீன் ... 126
4. காற்று ... 126

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உத்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

# நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்;


நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது.

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.


சங்ககாலத் தமிழகம்
வட பெண்ணை
தொண்டை நாடு
வேங்கடம்
பாலாறு
காஞ்சிபுரம்
கடல்மல்லை
மரக்காணம்
நடுநாடு
தகடூர்
தென்பெண்ணை
காவிரி
திருக்கோவலூர்
புதுச்சேரி
(பொதுகா)
கொல்லிமலை
கொங்கு நாடு
சோழ நாடு
காவிரிப் பூம்பட்டினம்
உறையூர்
ஆவூர்
தொண்டி
முதிரமலை
கோடை மலை
நாகப்பட்டினம்
வஞ்சி
முசிறி
பழநிமலை
பிரான்மலை (பறம்புமலை)
மதுரை
சேர நாடு
பாண்டி நாடு
நள்ளிநாடு
கொற்கை
பொதியமலை
நாஞ்சில்மலை
கன்னிமுனை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இலங்கை
வள்ளல்கள் ஆண்ட சிறிய நாடு
தலை நகரம்
துறைமுகப் பட்டினம்
புலவர்கள் வாழ்ந்த ஊர்

# 1. தாய்மொழி

'பெற்ற தாயும் பிறந்த நன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே' என்று ஆன்றோர் அருளியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். மக்களைச் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்ப்பவள் தாய். அவள் தன் மக்களிடம் பேசிப்பேசிக் கற்பித்த மொழியே தாய்மொழியாகும்.

நமது தாய்மொழி தமிழ். நமது நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் உள்ள தாய் தமிழ் மொழியைக் கற்பிக்கிறாள். தெலுங்கு நாட்டில் உள்ள தாய் தன் மொழியான தெலுங்கை அவள் மக்களுக்குக் கற்பிப்பாள். இங்ஙனம் அந்தந்த நாட்டினரின் தாய்மொழி அந்தந்த நாட்டில் வழங்கும் மொழியாக இருக்கும்.

நம் நாட்டில் பிறந்த ஒரு சிலருடைய தாய் மொழி தமிழாக இராது. ஏனெனில் அவர்களுடைய முன்னோர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசும் நாடுகளிலிருந்து நம் நாட்டில் வந்து குடியேறியவர்களாவார்கள். ஆயினும் அவர்கள் தாங்கள் வாழும் இடத்தில் வழங்கும் மொழியையே தாய்மொழி என மதித்துப் பேசியும் கற்றும் வருவதை நாம் காணலாம்.

தமிழ் என்னும் சொல்லுக்குப் பல பொருள் உண்டு. அவற்றுள் இனிமை என்பது ஒரு பொருள். தமிழ் மொழி இனிமையுடைய மொழி. இம்மொழியி

லேயே உலகம் போற்றும் திருக்குறள் என்னும் சிறந்த ஒழுக்க நூல் இருக்கிறது. கம்பர், ஔவை யார் போன்ற மிகச் சிறந்த கவிஞர்கள் தமிழ்மொழி யில் அரிய இலக்கியங்கள் இயற்றியுள்ளனர். தமிழ் இலக்கிய வளம் மிக்க மொழியாகையினுல் நம் நாடு கல்வி சிறந்த தமிழ்நாடு என்று போற்றப் பட்டு வருகிறது.

தமிழ் நாட்டின் பண்டைய எல்லைகள் மிகவும் விரிவாக இருந்தன. வடக்கில் வேங்கடமும், தெற்கில் கன்னியாகுமரியும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் இருந்தன.

இப்பொழுது இவ்வெல்லைகள் சுருங்கிவிட்டன. வடக்கெல்லையான வேங்கடம் இன்று தெலுங்கு நாட்டைச் சேர்ந்துவிட்டது. மேற்கில் மைசூர் நாடும் மலையாள நாடும் எல்லையாக உள்ளன. இந்த எல்லைக்குள் இருக்கும் நாடே தமிழ் மொழி பேசும் தமிழ் நாடாகும்.

தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழி. அது கணக்கிட்டுக் கூறமுடியாத காலத்திற்கு முன்னதாகவே தோன்றி வளர்ந்துள்ளது. இம் மொழியை மூன்று சங்கங்கள் வளர்த்தன. அவை தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனப்படும்.

தலைச் சங்கம் கடல் கொண்ட குமரிக் கண்டத் தில் இருந்த மதுரை என்னும் நகரின்கண் இருந் தது. இடைச் சங்கம் கடல் கொண்ட குமரிக் கண் டத்தில் பஃறுளி யாற்றின் கரையில் இருந்த கபாட

புரம் என்னும் நகரில் இருந்தது. கடைச் சங்கம் இப்பொழுதுள்ள மதுரையில் இருந்தது.

இம் மூன்று சங்கங்களையும் பாண்டிய மன்னர் களே ஆதரித்துப் போற்றி வந்தனர். அச்சங்கங் களில் பல நூல்கள் இயற்றப்பட்டன. பல புலவர் கள் சங்கத்தில் அங்கம் வகித்து அரும்பணி ஆற்றி வந்தனர். முதல் இரு சங்கங்களும், சங்கம் இருந்த இடங்களும், இயற்றப்பட்ட நூல்களுள் பலவும் கடல்கோள்களால் அழிந்துபட்டன. கடைச்சங்க மும் பிறமொழியாளர் படையெடுப்பால் அழிந்தது. சங்க நூல்களுள் அழிந்தன போக எஞ்சியிருப்பவை தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு முதலியவைகளேயாகும். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தமிழ் மொழியின் தனித் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட் டாகும்.

சங்கம் வளர்த்த பாண்டிய மன்னர்களேயன்றிச் சேரரும், சோழரும், குறுநில மன்னரும், தமிழ்நாட் டிலிருந்த பிற வள்ளல்களும் தமிழ்மொழியை ஆத ரித்தனர்; தமிழ்ப் புலவர்களைப் போற்றி வந்தனர். தமிழ் நூல்கள் பல இயற்ற ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவினர். இதனாலேயே தமிழ் மொழி இன்று உயரிய இடத்தைப் பெற்றுச் சிறந்து விளங்கு கிறது.

எனவே நம் தாய் மொழியாகிய தமிழ்மொழிக்கு நாம் செய்யத் தக்கது யாது? தாயிடம் கொள் ளும் பற்றைப் போலத் தமிழ் மொழியிடம் அன்பு கொள்ள வேண்டும். தாய் மொழியைப் பிழை யின்றிப் பேசுதல் வேண்டும்; பிழையற்ற தூய

தமிழ் எழுத வேண்டும்; பண்டைத் தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும்; படியாதவருக்கு அதன் பெருமையை எடுத்துரைக்க வேண்டும். இவையே நாம் தாய் மொழிக்குச் செய்யும் தொண்டாகும்.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆன்றோர் | பண்டைய | ஆதரித்து | தனித்தன்மை |
| சீராட்டி | விரிவாக | போற்றி | எடுத்துக் காட்டு |
| பாராட்டி | சுருங்கி | அங்கம் | குறுநில மன்னர் |
| மதித்து | தொன்மை | அரும்பணி | வள்ளல்கள் |
| கவிஞர்கள் | நடைபெற்று | ஆற்றி | ஆக்கம் |

## வினாக்கள்

1. தாய் மொழி என்பது யாது?

2. பிற நாட்டுத் தாய்மொழிகள் யாவை? நம் நாட்டுத் தாய்மொழி யாது?

3. நம் நாட்டில் ஒரு சிலரின் தாய் மொழி தமிழாக இராமைக்குக் காரணம் கூறுக.

4. நம் நாடு எப்படிப் போற்றப்படுகிறது? ஏன்?

5. தமிழ் நாட்டின் பண்டைய எல்லைகளையும் இக்கால எல்லைகளையும் கூறுக.

6. தமிழ் தொன்மையான மொழி என்பது எப்படி?

7. மூன்று சங்கங்கள் யாவை? அவை எங்கெங்கு இருந்தன?

8. சங்கங்கள் செய்த தொண்டுகள் யாவை?

9. இப்பொழுது கிடைக்கும் சங்க நூல்கள் யாவை?

10. தமிழ் உயரிய இடம் பெறக் காரணம் யாது?

11. தாய்மொழிக்கு நாம் செய்யத்தக்கன யாவை?

## பயிற்சி

1. த்தாயைக் குறிக்கும் மற்ருெரு சொல் யாது ?

2. 'பெற்ருேர்'—பொருள் யாது ?

3. இக்காலப் புலவர்கள் இருவரைக் கூறுக.

4. திருவள்ளுவர், கம்பர்-இவர்கள் இயற்றிய நூல்களை அறிந்துகொள்க.

5. மூன்று சங்கங்களைப்பற்றி மேலும் தெரிந்து கொள்க.

6. பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு இவற்றை அறிந்து கொள்க.

7. வாக்கியங்களில் அமைக்க : ஆக்கமும் ஊக்கமும், தொன்மையான, உயரிய.

## இலக்கணம்

மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிப்பது இலக்கணம். தமிழ்மொழியை அங்ஙனம் கற்க உதவுவது தமிழ் இலக்கணம். அது ஐந்து வகைப்படும். அவையாவன : எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகியன.

# 2. பாரதியார்

நமது தமிழ் நாட்டில் அறிஞர்கள் பலர் வாழ்ந் திருந்தனர். அவர்களில் ஒருவர் பாரதியார். பாரதி யார் ஒரு புலவர். புலவர் என்பவர் யார் தெரியுமா? ஒரு மொழியில் பிழையற்ற செய்யுள்களையும் உரை நடைகளையும் இயற்றக் கூடியவரையே புலவர் என்று கூறுவர். செய்யுள் இயற்றுபவரைக் கவிஞர் என்றும் கூறுவர்.

பாரதியார் நம் நாட்டுக் கவிஞர். இவர் திரு நெல்வேலி மாவட்டத்தில் எட்டையபுரம் என்னும் ஊரில் பிறந்தார். பாரதியாரின் தந்தை பெயர் சின்னச்சாமி. தாய் பெயர் இலக் குமி அம்மாள். இவர் தம் தாயைத் தமது ஐந்தாம் ஆண்டி லேயே இழந்தார். பாரதியாரது பதினைந் தாவது ஆண்டு வரை இவரது தந் தையே தாயும் தந் தையுமாகி இவரை வளர்த்து வந்தார். பாரதியார் தந்தை யிடமே கல்வி கற்று வந்தார். இவர் தமதுஎட்டாவது ஆண்டிலேயே பல இனிய கவிகளைப் பாடுவார். கல்விமான்கள் பலர் இவரைப் 'பாரதி' என்று பாராட்டினர். 'பாரதி'



பாரதியார்

என்பது சரசுவதி தேவிக்குள்ள பெயர்களுள் ஒன்று.

பாரதியார் தந்தையிடத்தில் பல தமிழ் நூல்களைக் கற்ருர். பின்னர் இவர் திருநெல்வேலியிலுள்ள இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார். அங்குத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்ருர். ஆனாலும் இவருக்கு ஆங்கிலம் கற்பதில் மிகுந்த விருப்பம் இல்லை. பள்ளியில் பாரதியார் எவரோடும் மிகுதியாகப் பேசமாட்டார் ; எப்போதும் தனிமையாகவே இருப்பார் ; தனியே அமர்ந்து படிப்பார் ; எழுதுவார்.

பாரதியார் தம் தந்தையைப் பதினைந்தாம் வயதில் இழந்தார். அப்போது இவரது அத்தை இவரைக் காசிக்கு அழைத்துச் சென்ருர். காசியில் இவர் இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை நன்ருகக் கற்ருர். பாரதியார் பல மொழிகளைப் பயின்றபோதிலும் தமிழ் மொழியினிடத்து அடங்கா ஆவல் கொண்டு விளங்கினர். இவர் "யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது ஒன்றுமில்லை" என்று பாடியுள்ளார்.

காசியில் இவரை எட்டையபுரத்து அரசர் கண்டார்; இவரைத் தம் அவையில் புலவராக அமரும்படி வேண்டினர். பாரதியாருக்கும் காசி வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்று. தமிழ் நாட்டில் வாழ்வதையே இவர் விரும்பினர். எனவே எட்டையபுரத்து மன்னர் வேண்டுகோட்படி எட்டையபுரம் வந்து சேர்ந்தார் ; அங்கு அவரது சபையில் புலவராக அமர்ந்தார். பாரதியார் பல இனிய

தமிழ்க் கவிகளைப் பாடி அரசரை மகிழ்வித்து வந்தார். அவரும் இவருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அன்போடு ஆதரித்து வந்தார்.

சில ஆண்டுகள் சென்றன. எட்டையபுரத்து மன்னருக்கும் பாரதியாருக்கும் மன வேறுபாடு உண்டாயிற்று. பாரதியாருக்கு எட்டையபுரத்தில் இருப்பதற்கு விருப்பம் இல்லை; உடனே மதுரைக்குப் புறப்பட்டார். அங்குச் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராய்ச் சிறிது காலம் வேலை பார்த்து வந்தார்; பின்னர் அவ்வேலையையும் விட்டுவிட்டார்; சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' நாளிதழுக்கு உதவியாசிரியராக இருந்தார். அப்பொழுது இவர் நாட்டுத் தொண்டில் ஈடுபட்டார். இவர் 'இந்தியா' 'பாலபாரதம்' என்ற இதழ்களைத் தாமே துவக்கி நடத்தினர். அரசாங்கத்தாரால் இவருக்குப் பல துன்பங்கள் தொடரலாயின. அதனல் இவர் சென்னையைவிட்டுப் புதுச்சேரியை அடைந்தார்.

புதுச்சேரியில் பாரதியார் வாழ்க்கை மிகவும் துன்பமயமாக இருந்தது. இவர் உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமல் வருந்தினர். மனைவி மக்களும் இத்துன்பங்களில் பங்குகொண்டனர். எனினும் பாரதியார் அஞ்சா நெஞ்சுடன் விளங்கினர்; பல பாடல்களைப் பாடினர்; அங்கிருந்து தமிழ் மக்களுக்கு உரிமை வேட்கையை வளர்த்து வரலானர்; பல கட்டுரைகளை எழுதித் தாய் நாட்டின் விடுதலைக்குத் தொண்டு புரிந்து வந்தார்.

பாரதியார் மீண்டும் சென்னைக்கு வந்தார். இவர் சென்னை வந்தபின் நெடுங்காலம் வாழவில்லை.

பிணியும், வறுமையும் பாரதியாரைத் துன்புறுத்தின. இறுதியில் இவர் தமது முப்பத்தொன்பதாம் ஆண்டில் தம் பூத உடலை நீத்துப் புகழ் உடலைப் பெற்றார்.

பாரதியார் பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியவற்றைப் பாடியுள்ளார். இவையேயன்றி எண்ணிறந்த நாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்களைச் சிறுமியர் முதல் பெரியவர் வரை எல்லோரும் பாடுகின்றனர்.

இவரது தொண்டினைத் தமிழகம் என்றும் மறக்க முடியாது. அதனால் தமிழ் மக்கள் இவரது நினைவு என்றென்றும் நிலைத்திருக்கும்படி எட்டையபுரத்தில் ஒரு மண்டபம் கட்டினர். அதற்குப் 'பாரதி மண்டபம்' என்பது பெயர்.

பிள்ளைகளே, நீங்களும் பாரதியாரைப் போலப் பல மொழிகளைக் கற்க வேண்டும். இவருடைய தமிழ்ப் பற்றைப் போலத் தமிழ் மொழியினிடத்து ஆர்வம் கொள்ள வேண்டும். கவிகளை இயற்றும் வல்லமையைப் பெற வேண்டும். நமது நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இயற்ற | பாரதி | தனிமை | அஞ்சாநெஞ்சு |
| மாவட்டம் | அவை | வல்லமை | விடுதலைவேட்கை |
| இனியகவிகள் | விருப்பம் | எண்ணிறந்த | தொண்டு |
| இறுதியில் | பூதஉடல் | புகழ்உடல் | தமிழ்ப்பற்று |

## வினாக்கள்

1. புலவர்கள் என்பவர் யாவர்? அவர்களை வேறு எவ்விதம் கூறலாம்?

2. பாரதியாரின் பெற்றோர்களின் பெயர்களைக் கூறுக.

3. பாரதியார் தமிழ் நூல்களை யாரிடம் கற்றார்?

4. பாரதியாருக்கு என்னென்ன மொழிகள் தெரியும்? எந்த மொழியிடத்தில் பாரதியார் மிகுந்த விருப்பமுள்ளவர்?

5. பாரதியார் எட்டையபுரத்திற்குக் காசியிலிருந்து ஏன் வந்தார்?

6. பாரதியார் என்னென்ன அலுவல்களில் இருந்தார்?

7. விடுதலைக்குப் பாரதியார் உழைத்தது எப்படி?

8. பாரதியார் பாடியுள்ள நூல்களில் நான்கினைக் கூறுக.

9. தமிழ் மக்கள் பாரதியாரை நினைவில் வைத்திருப்பது எப்படி?

### பயிற்சி

1. அரசர், புலவர், அவை - இவற்றைக் குறிக்கும் வேறு சொற்களைக் கூறுக.

2. வறுமை, விருப்பம், துன்பம் - எதிர்ப்பதம் எழுதுக.

3. இயற்ற, தனிமையாக, அடங்கா ஆவல்— இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4. கோடிட்ட இடங்களில் தக்க வார்த்தைகளை அமைத்து எழுதுக:—

(அ) பாரதியார் தம் அத்தையோடு—சென்றார்.
(ஆ) பாரதி என்பது —உள்ள பெயர்களில் ஒன்று.
(இ) நமது நாடு—பெற்றது.

## இலக்கணம்

பாரதியார் பல நூல்களைக் கற்றார். இவ்வாக்கியத்தின் பயனிலை 'கற்றார்' என்பதல்லவா? பயனிலையைக்கொண்டு 'யார் கற்றார்' என்ற கேள்வியைக் கேள். வரும் விடை 'பாரதியார்' என்பது. இச் சொற்றொடருக்குப் 'பாரதியார்' என்பதே எழுவாய்.

இப்படியே சொற்றொடரின் பயனிலைகளைக் கொண்டு யார்? அல்லது எது? அல்லது எவை? என்ற கேள்விகளைக் கொண்டு எழுவாயைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அடியிற்கண்ட சொற்றொடர்களுக்கு எழுவாய் பயனிலைகளைக் கூறுக.

(அ) பாரதியார் வாழ்க்கை மிகவும் துன்பமாக இருந்தது.

(ஆ) அவர் நாளிதழ்களை நடத்தினார்.

(இ) பாரதியார் மதுரைக்குப் புறப்பட்டார்.

# 3. ஒரு நாள் மன்னன்

பாக்தாது என்னும் ஊரில் செல்வச் சீமான் ஒரு வன் இருந்தான். அவன் தன் மனைவியுடனும், தன் ஒரே மகனுடனும் இன்பமாக வாழ்ந்து வந்தான். மகனுடைய பெயர் ‘அபூ’ என்பது. அவன் அழகுடையவன்; சிறந்த அறிவுக் கூர்மையும், வேடிக்கையாகக் காலத்தைக் கழிக்கும் இயல்பும் பெற்றவன். அவன் தந்தை அவனை மிகவும் அக்கறையுடன் பாதுகாத்து வளர்த்து வந்தார். இளைஞர்கள் விரும்பிக் கைக்கொள்ளும் எச்செயலையும் அவன் செய்யாதவாறு அவர் தடுத்து வந்தார்.

இங்ஙனம் இருக்குங் காலத்தில் அச்சீமான் திடீரென்று ஒருநாள் இறந்து விட்டார். செல்வம் யாவும் அபூவின் கைக்கு வந்தது. அபூ தான் விரும்பியவாறு செல்வத்தைச் செலவு செய்து சுகமடைய முடிவு செய்தான். தன் செல்வத்தின் ஒரு பாதியைக் கொண்டு வீடுகளையும், நிலங்களையும் வாங்கிக் கொண்டான். மற்றொரு பாதியைக் கொண்டு ஆடம்பர வாழ்க்கை நடத்தத் தொடங்கினான்.

அவ்வூரிலிருந்த இளைஞர்கள் பலரும் அவனுக்கு நண்பர்களாயினர். கேளிக்கையும், கூத்தும், பாட்டுமாக அவன் இல்லம் காட்சியளித்தது. ஒவ்வொரு நாளும் விருந்துகள் நடைபெற்றன. தந்தை தேடிக் காத்து வைத்த செல்வத்தில் பாதி ஓராண்டிற்குள் தீர்ந்து விட்டது. செல்வம் ஒழிந்ததும் அவனுடைய நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராக மறையலாயினர். அபூ தன் நிலைமையை உணர்ந்

தான். இனி நண்பர்களுடன் உறவாடுதல் தகாது என்று முடிவு செய்து கொண்டான்.

ஆனால் அபூவிற்குத் தனியாகக் காலங்கழிப்பது கடினமாக இருந்தது. அவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விருந்தாளியை அழைத்து, அவருடன் இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டு வரலானான். ஒரு நாள் வரும் விருந்தாளியை மறுநாள் அழைக்காமல் புதுப்புது விருந்தாளிகளையே அழைத்து வரலாயினன். ஏனெனில், அவன் எவருடனும் நீடித்த நட்பைப் பெற விரும்பவில்லை.

ஒரு நாள் வழக்கம்போல் அபூ ஒரு விருந்தாளியை அழைத்து வரச் சென்றான்; சென்ற விடத்து, வணிகன் ஒருவனையும், அவனுடன் அவனது வேலைக்காரன் ஒருவனையும் கண்டான். அபூ அந்த வணிகனைத் தன்னுடன் உணவுண்டு, இரவைத் தன் வீட்டிலேயே கழிக்கும்படி கேட்டுக் கொண்டான். வணிகனும் அபூவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவனுடன் சென்றான். அபூவின் இல்லத்தில் விருந்து சிறப்பாக நடைபெற்றது. அவன் விருந்திற்குப் பின் தன் விருந்தாளியுடன் மகிழ்வாகப் பேசிக் கொண்டிருந்தான்.

வணிகன் உண்மை வணிகனல்லன். அவன் அவ்வூர் மன்னன். மாறுவேடம் பூண்டு மக்களைக் காணுவது அவன் வழக்கம். அதன்படி அன்றும் அவன் வந்திருந்தான். அபூவிற்கு அது தெரியாது. வணிகன் அபூவிற்குத் தான் ஏதேனும் உதவிசெய்ய

வேண்டும் என்று கூறினன். ஆனல் அபூ தனக்கு ஒன்றும் தேவையில்லை யென்று கூறிவிட்டான் ஆனல், தன் வீட்டருகில் குடியிருக்கும் ஐந்து கொடிய மனிதர்கள் செய்யும் தீமைகளைப் பற்றி அவ்வணிகனிடம் கூறினன். வணிகன், ‘அதற்கு என்ன செய்யலாம்?’ என்று கேட்டான். அபூ, ‘நான் ஒருநாள் மட்டும் மன்னனுக இருந்தால் அவர்களை ஒழித்து விடுவேன். அதனல் அவர்கள் எவருக்கும் துன்பம் செய்ய முடியாது’ என்ருன்.

வணிகனுக வந்த மன்னன் அவனைக் கொண்டு வேடிக்கை செய்ய எண்ணினன்; தன் கையி லிருந்த மயக்க மருந்தை மதுவில் கலந்து அவனை அருந்தச் செய்தான்; அவன் மயங்கிக் கிடந்த போது, தன் வேலையாளைக் கொண்டு அவனை அரண்மனைக்கு எடுத்துச் சென்ருன்; அவனை அரச னுகவே நடத்துமாறு தன் பரிவாரங்களுக்கு உத்தர விட்டான்; மறைந்திருந்து நடப்பதைக் கவனிக் கலாயினன்.

மயங்கிக் கிடந்த அபூ அரசனது படுக்கையறை யில் காலையில் கண்விழித்தான். அரசனுக்குரிய மரியாதைகள் அனைத்தும் அவனுக்குச் செய்யப் பட்டன. அபூவிற்கு எல்லாம் புதுமையாக இருந் தது. கனவு காணுவதாகவே அவன் எண்ணினன். ஆனல் அமைச்சர் முதலியோர் அவனைப் பன்முறை வணங்கிப் போற்றவே அவன் நனவுலகிற்கு வந் தான். உடனே அவன் தான் எண்ணியவற்றை நிறைவேற்றத் தீர்மானித்தான். தன் வீட்டருகில்

மக்களுக்குத் துன்ப மியற்றிவரும் கொடியவர்களைப் பிடித்துவருமாறு செய்து அவர்களுக்குக் கடுந் தண்டனை விதித்தான்.

பின் இரவு நெடுநேரம் வரையிலும் அபூ பல களியாட்டங்களில் கலந்து கொண்டு மகிழ்ந்தான்; அரண்மனையில் அரசன் படுக்கை யறையில் துயில் கொண்டான். அவன் தூங்கியதும், அரசன் அவனை அவன் வீட்டிற்கு எடுத்துச் செல்லச் செய்தான். துயில் கொண்ட அபூ, தன் வீட்டில் தன் தாயார் எழுப்ப எழுந்தான்; தான் அரசன் என்றே எண்ணி அமர்க்களப்படுத்தினான். இறுதியில் அபூவைப் பைத்தியக்காரர் விடுதியில் அடைத்து வைத்தனர். பல நாட்களுக்குப் பிறகே தான் அரசனல்லன் என்பதையும், அபூ என்ற சாதாரண மனிதனே என்பதையும் அவன் உணர்ந்தான். அவனது திருந்திய நிலை கண்டு விடுதியினர் அபூவை வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

மற்றும் ஒரு முறை அபூ வணிகனாக வந்த மன்னனைச் சந்தித்தான். வணிகன் விருந்தாளியாக அபூவின் வீட்டிற்கு வருவதாகச் சொல்லியும் அபூ ஏற்றுக் கொள்ளவில்லை; தனக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறி மறுத்தான். மன்னன் அவனைத் தேற்றித் தான் யார் என்பதைக் கூறினான். பின்னர் அரசன் அபூவைத் தன் நண்பனாக ஏற்றுக் கொண்டான். அதுமுதல் அபூ மன்னரவையில் உறுப்பினனாகிப் பெருமையுடன் வாழ்ந்து வரலானான்

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| சீமான் | கைக்கொள்ளும் | உறவாடுதல் | வணிகன் |
| கூர்மை | ஆடம்பரம் | கடினமாக | மாறுவேடம் |
| இயல்பு | இளைஞர்கள் | புதுப்புது | வேடிக்கை |
| கேளிக்கை | நட்பை | கண்விழி | நிறைவேற்ற |
| நிலைமை | புதுமையாக | கடுந்தண்டனை | விடுதலை |

## வினாக்கள்

1. பாக்தாது வணிகன் இயல்பு யாது?
2. அபூ எப்படிச் செல்வத்தைச் செலவு செய்தான்?
3. அபூ தன் நண்பர்களால் அறிந்தது யாது?
4. மாறுவேடம் பூண்ட மன்னன் என்ன செய்தான்? ஏன்?
5. மன்னனுன அபூ செய்தது யாது?
6. அபூ பைத்தியக்காரர் விடுதிக்குச் சென்றது ஏன்?
7. மன்னன் அபூவிற்கு நண்பனுனது எப்படி?

## பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படிக்க எவ்வளவு நேரமாயிற்று என்று குறிக்க.
2. இதனை நாடகமாக நடிக்க உரையாடல்களை எழுதுக.
3. இதனைப் போன்ற ஐந்து கதைகளைப் படித்துக் குறிப்புகள் எழுதுக.
4. இக்கதையை உன் சொந்த வார்த்தைகளால் கூறுக.
5. வாக்கியங்களில் பயன்படுத்துக: அறிவுக் கூர்மை, கைக்கொள், புதுப்புது, புதுமையான.

## இலக்கணம்

இப்பாடத்தில் முதலிரண்டு பத்திகளில் உள்ள எழுவாய் பயனிலைகளைக் கட்டம் வரைந்து அதில் எழுதிக் காட்டுக.

# 4. ஐவகை நிலங்கள்

நாம் வாழும் நிலத்தை நம் மூதாதையர் ஐந்து வகைப் படுத்தியுள்ளனர்; அவற்றிற்குக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அழகிய பெயர் களும் சூட்டியுள்ளனர்.

எந்த நாடாயிருந்தாலும் மலைகள், காடுகள், வயல்கள், கடல்கள், பயன்படாத வறண்ட பகுதி கள் என ஐந்து வகை நிலங்களை நாம் காணலாம். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப் பெயர் பெற்றது. அப் பகுதி வயல்வளம் அற்றது. அங்கு



குறிஞ்சி நிலம்

நிலத்தை உழுது மிகுதியாகப் பயிர் செய்ய இயலாது. இயற்கையாகக் கிடைக்கும் ஒரு சில பொருள் களையே அங்கு வாழ்பவர்கள் பெற இயலும். சில வகைக் கிழங்குகள், தேன், தினை, மூங்கில், நெல்

முதலியனவே அங்குக் கிடைக்கும் பொருள்கள். அங்குப் பறவைகள், விலங்கினங்கள் ஆகியவற்றை வேட்டை யாடலாம். இவற்றைக் கொண்டே குறிஞ்சி நில மக்கள் வாழவேண்டும். ஆகையால் மலையில் வாழும் மக்கள், சமநிலப் பகுதியில் உள்ள மக்களைப் போல, நாகரிக வாழ்வு பெற்று வாழ முடியாது. குறிஞ்சி நில மக்கள் குறவர் என வழங்கப் பெற்றனர்.

மலையை அடுத்துள்ள நிலப்பரப்பு காடு. காடும் காடு சார்ந்த இடமுமே முல்லை எனப்பெயர் பெற்றது.



முல்லை நிலம்

முல்லை நிலம் கால் நடைகள் மேய்வதற்கு ஏற்றது. ஆடு மாடுகளை மேய்ப்பவர்களே அந்த நிலத்தில் மிகுதியாக வாழ்வார்கள். அவர்கள் ஆயர்கள்

அல்லது இடையர்கள் எனப்படுவர். அந்த நிலத்திலும் பயிர் செய்தல் மிகுதியாக நடைபெறுவதில்லை. அங்கு வாழும் ஆயர்கள் தங்கள் ஆடு மாடுகளைக் காலையிலிருந்து மாலை வரை மேய்ப்பர்; மாலையில் வீடு திரும்புவர். ஆய்ச்சியர் தம் செல்வமாகிய பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை அண்மையிலிருக்கும் ஊர்களில் விற்பர். தமக்கு வேண்டும் பொருள்களை அவ்வூர்களில் வாங்கிக் கொண்டு மீள்வர். அந்த நிலத்தில் கிடைக்கும் உணவுத் தானியங்கள் வரகு, சாமை, முதிரை என்பனவாம். இவற்றையே ஆயர்கள் பெரும்பாலும் உண்டு வாழ்க்கை நடத்துவர். குறிஞ்சி நில மக்களைப் போல இவர்களும் நாகரிக வாழ்க்கை வாழ முடியாது.

வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் எனப் பெயர் பெற்றது. இந்நிலத்தில் ஆறுகள் பாய்ந்தோடும். மக்கள் ஆறுகளைத் தடுத்து அணைகளைக் கட்டியிருப்பர். விளைநிலங்கள் செழிப்பாக இருக்கும். நிலங்களைப் பண்படுத்தி உழவர்கள் பயிர் செய்வர். நெல், கரும்பு, காய் கறிகள் ஆகியன மருத நிலத்தில் பயிராகின்றன. உணவுக்கு வேண்டிய பொருள்கள் பல இந்நிலத்தில் கிடைக்கும். எனவே, இந்த நிலத்துள்ளோர் உயரிய நாகரிகம் பெற்றுத் திகழ்வர்; பொருள் தேடும் வழியில் தம் முயற்சியைச் செலுத்தி வாழ்வர்; கல்வி கேள்விகளில் இம்மக்கள் சிறந்து விளங்குவர்.

கடலும், கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் எனப் பெயர் பெற்றது. இந்நிலத்தில் வாழ்பவர்கள் பரத



மருத நிலம்



நெய்தல் நிலம்

வர்களே. இவர்கள் தொழில் மீன் பிடிப்பது. இவர்கள் ஆழநெடுங்கடலில் நெடுந்தொலை சென்று மீன் பிடித்து வருவர். பிடிபட்ட மீன்களை விற்று, உணவுக்கு வேண்டியவற்றை வாங்கி வருவர்.

நீர்வளமற்ற, ஒன்றுக்கும் உதவாத நிலப்பகுதியே பாலை எனப் பெயர் பெற்றது. இதற்குத் தனியான நிலமில்லை. பாழான நிலமெல்லாம் பாலையே. இந்நிலத்தில் உள்ளவர்கள் அவ்வழிச் செல்வோரைக் கொள்ளையடிப்பதும், துன்புறுத்துவதுமே தொழிலாக உடையவர்கள்.

இந்த ஐவகை நிலமக்களும் பண்டைக்காலத்தில் சிறப்புற வாழ்ந்து வந்தனர் என்பதை நம் நூல்கள் கூறுகின்றன. அவர்கள் தத்தம் நிலத்துக்குரிய கடவுளர்களைப் போற்றி வந்தனர். ஓய்வு நாட்களில் விழாக்கள் நடத்தினர். விருந்தினரை வரவேற்று முகமன் கூறி இன்சுவை உணவை அளித்தனர். யாழ், பறை ஆகியவற்றைக்கொண்டு பண் இசைத்தனர். பலவகைக் கூத்துக்களை ஆடி, மகளிரையும் மக்களையும் மகிழ்வுறச் செய்தனர்.

## அருஞ்சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | பாலை | இடையர்கள் | பண்படுத்தி | முகமன் |
| முல்லை | இயலாது | ஆயர்கள் | திகழ்வர் | விழாக்கள் |
| மருதம் | சமநிலம் | அண்மை | பரதவர் | பண் |
| நெய்தல் | நாகரிகம் | முதிரை | பாடு | மகிழ்வுற |

## வினாக்கள்

1. ஐவகை நிலங்கள் யாவை?

2. குறிஞ்சி நிலத்தைப்பற்றி வரைக.

3. முல்லை நிலம் என்பது யாது? அங்கு வசிப்பவர்களின் தொழிலை வரைக.

4. மருத நிலவளத்தைப்பற்றி வரைக.

6. நெய்தல் நில வாழ்க்கையைப் பற்றி வரைக.

6. பாலை நிலமென்பது யாது? அங்கு வாழ்வோர் எவர்?

7. ஐவகை நிலங்களைப் பற்றி நீவிர் அறியும் பொதுக் குறிப்புகளை வரைக.

## பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் வரைக: சமநிலம், இயலாது, உரிய, வறண்ட.

2. சொற்றொடர்களில் பயன்படுத்தி எழுதுக: முகமன், மகிழ்வுற, பண்படுத்தி.

3. நீ குறிஞ்சி நிலத்தில் இருப்பது போல் எண்ணிக் கொண்டு பத்து வரிகளை வரைக.

4. நீ வாழும் இடம் எவ்வகை நிலத்தைச் சேர்ந்தது? காரணத்துடன் வரைக.

## இலக்கணம்

"அங்கு வாழ்பவர்கள் சில பொருள்களைத் நான் பெற முடியும்"-இச்சொற்றொடரின் பயனிலை **பெறமுடியும்** என்பது. எழுவாய் **வாழ்பவர்கள்** என்பது. பயனிலையைக் கொண்டு எவற்றை? என்ற கேள்வி கேட்டால் வரும் விடை **சில பொருள்களை** என்பதுதான் அல்லவா? இதுவே இச்சொற்றொடரில் செயப்படுபொருள் ஆகும்.

# 5. கரை கட்டிய காவலன்

சங்க காலத்துச் சோழர்களில் குன்றிலிட்ட விளக்குப் போல் விளங்கியவர் கரிகாலன் என்பவர். இவரைக் கரிகால் சோழன் என்றும் கூறுவர். சோழ நாட்டை வளமிக்க நாடாகச் செய்தவர் இம்மன்னர். மக்களது பலவகைத் திறத்தையும் பாங்குற ஆய்ந்து இவர் பயன்படுத்திக் கொண்டார்.

கரிகாலன் குழந்தைப் பருவத்திலேயே தம் பெற்றேரை இழந்து விட்டார். அவர் நாட்டைக் கைப்பற்றப் பலர் சூழ்ச்சி செய்தனர். அவை யாவும் பலிக்கவில்லை. கரிகாலன் தன் வாள் வலியாலும் தோள் வலியாலும் பகைவரை அடக்கி அரசர்க்கு அரசராய் ஆண்டு வரலானர்.

கரிகாலன் காவிரிப்பூம்பட்டினத்தையும் உறையூரையும் தம் தலைநகரங்களாக்கிக்கொண்டார். காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் உள்ள ஒரு நகரம். அங்கே புலவர்களோடு அளவளாவக் கரிகாலன் ஒரு மண்டபம் அமைத்தார். அதனைப் பட்டிமண்டபம் என்பர். உறையூர் ஓர் உள்நாட்டு நகரமாகும். அவ்வூரில் அவர் நீதிமன்றம் ஒன்றை நிறுவினர்; யாவருக்கும் நீதியை வழுவாது உரைக்கும் நெறியை உண்டாக்கினர்.

பண்டைக் காலத்தில் போர்வெறி பிடித்த மன்னர்கள் பலர் இருந்தனர். கரிகாலன் போரைத் துணையாகக் கொண்டு தம் அரசை நிலைக்க வைத்தார். எனினும் அவர் எப்போதும் போரில் ஈடுபடும் தன்மையை வெறுத்தார்; நாட்டை வளம் பெறச்செய்ய எண்ணினர்; நல்ல ஆட்சி இல்லாத

குறையால் நலிவுற்ற சோழநாட்டை வளப்பமுறச் செய்ய நினைத்தார். வானம் பொய்ப்பினும் தான் பொய்யாத தன்மையுடையது காவிரி ஆறு. இதனைத் தனக்கென்று உடையது சோழநாடு. காவிரி குடகு மலையிலிருந்து ஓடி வருகிறது. காவிரி ஆற்றில்வரும் வெள்ளம் காவிரியின் இரு கரைகளையும் அடிக்கடி உடைத்து வந்தது; இதனால் நீர் வீணாகிக் கொண்டிருந்தது. இதனைக் கரிகாலன் கண்ணுற்றார்; நீரைப் பாதுகாத்து அதனைப் பயன்படுத்தும் வழியைக் காண எண்ணினார்; காவிரியின் இரு மருங்கிலும் கரை கட்டினால் நீர் வீணாகாமல் சென்று பயன்படும் என்பதை அறிந்தார்; இதனால் உணவுப் பஞ்சமும் நேராமல் மக்களைக் காக்க இயலும் என்பதை உணர்ந்தார்.

சோழநாட்டு மக்கள் கரிகாலன் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். மேலும் காவிரிக்குக்கரை கட்டுவது தங்கள் நன்மைக்கே என்பதையும் அவர்கள் அறிவார்கள். அதனால் சோழநாட்டுக் காவிரிக்குக் கரைகட்டுவது அவருக்கு எளிதான செயலாகவே இருந்தது. எனினும் கரிகாலன் சோழநாட்டுக்கு அப்பாலுள்ள காவிரிக்கும் கரை கட்டுவதே நல்லதென்று தீர்மானித்தார். அங்கங்கேயுள்ள மன்னர்களுக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார். சிற்றரசர்கள் யாவரும் அவர் கருத்துக்கு உடன்பட்டார்கள். அப்படியே யாவரும் அவருடன் ஒத்துழைக்க, அனைவரும் சேர்ந்து காவிரிக்குக் கரை அமைத்தனர்.

ஒரு மன்னன் மட்டும் கரிகாலன் விருப்பத்திற்கு இணங்கவில்லை. அவன் பெயர் பிரதாபருத்திரன்

என்பது. அவன் உருத்திரன் என்ற மன்னவன் வழி வந்தவன். உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானுக்கு நெற்றியில் கண் உண்டு. அதுபோலவே தனக்கும் உண்டு என்று எண்ணி, அதற்கு அடையாளமாகத் தன் நெற்றியில் அவன் குறி ஒன்றை எழுதிக் கொண்டிருந்தான். அவன் கரிகால் மன்னரை இகழ்ந்து கரைகட்டும் தொண்டில் ஈடுபட மறுத்தான்.

கரிகாலன் அவனைத் திருத்த நினைத்தார். ஓர் ஓவியனை அழைத்து அந்த அரசனைப்போல் ஓர் ஓவியத்தைத் தீட்டச் செய்தார்; நெற்றிக்கண் ஒன்றையும் அந்த ஓவியத்தின் நெற்றியில் எழுதச் செய்தார்; படம் முடிந்த பிறகு நெற்றியில் உள்ள நெற்றிக்கண்ணைத் தம் வேலால் குத்தினார்; அதனை அந்த மன்னனிடத்து அளிக்குமாறு கொடுத்தனுப்பினார்.

உருத்திரன் பிற மன்னர்கள் கரைகட்டியசெய்தியைப் பிறர் சொல்லக் கேட்டான்; தன்னைவிட வல்லமையுள்ள மன்னர்கள் பலர் கரை கட்டிய தன்மையையும் அறிந்தான்; கரிகாலன் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தது சரியானதன்று என்பதை உணரலாயினான். அந்தச் சமயத்தில் கரிகாலன் அனுப்பிய ஓவியம் அவனிடம் வந்து சேர்ந்தது. உருத்திரன் அதனைக் கண்டான்.

"அரசனே, உனக்கு நெற்றியில் கண் முளைத்திருப்பதாக எண்ணி இறுமாப்புக் கொண்டுள்ளாய். நான் கூறியபடி செய்யாமல் போனால் உன் நெற்றிக் கண்ணை என் கைவேல் துளைத்துவிடும் என்பதை

அறிவாய்'' என்ற செய்தியை அப்படம் அவனுக்குக் கூருமல் கூறியது. உடனே அவன் கரைகட்டுவ தாக ஒப்புக் கொண்டான்; கரையையும் கட்டுவித் தான்.

இங்ஙனம் கரிகாலன் கண்ட கனவு நனவு ஆயிற்று. காவிரியின் இரு பக்கத்திலும் கரைகள் கட்டப்பட்டன. ஆற்றில் வரும் வண்டல் சோழ நாட்டை வளப்படுத்தின. மக்கள் உழைப்பாலும் சோழநாடு வளம் பெற்றது. எங்கே பார்த்தாலும் நெல் வயல்கள், நெற்போர்கள். மலைகளே இல்லாத சோழநாட்டில் நெல்மலைகள் காணப்பட்டன. இவற் றிற்கெல்லாம் காரணமாக இருந்தவர் கரைகட்டிய கரிகால் வளவனே அன்றோ?

இம்மன்னன் உதவியால் கரையைப் பெற்று விளங்கிய காவிரியாறு இக்காலத்தில் பல அணை களைத் தன்னிடத்துக் கொண்டுள்ளது. காவிரியில் கட்டப்பட்ட அணைகளுள் ஒன்ருகிய மேட்டூர் அணை இன்றும் சோழநாட்டுக்கு நீரை உதவி வரு கிறது. அவ்வணையில் மின்சக்தி உண்டாக்கப்பட் டுப் பல ஆக்க வேலைகளுக்குப் பயன்பட்டு வருகி றது. இங்ஙனம் விளங்கும் காவிரியை நாம் காவிரி அன்னை என்று கூறுவதில் தவறில்லை.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வளமிக்க | நிறுவினன் | இணங்க | கனவு |
| பாங்குற | வழுவாது | அடையாளம் | நனவு |
| அளவளாவ | ஈடுபடும் | இகழ்ந்து | வண்டல் |
| பட்டிமண்டபம் | நலிவுற்ற | ஓவியன் | ஆக்கம் |
| நீதிமன்றம் | வளப்பமுற | கட்டளை | மின்சாரம் |

## வினாக்கள்

1. கரிகாலன் தம் அரசைக் காத்து வந்தது எப்படி?

2. கரிகாலன் காலத்தில் தலைநகரங்களாக இருந்த ஊர்கள் யாவை? அவை எங்ஙனம் பயன்பட்டன?

3. தம் நாட்டில் கரிகாலன் செய்ய நினைத்த வேலை யாது? ஏன்?

4. கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டியது எப்படி?

5. கரைகட்ட மறுத்தவன் யார்? ஏன்?

6. கரிகாலன் பிரதாபருத்திரனைப் பணிய வைத்தது எப்படி?

7. காவிரிக்குக் கரை கட்டியது எங்ஙனம் சோழ நாட்டுக்கு உதவியாயிருந்தது?

## பயிற்சி

1. சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:—வளமிக்க, அளவளாவ, நலிவுற்ற, வளப்பமுற.

2. எதிர்ச் சொற்கள் எழுதுக:—ஈடுபடும், இழந்து, வழுவாது, கனவு.

3. கரிகாலன் சங்க காலத்து மன்னன். பிறமன்னர்களைப் பற்றிச் சங்க காலக் கதைகளில் படித்துணர்க.

## இலக்கணம்

எழுத்துக்கள் இருவகை: ஒன்று ஒலி எழுத்து. மற்றொன்று வரி எழுத்து. ஒலிக்கப்படுவது ஒலி எழுத்து. ஒலியைக் குறிக்க எழுதுகிறோம். அது வரி எழுத்து.

# 6. மகாபலிபுரம்

நம் தமிழ் நாடு பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு மன்னன் ஆண்டு வந்தான். சங்ககாலத்தில் சேரன், சோழன், பாண்டியன் என்ற மன்னர்கள் தமிழ் நாட்டை மிகச் சிறப்பாக ஆண்டனர். அவர்களுக்குப் பின்னர்த் தமிழ் நாடு பல்லவர்கள் என்ற அரச மரபினர்கள் ஆட்சிக்கு மாறிற்று. அவர்கள் காஞ்சி நகரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். அம்மன்னர்கள் வீரர்கள்; போருக்கு அஞ்சாதவர்கள். அவர்கள் தங்கள் ஆட்சியைக் கடல் கடந்து இலங்கையிலும் ஏற்படுத்தினுர்கள். அவர்களுக்குச் சிறந்த துறைமுகமாக இருந்தது மகாபலிபுரம் ஆகும். இது மகாமல்லபுரம், மாமல்லபுரம், மாமல்லை, மல்லை என்றும் வழங்கப்பெறும்.

பல்லவ மன்னர்கள், ஆட்சிமுறையில் மட்டுமின்றி நுண்கலைகளை ஆர்வத்துடன் வளர்ப்பதிலும் சிறப்புற்றிருந்தார்கள். ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் என்பன போன்றவையே நுண் கலைகள் எனப்படும். கலையுள்ளம் பெற்றவர்களே கலைகளை ஆதரிப்பார்கள். இதனுல், இவர்கள் தங்களாட்சிக்குட்பட்ட தென்னுட்டைக் கலைகளால் சிறந்து விளங்குமாறு செய்தார்கள். சிறப்பாக இவர்கள் செய்த சிற்பத் திருப்பணிகள் இன்றும் மகாபலிபுரத்தைக் கண்டு களிப்புறும் வண்ணம் அமைந்துள்ளன.

இவர்கள் அமைத்த சிற்பங்கள் பலவகைப் படும். அவை குடைவரைக் கோவில்கள், ஒற்றைக்

கற்கோவில்கள், திருச்சுற்றும் விமானமும் கொண்ட கோவில்கள், கதையைக் காட்டும் சிற்பங்கள் முதலியன. அவை யாவும் மிக்க அழகுடையவை.

மலைச்சரிவில் அல்லது பெரும் பாறையில் குடையப்படுவதே குகைக் கோவில் ஆகும். மகாபலிபுரத்தில் மூன்று குகைக் கோவில்கள் இருக்கின்றன. அவை இப்போது மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்று சொல்லப்படுகின்றன. மகிஷாசுர மண்டபத்தில் மகிஷாசுரன் கொல்லப்படுவதைக் காட்டிக் கல்லில் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கிறது. வராக மண்டபத்தில் வராகாவதார வாமனவதாரக் கதைகள் செதுக்கப்பட்டுள்ளன. திரிமூர்த்தி மண்டபத்தில் திரிமூர்த்தியின் சிலைகள் இருக்கின்றன.


சிறு மலைகளைக் கோவில்களின் உருவம் வரு



ஒற்றைக் கல் கோவில்கள்

மாறு செதுக்கியிருப்பதே ஒற்றைக்கல் கோவில்கள் ஆகும். இக்கோவில்களையும் மகாபலிபுரத்தில் காண

லாம். இவை பார்ப்பதற்குத் தேர்கள் போல் தோன்றுகின்றன. அதனுல் மக்கள் அறியாமல் அவற்றைத் தேர்களென்றே சொல்லி வருகின்றனர். இவை ஐந்து. இவை யாவும் ஓரிடத்திலேயே இருப்பதால் இவற்றைப் பஞ்ச பாண்டவர் இரதங்கள் என்று மக்கள் சொல்லுவார்கள். இவற்றுள் தெற்கில் இருப்பது பெரியது. இதனைத் தருமன் இரதம் என்பர். அதற்கு அடுத்து இருப்பது பீமன் தேர். அதனை அடுத்துள்ளது அர்ச்சுனன் தேர். அதற்கு



மாமல்லபுரம்: கடற்கரைக் கோவில்

அருகில் இருப்பது பாஞ்சாலியின் இரதம். எல்லாவற்றிற்கும் மேற்கிலிருப்பது நகுல சகாதேவர் ரதம். இவற்றுள் பீமசேன ரதமும் நகுல சகாதேவ ரதமும் வேலை முடியாமல் இருக்கின்றன.

மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோவில், திருச்சுற்றும் விமானமும் கொண்ட கற்

கோவில்களில் ஒன்ருகும். மேலும் அங்குக் கதைகளைக் குறிப்பிடும் சிற்பங்கள், இருபாறைகள் மீது காணப்படுகின்றன. ஒரு பெரிய பாறைமேல் கண்ணன் மலையைத் தூக்கி மக்களைக் காத்த கதை முழுவதும் செதுக்கப்பட்டுள்ளது. மற்ருெரு பாறை மீது அர்ச்சுனன் தவத்தைப் பற்றிய வரலாறு செதுக்கப்பட்டுள்ளது. இதனை வேறு சிலர் பகீரதன் தவமென்றும் கூறுகின்றனர்.

மகாபலிபுரத்தில் உள்ள சிற்பங்களைப் போலப் பல்லவ மன்னர்கள் தங்கள் நாட்டில் பல விடங்களில் செதுக்கியுள்ளனர். காஞ்சி, திருச்சி, நாமக்கல், திருமயம், குடுமியாமலை முதலிய இடங்களில் கலையழகுமிக்க பல்லவச் சிற்பங்களைக் காணலாம்.

பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் தங்கள் விடுமுறைக் காலங்களை வீணுக்கக்கூடாது. பெற்ருேருடனே ஆசிரியர்களுடனே இன்பச் செலவாக இத்தகைய இடங்களுக்குச் செல்லவேண்டும். சிற்பங்களையும் பிற இயற்கைக் காட்சிகளையும் கண்டு களிக்க வேண்டும். இதனுல் பள்ளியில் படித்தது உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கும்; பெரும் பயனையும் தரும்.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| மரபு | நுண்கலை | குடைவரை | வரலாறு |
| கடந்து | ஓவியம் | திருச்சுற்று | செதுக்க |
| துறைமுகம் | சிற்பம் | விமானம் | முறை |
| வழங்க | கலை | சரிவு | திருப்பணி |

## வினுக்கள்

1. பல்லவர் நம் நாட்டை ஆண்டது எப்போது?
2. பல்லவர்கள் தலைநகர் யாது?
3. அவர்கள் வீரர்கள்—எப்படி?
4. மகாபலிபுரத்தின் வேறு பெயர்களைக் கூறுக.
5. நுண் கலைகள் என்பன யாவை?
6. பல்லவர்கள் கலையுள்ளம் படைத்தவர்--எப்படி?
7. பல்லவர்கள் அமைத்த சிற்பங்களின் வகைகளைக் கூறுக.
8. குகைக் கோவில்கள் என்பன யாவை?
9. ஒற்றைக்கல் கோவில்கள் யாவை?
10. பாண்டவர் இரதங்கள் எங்கெங்கு இருக்கின்றன?
11. வேலை முடியாதிருக்கும் இரதங்கள் யாவை?
12. கடற்கரைக் கோவில் எப்படிப்பட்டது?
13. கதைகளைக் குறிப்பிடும் பாறைகள் யாவை?
14. பல்லவர் சிற்பங்களை எங்கெங்குக் காணலாம்?
15. இன்பச் செலவினுல் ஏற்படும் பயன்கள் யாவை?

## பயிற்சி

1. மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் பார்க்க உங்கள் வகுப்பாசிரியருடன் அவ்வூருக்குச் செல்க.

2. பல்லவ மன்னர்கள் ஒரு சிலருடைய பெயர்களை அறிந்து கொள்க.

3. மகிஷாசுரன், வராகாவதாரம், வாமனுவதாரம், அர்ச்சுனன் தவம், பகீரதன் தவம், கண்ணன் மலை எடுத்தது ஆகிய கதைகளைத் தெரிந்து கொள்க.

4. பஞ்ச பாண்டவர் யார்? பாஞ்சாலி யார்?

5. வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக: ஆதரிப்பர், மாறிற்று, அறிய முடியும், களிக்க.

## இலக்கணம்

தமிழ் எழுத்துக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று முதல் எழுத்துக்கள்; மற்றொன்று சார்பு எழுத்துக்கள். உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டுமாக முப்பது எழுத்துக்கள் முதலெழுத்துக்கள் எனப்படும். சார்பு எழுத்துக்கள் என்பவை உயிர் மெய்யெழுத்துக்களும் ஆய்த எழுத்தும் மற்றும் சில எழுத்துக்களுமாகும்.

# 7. அசோகர்

இயற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் மகத நாட்டை அசோகர் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் மௌரியர் என்ற அரச மரபில் பிறந்தவர். அம்மரபில் முதல் மன்னன் சந்திரகுப்தன். இவன் தன் பகைவரை அழித்தான்; நாட்டைப் பெருக்கினுன்; நிலையான ஆட்சியை அமைத்தான். இவன் ஆட்சியில் மக்கள் சிறந்த கல்வி கேள்விகளைப் பெற்று அமைதியாக வாழ்ந்தார்கள்.

சந்திரகுப்தனின் மகன் பிந்துசாரன். பிந்துசாரன் ஆட்சி செய்த போதே, தன் மகனுன அசோகனை அரசியல் காரியங்களில் பழக்கினுன்; அவனை ஒரு மண்டலத்திற்குத் தலைமை அதிகாரியாக நியமித்தான். இதனுல் அசோகன் மக்களிடம் பழக முடிந்தது. அவர்களின் தேவையை உணர்ந்து நன்மை செய்ய முடிந்தது.



அசோகர்

பிந்துசாரனுக்குப் பின் அசோகர் அரசரானுர். அவர் பட்டத்துக்கு வந்ததும் தம் ஆட்சியைப் பெருக்க விரும்பினுர்; பல நாடுகளின் மேல்


படையெடுத்து வெற்றி பெற்ருர்; அவர் இறுதியாகக் கலிங்க நாட்டின்மீது படையெடுத்தார். கலிங்க மன்னனுக்கும் அசோகருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இரண்டு படைகளிலும் கணக்கற்றவர் மடிந்தனர். எனினும் அசோகரே வெற்றி பெற்ருர்.

போர் முடிந்ததும் அசோகர் போர்க்களத்தைப் பார்வையிடச் சென்ருர். அங்கு அவர் கண்ட காட்சி அவர் மனதைக் கலக்கியது. கணவனே இழந்த கைம்பெண்கள் அழுது அரற்றினர். மக்களை இழந்த பெற்ருேர் மனங் கலங்கி மாண்டவரின் மேல் புரண்டு அழுத வண்ணம் இருந்தனர். கையற்ருேர் பலர்; காலற்ருேர் பலர்; உடல் முழுதும் புண்ணுகி இரத்த வெள்ளத்தில் முழுகியவர் எண்ணற்ருேர். மக்களே யன்றி அங்கு மாண்ட யானைகள் குதிரைகள் ஆகியவற்றிற்கு அளவில்லை. அசோகர் அங்குக் கிடந்த பல்லாயிரம் உயிர்களுக்குத் தாமே எமனுக இருந்ததை உணர்ந்தார்; மனம் மிக வருந்தினுர்; இனிமேல் போரே புரிவதில்லை என்று உறுதி பூண்டார்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்ற முறையைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்தார்.

கலிங்கப் போர் அசோகரது உள்ளத்தை மாற்றியது; அவர் கொல்லா விரதம் பூண்டு புத்த மதத்தைத் தழுவலானுர்; புத்தமதமே மக்களுக்கு நன்மை செய்யத்தக்கது என்பதை நன்கு அறிந்தார்; புத்தர் கொள்கைகளை உலக மெங்கும் பரப்ப வேண்டும் என்ற அவாக் கொண்டார்; தமது நாட்டில் புத்தமதக் கொள்கைகளைச் சாலைகளிலும்

மலைக்குகைகளிலும் கற்றூண்களிலும் செதுக்கி வைத்தார்; இக்கருத்துடன் பலரை இலங்கை, பர்மா, சைனு முதலிய நாடுகளுக்கும் அனுப்பினுர்.

அசோகரின் ஆட்சியில் நாடு நல்ல நிலையில் இருந்தது. மக்கள் அச்ச மின்றி வாழ்ந்தனர். அவர்கள் பலவகை வசதிகளையும் பெற்றனர். எல்லா மதங்களும் சரி நிகர் சமமாக வளர்ந்தன. மடங்கள், பள்ளிகள், கோவில்கள் முதலியன கட்டப்பட்டன. திருட்டு, பொய் என்ற குற்றங்கள் அவரது ஆட்சியில் இல்லாது ஒழிந்தன. உலகில் சமாதானம் நிலவ வேண்டும். போர்கள் கூடா என்ற அடிப்படையில் அவரது ஆட்சி நடைபெற்று வந்தது.



கற்றூணிலுள்ள அசோகர் சக்கரம்

அசோகரது ஆட்சி முறையையே நம் இந்திய அரசாங்கம் பின்பற்றத் தீர்மானித்துள்ளது. இந்தியா உரிமை பெற்றதும் தனக்கேற்ற கொடி ஒன்றை ஏற்றது. அக்கொடியின் இடையில்

நாம் ஒரு சக்கரத்தைக் காணலாம். அது அசோக ரது தர்ம சக்கரமாகும். அசோகர் நட்ட கல் தூண்களில் இதுபோன்ற தர்ம சக்கரங்கள் இருக் கின்றன. அவரது ஆட்சியைப் போற்றிய நம் நாட்டுத் தலைவர்கள் அவரது தர்மசக்கரத்தையே நம் நாட்டுக் கொடியில் பொறித்துள்ளனர். அசோக சக்கரம் அறத்தையும் நம் நாட்டுக்குத் தொன்று தொட்டு இருந்து வரும் பெருமையையும் குறிக் கின்றது.

அசோகர் அரசனாக இருந்தும் எளிய வாழ்க்கை முறையைக் கைக் கொண்டார் ; மக்களை அன்புடன் ஆண்டு வந்தார் ; தம் இறுதிக் காலத் தில் பௌத்த மதத் துறவியானார் ; புகழுடம்பை உல கில் என்றும் நிலவச் செய்து பொன்னுலகு புகுந் தார். இவரை உலகம் என்றென்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| இற்றைக்கு | பெருக்கி | மண்டலம் | கைம்பெண் |
| சற்று | அமைத்து | தேவை | அரற்றினர் |
| ஏறக்குறைய | அமைதி | இறுதியாக | மாண்டவர் |
| மௌரியர் | அரசியல் | பார்வையிட | பூண்டார் |
| தழுவலானார் | அவா | அடிப்படை | பின்பற்ற |

## வினாக்கள்

1. அசோகரது முன்னோர் யார்? அவர் மரபு யாது?
2. அசோகர் அரசியல் பயிற்சி பெற்றது எப்படி?
3. அசோகர் போரிட்டது ஏன்?
4. அவர் போரை வெறுத்தது ஏன்?

5. போர்க்களக் காட்சி எப்படி இருந்தது?

6. கலிங்கப் போர் அசோகர் உள்ளத்தை எப்படி மாற்றியது?

7. அசோகர் ஆட்சியைப் பற்றி வரைக.

8. அசோக சக்கரம் நம் தலைவர்களால் ஏற்கப் பட்டதேன்?

9. கொடியில் உள்ள சக்கரம் எதைக் குறிக்கிறது?

## பயிற்சி

1. நம் நாட்டுக் கொடியைப் பார்த்து வரைக.

2. நம் நாட்டுச் சின்னத்தில் இருப்பவற்றைக் கவனிக்க.

3. அசோகர் ஆட்சியின் பரப்பை, இந்திய வரலாற்று நூலில் உள்ள படத்தில் பார்க்க.

3. வாக்கியங்களில் பயன்படுத்துக: ஏறக்குறைய, அடிப்படை, பின்பற்ற, பார்வையிட.

## இலக்கணம்

உயிரெழுத்து :—உயிர் தனித்து இயங்கவல்லது. அது போலத் தனித்து உச்சரிக்கப்படும் எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் என்று சொல்லப்பட்டன. அவை அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ.

மெய்யெழுத்து :—மெய் என்றால் உடம்பு. உயிரற்ற உடம்பு பிணம். அது இயங்காது. அதுபோல் மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களோடு கூடியே ஒலிக்கப்படுகின்றன. எனவே அவை மெய்யெழுத்துக்கள் எனப்பட்டன. அவை—க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன்.

## 8. நான்கு கோடிகள்

ஔவையார் என்ற கவியரசியார் வாழ்ந்து வந்த காலத்தில் சோழ நாட்டைச் சோழ மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் எல்லாக் கலை களையும் ஐயம் திரிபு அறக் கற்றவன். அவன் அவையில் தமிழ்ப்புலவர்கள் பலர் இருந்து தமிழ் மொழியை ஆராய்ந்து வந்தனர். புலவர்கள் யாவரும் தத்தம் திறமையை வியந்து கர்வம் கொண்டு இருந்தனர்.

சோழ மன்னன் தன் அவைக்களப் புலவர்களது அகந்தையைக் கண்டான்; அவர்களுக்கு நற்புத்தி புகட்ட எண்ணினான். அவர்களை ஒருநாள் அழைத்து, "புலவீர்காள், நீங்கள் நாளைப் பகற் பொழுதுக்குள் நான்கு கோடிப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டு வரவேண்டும்" என்று கட்டளை இட்டான்.

புலவர்கள் அரசன் கருத்தை அறியவில்லை. 'நாளைப் பொழுதிற்குள் நான்கு கோடிப் பாடல்களைப் பாடுவதெப்படி?' என்று எண்ணி நடுங்கினர்; 'இனி நாம் உயிரோடு இருப்பதில் பயனில்லை. இறந்து போவதே ஏற்றது' என்று உன்னி வருந்தினர். அச்சமயம் அவ்வழியே பாவரசியாகிய ஔவையார் வந்தார். அவர் சோழ அரசனைக் காண வந்தவர் ஆவார். அவர் புலவர்களது வாட்டத்தைக் கண்டு, "நீவிர் இங்ஙனம் கவலை அடைவதன் காரணமென்ன?" என்று கேட்டார். புலவர்கள் அரசன் இட்ட கட்டளையைக் கூறித்

தங்கள் தடுமாற்றத்தையும் இயம்பினர். ஔவை யார் சோழன் கருத்தை ஆராய்ந்துணர்ந்தார். “இதற்காகவா வருந்துகிறீர்கள் ? நான் நான்கு கோடிப் பாடல்களையும் பாடித் தருகிறேன்” என்று நவின்றார். உடனே,

1. மதியாதார் முற்றம் மதித்து ஒருக்கால் சென்று மிதியாமை கோடி உறும்.

2. உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடி உறும்.

3. கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம் மோடு கூடுதல் கோடி உறும்.

4. கோடானு கோடி கொடுப்பினும் தம் முடைய நாக் கோடாமை கோடி உறும்.

என்ற பாடல்களைப் பாடினார்.

ஔவையார் தம் நான்கு பாடல்களிலும் ‘கோடி கோடி’ என்ற சொற்களை உபயோகப்படுத்தி நான்கு கோடிப் பாட்டுகளைப் பாடினார். “இவற்றை மன்னனுக்குக் காட்டுங்கள்” என்று கூறி விட்டுச் சென்றார்.

“மதிக்காதவர் வீட்டுக்குச் செல்லாமல் இருப்பது கோடி பொன்னுக்குச் சமம். உபசரித்து உணவு படைக்காதவர்கள் வீட்டில் உண்ணாமல் இருப்பது கோடி பொன்னுக்குச் சமம். கோடி பொன்னை ஈந்தாயினும் சுற்றத்தாருடன் சேர்ந்து கொள்ளல் வேண்டும். அது கோடி பொன்னுக் குச் சமமாக இருக்கும். எவ்வளவு தொகை வருவ தாயினும் ஒருவன் பொய் பேசக் கூடாது. அங்ஙா

னம் இருப்பது கோடி பொன் பெறும்.'' இவையே ஔவையார் இயற்றிய பாடல்களின் கருத்தாகும்.

புலவர்கள் ஔவையாரின் பாடல்களையும் அவற்றின் கருத்துக்களையும் எண்ணி எண்ணி வியந்தனர்; ஔவையாரை வாயார வாழ்த்தினர்; ஔவையார் பெருமையையும், தம் சிறுமையையும் கூர்ந்து நோக்கினர்; ஔவையாரால் தம் தலைகள் தப்பியதை நோக்கி அவருக்கு நன்றி பாராட்டினர்.

மறு நாள் வேந்தன் அவைக்களத்தைப் புலவர்கள் அடைந்தனர். ஔவையார் அருளிய பாக்களை அழகுற எழுதிச் சோழன் முன்னிலையில் வைத்தனர். நான்கு பாக்கள் நான்கு கோடி ஆன விந்தையைக் கண்டான் சோழன். கருத்தை ஊன்றிக் கவனித்தான்; அக மகிழ்ந்தான்; "பாக்களும் பொருளும் நான்கு கோடி மடங்கு உயர்ந்தவை'' என்று நவின்றான்.

புலவர்கள் உண்மையைக் கூறினர். அது கேட்ட சோழ மன்னன் ஔவையாரை அழைத்து அவரைப் பலபடப் பாராட்டினான்; தன்னுடன் பல நாட்கள் அவரை இருத்தினான்; தமிழ் மூதாட்டி கூறிய பல அறிவுரைகளையும் அறவுரைகளையும் கேட்டு மகிழ்ந்தான்; தக்க பரிசுகள் நல்கி அவரை வழியனுப்பினான்.

### அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கவியரசியார் | அகந்தை | வியந்தனர் | அகமகிழ்ந்தான் |
| ஐயம் | ஏற்றது | பாராட்டினர் | அறவுரை |
| திரிபு | பாவரசி | அழகுற | அறிவுரை |
| ஆராய்ந்து | தடுமாற்றம் | ஊன்றி | வழியனுப்பு |

## வினாக்கள்

1. சோழன் அவையில் புலவர்கள் என்ன செய்து வந்தனர்?

2. சோழன் புலவர்களுக்கு இட்ட கட்டளை யாது? கட்டளை இட்டதன் காரணமென்ன?

3. புலவர்கள் வாட்டமடைந்ததேன்?

4. புலவர்கள் ஔவையாரிடம் கூறியது யாது?

5. ஔவையார் இயற்றிய நான்கு கோடிப் பாடல்களையும் கூறுக.

6. நான்கு கோடிப் பாடல்களின் பொருள்களை எழுதுக.

7. ஔவையாரைப் புலவர்கள் எப்படிப் பாராட்டினர்?

8. நான்கு பாடல்கள் நான்கு கோடிப் பாடல்களானதெப்படி?

9. சோழ மன்னன் நான்கு கோடிப் பாடல்களை எப்படிப் பாராட்டினான்?

10. ஔவையாரைச் சோழ மன்னன் எவ்வாறு உபசரித்தான்?

## பயிற்சி

1. இப்பாடத்தில் ஔவையாரைக் குறிக்கும் சொற்றொடர்களைத் தெரிந்தெடுக்க.

2. அகந்தை-இதற்கான வேறு சொல்லைக் கூறுக.

3. வாட்டம், கவலை-வேறுபாடு கூறுக.

4. ஔவையாரின் அறிவுரைகளை அவர் இயற்றிய நூல்களிலிருந்து அறியலாம்; அவரியற்றிய நூல்களை அறிந்து கொள்க.

5. ஔவையாரின் வரலாற்றை உன் ஆசிரியரைக் கேட்டு அறிந்து கொள்க.

## இலக்கணம்

**குறில்** :-குறுகி ஒலிப்பவை குற்றெழுத்துக்கள்.

அவை :-அ-இ-உ-எ-ஒ என ஐந்து.

**நெடில்** :-நீண்டு ஒலிப்பவை நெட்டெழுத்துக்கள்.

அவை: ,-ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என ஏழு.

**சுட்டு**:—பொருள்களைச் சுட்டிக்காட்ட உதவும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள். அவை அ - இ - உ என மூன்று. இவை சுட்டுப் பொருள்களில் வரும் போதே சுட்டெழுத்துக்களாகும்.

அவன் ; இவன் ; உவன்.

அ-தொலைவிலுள்ளவனையும் இ- அருகிலுள்ளவனையும், உ-இடைப்பட்டவனையும் சுட்டிக் காட்ட உதவும்.

**வினா** :-வினாப்பொருளைத் தர உதவும் எழுத்துகள் வினா எழுத்துக்கள். அவை, எ-யா-ஆ-ஓ-ஏ என்ற ஐந்து ஆகும்.

(1) எவன்? ஏது? யார்?—எ-ஏ-யா இவை சொல்லின் முதலில் வந்து வினாப்பொருள் தரும்.

(2) அவனா-(ஆ), அவனோ-(ஓ)--ஆ, ஓ இவை சொல்லின் இறுதியில் வந்து வினாப்பொருள் தரும்.

(3) ஏன்?—(ஏ) திருடனே?-(ஏ) இது சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளைத் தரும்.

——

# 9. தெனுலிராமன்

தெனுலி என்ற ஊரில், இராமன் என்ற பெய ருடன் ஒருவன் இருந்தான். அவன் திறமை வாய்ந்த விகடகவியாக இருந்தான். விகடகவிகளைக் கோமாளிகள் என்றும், விகடர் என்றும் கூறு வதுண்டு. இவர்கள் விகடமாகப் பேசி அரசர்களை மகிழச் செய்வர். பழங்காலத்தில் இத்தகைய விகட கவிகளை அரசர்கள் தம் அரண்மனையிலேயே அமர்த்தி இருப்பர்; அவர்களுடன் அளவளாவி மகிழ்வர்.

விசயநகரத்தைக் கிருஷ்ணதேவராயன் என்ற ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் சபையில் தெனுலி இராமன் விகடகவியாக அமர்ந்திருந்தான். அவன் சமயத்திற்கேற்ற நகைச்சுவை நிரம்பிய செய்திகளைக்கூறி அரசனை நகைச்சுவையில் ஆழும் படி செய்வான். தெனுலி இராமன் மனைவியும் கணவ னுக்கேற்ற காரிகையாக விளங்கினுள். அவளும் மன்னன் மனைவிக்கு நகைச்சுவையை ஊட்டி வந்தாள்.

ஒருநாள் அவர்களுக்குச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்தது. என்ன செய்வதென்று இராமன் தம்பதிகளுக்குப் புரியவில்லை. மனைவி தெனுலி இராமனிடம், "நான் ஒரு வழி செல்லுகிறேன். அதன்படி செய்தால் இன்று நிறையப் பணம் பெற லாம்" என்ருள். என்னவென்று அவன் கேட்க, "நீர் இறந்தது போலக் கிடப்பீராக. நான் அரசியிடம் சென்று பாசாங்குசெய்து பணம் பெற்று வருகிறேன்"

என்று கூறினாள். தெனாலி இராமன் அதற்கிணங் கவே, அவன் மனைவி அரசியிடம் சென்றாள்.

அரசியின் காலில் அவள் திடீரென விழுந் தாள் ; தன் கணவன் இறந்ததாகக் கூறித் தலையை விரித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கலானாள் ; பொய்க் கண்ணீர் வடிக்கலானாள். அவள் அழுகை யையும் ஒப்பாரியையும் கேட்ட அரசி அவளைத் தேற்றினாள். 'கணவனின் சவத்தைச் சிறப்பாக அடக்கம் செய் ' என்று கூறி ஒரு பை நிறையப் பணம் கொடுத்து அனுப்பினாள். தெனாலி இராமன் மனைவி மகிழ்ச்சியுடன் வீடு சேர்ந்தாள்.

தன் மனைவியின் சூழ்ச்சி பலித்ததைக் கண்ட தெனாலி இராமன் தானும் அதைக் கையாள எண் ணினான். அவன் சிறிது நேரம் கழித்து அரசன் கொலுமண்டபத்தை அடைந்தான். கண்டவர் யாவரும் திடுக்கிடும்படி ஒப்பாரி வைத்து அழலா னான் ; மனைவியின் பல்வேறு குணத்தைப் பன்னிப் பன்னிக் கூறினான் ; 'இடிவிழுந்த வீடாயிற்றே' என்று ஏங்கினான். அரசன் தெனாலி இராமன் வருத்தத்திற்குக் காரணத்தை அறிந்து இரக்கம் கொண்டான். 'அவள் உடலைச் சிறப்பாக அடக்கம் செய்' என்று கூறி இரண்டு பைகள் நிறையப் பொன் கொடுத்து அனுப்பினான். நகைச்சுவைத் தம்பதிகள் தாம் செய்த கோமாளித்தனத்தை எண்ணி எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அரசனும் அரசியும் மாலையில் சந்தித்தனர். தெனாலி இராமன் இறந்ததைக்கூறி அரசன் மனைவி துக்கப்பட்டாள் ; தான் அவன் மனைவிக்கு ஒரு பை

பொன் கொடுத்ததைக்கூறினாள். அரசன் திடுக்கிட்டான். தெனாலி இராமன் தன்னிடம் வந்ததையும் இறந்த மனைவியை அடக்கம்செய்யத் தான் இரண்டு பைகள் பொன் நாணயங்களைக் கொடுத்ததையும் கூறினான். பின்னர் இருவரும் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று தீர்மானித்து இருவரும் தெனாலி இராமன் வீட்டிற்குச் சென்றார்கள். அரச தம்பதிகள் வருவதைக்கண்ட நகைச்சுவைத் தம்பதிகள் இறந்தவர்கள் போல் கிடந்தனர்.

அரசன் அவர்களது நிலையைக் கண்டான். உடனே அவன் ஒரு பணப்பையை எடுத்து, "யார் முன்னர் இறந்தாரோ அவரே இப்பணப்பையைப் பெறுவர்" என்று கூறினன். உடனே இருவரும் "நான் முன்னே இறந்தேன், நான் முன்னே இறந்தேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தனர். அதனைப் பார்த்த அரசனும் அரசியும் வயிறு குலுங்கச் சிரித்தனர். "இது நல்ல வேடிக்கை" என்று கூறினர். அப்போது நகைச்சுவைத் தம்பதிகள் அரச தம்பதிகளின் காலில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டினர். அரசனும் அரசியும் அப்பணப்பையை அவர்களுக்கே கொடுத்துவிட்டு வாழ்த்திச் சென்றனர்.

அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| திறமைவாய்ந்த | காரிகை | கொலுமண்டபம் |
| விகடகவி | ஊட்டி | பன்னிப்பன்னி |
| கோமாளி | தம்பதிகள் | இரக்கம் |
| விகடர் | பாசாங்கு | வயிறு குலுங்க |
| அளவளாவி | சம்மதிக்க | வேடிக்கை |
| நகைச்சுவை | ஒப்பாரி | மன்னிக்குமாறு |
| அழும்படி | பொய்க்கண்ணீர் | வாழ்த்தி |
| சூழ்ச்சி | அடக்கம்செய் | கையாள |

### வினுக்கள்

1. விகடகவிகள் என்பவர்கள் யார்? இவர்களுக்குள்ள வேறு பெயர்கள் யாவை?

2. விகடகவி தம்பதிகள் அரசனையும் அரசியையும் எப்படி நகைச்சுவையில் ஆழ்த்தி வந்தனர்?

3. விகடகவி தம்பதிகள் செய்த தந்திரம் யாது?

4. தெனுலி ராமன் மனைவி அரசியிடம் பணம் பெற்றதெப்படி?

5. அரசன் தெனுலிராமனுக்கு ஏன் பொற்பைகளைக் கொடுத்தான்?

6. தெனுலிராமன் தன் மனைவியின் குணங்களை எப்படிக் கூறி அழுதான்?

7. விகடகவி தம்பதிகளின் சூழ்ச்சியை எப்படி அரச தம்பதிகள் அறிந்தனர்?

8. விகடகவி தம்பதிகளின் சூழ்ச்சியைக் கண்டு பிடிக்க அரசன் செய்த சூழ்ச்சி யாது?

### பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:-திறமை வாய்ந்த, சமயத்திற்கேற்ற, பொய்க்கண்ணீர், பன்னிப் பன்னி, வயிறு குலுங்க.

2. இரு பொருள் கூறுக:-நகை, அடக்கம், சந்தி.

3. தெனுலி ராமன் கதைகள் பல இருக்கின்றன. இன்னும் இரண்டு கதைகளை அறிந்துகொள்க.

### இலக்கணம்

மெய்யெழுத்துக்கள் மூன்று வகை. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன.

1. **வல்லினம்** :-க்-ச்-ட்-த்-ப்-ற். இவை வன்மையாக ஒலிப்பதால் வல்லினம் எனப்பட்டன.

2. **மெல்லினம்**:-ங்-ஞ்-ண்-ந்-ம்-ன். இவை மென்மையாக ஒலிப்பதால் மெல்லினம் எனப்பட்டன.

3. **இடையினம்** :-ய்-ர்-ல்-வ்-ழ்-ள். இவை இடைப்பட்ட ஓசையுடன் ஒலிப்பதால் இடையினம் எனப்பட்டன.

இவை வன்கணம், மென்கணம், இடைக்கணம் எனவும் வழங்கப்பெறும்.

# 10. செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு

பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டை ஆண்டவர்கள் மூன்று மன்னர்கள். அவர்கள் சேரன் சோழன் பாண்டியன் என்பவர்களாவார்கள். அவர்களை முடியுடை மன்னர்கள் என்று கூறுவர். அவர்களுள் சேர மன்னர்கள் ஒரு காலத்தில் சிறப் புற்று இருந்தனர். அவர்களுள் ஒருவன் **சேரன் செங்குட்டுவன்.**

செங்குட்டுவனின் தந்தை பெயர் நெடுஞ்சேர லாதன். அவனது தம்பி **இளங்கோ.** இவர் நெஞ்சைக் கவரும் **சிலப்பதிகாரம்** என்னும் காவியத்தைப் பாடிய கவிஞர் ஆவார். இவர் இளமையிலேயே அரச பதவியை வெறுத்துத் துறவு பூண்டார்.

செங்குட்டுவன் ஒரு வெற்றி வீரன். அவன் இளமையிலேயே ஒரு முறை வடநாடு சென்று ஆரிய அரசர்கள் பலரை வென்றான். வெற்றிக் கொடி நட்டுத் தன்னாடு மீண்டான்; இமயம் முதல் குமரி வரையுள்ள அரசர்கள் யாவரையும் வென்றான். இதனால் இவன் தன்னிகர் அற்றுப் பேரரசனாய்த் திகழ்ந்தான்.

அக்காலத்தில்தான் கோவலன் பாண்டிய மன்னனால் கள்வனெனக் கருதப்பட்டுக் கொல்லப் பட்டான். அவனது கற்பிற் சிறந்த மனைவியாகிய கண்ணகி மதுரையை எரித்து விட்டுச் சேரநாடு புகுந்தாள். அவள் சேர நாட்டில் செங்குன்றத்தின் மேல் இருந்த வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள்.

பதினுன்கு நாட்களுக்குப் பின்னர், கோவலன் ஒரு விமானத்தில் வந்து கண்ணகியைத் தன்னுடன் ஏற்றிச் சென்ருன். இக் காட்சியை மலைவாழ் வேடர்கள் கண்டனர்; பெருவியப்புக் கொண்டனர்.

அப்பொழுது சேரன் செங்குட்டுவன் தன் சுற்றத்துடன் மலைவளம் காண வந்திருந்தான். வேடர்கள் தாம் கண்ட வியப்புக்குரிய செய்தியை மன்னனிடம் கூறினர். அவ்விடம் இருந்த மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்ற புலவர், கோவலன் கண்ணகி வரலாற்றைச் செங்குட்டுவனுக்கு விரிவாகக் கூறினர். சேரன் செங்குட்டுவன் உள்ளத்தில் கண்ணகியினுடைய கற்பின் பெருமை பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகிக்குக் கோவில் கட்டிப் பெருஞ் சிறப்புச் செய்ய வேண்டுமென்று அவன் விரும்பினன்.

சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குப் படிமம் செய்து வழிபட எண்ணினன்; அதற்கென இமய மலையிலிருந்து கல் கொண்டுவர விரும்பினன்; தன் தலைநகரை அடைந்தவுடன், தன் வட நாட்டுச் செலவைத் தன் மக்களிடம் பறையறைந்து தெரிவித்தான். அவ்வமயம் வடநாட்டிலிருந்து வந்த இரு முனிவர்கள் செங்குட்டுவன் சபையை அடைந்தனர்; செங்குட்டுவனை வாழ்த்தினர். அவர்களைச் செங்குட்டுவன் நல்ல முறையில் வரவேற்ருன். அவர்கள் செங்குட்டுவனைப் பார்த்து, "மன்னர் மன்ன, கனகன் விசயன் என்ற இரு வடநாட்டு மன்னர்கள் தென்னுட்டவர் வீரத்தை இகழ்ந்து

பேசினர். அவர்களை நீ வென்று வரவேண்டும்'' என்று கூறி வாழ்த்தினர்.

செங்குட்டுவன் அவ்வுரையைக் கேட்டு அளவு கடந்த சீற்றத்தை அடைந்தான்; அவர்களை வென்று அவர்கள் தலையில் கண்ணகியின் சிலைக்கான கல்லை ஏற்றி வருவதாக வஞ்சினம் கூறினான்.

குறித்த நாளில் சேரனது பெரும்படை புறப்பட்டது. படையைக் கண்ட பகை மன்னர் பலர் செங்குட்டுவனுக்கு அடங்கிக் கப்பம் கட்டி நண்பராகிப் பிழைத்தனர். பலர் படை திரட்டி வந்து செங்குட்டுவனுடன் போரிட்டுத் தோற்றனர். செங்குட்டுவனை இகழ்ந்த கனகனும் விசயனும் பெரும் படையோடு வந்து செங்குட்டுவனுடன் போரிட்டனர்: செங்குட்டுவன் அவர் படைகளைக் கொன்று குவித்து அவர்களையும் சிறைபிடித்தான்.

செங்குட்டுவனது ஆணைப்படி பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய கல்லொன்று இமய மலையிலிருந்து கொண்டுவரப்பட்டது. அதனை அந்த இரண்டு அரசர்களே சுமந்து வந்தனர். செங்குட்டுவன் அதனைக் கங்கையாற்றில் நீராட்டினான்; பின்னர் அதனைத் தன் நாட்டிற்குச் சுமந்து கொண்டு வரச் செய்தான். கனகனும் விசயனும் அதனை முடிமேல் சுமந்து வந்தனர்.

பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குச் செங்குட்டுவன் கோவில் ஒன்றினைக் கட்டினான்; நன்னாளில் விழா எடுத்தான். பல நாட்டு மன்னர்களுக்கு அழைப்பு விடுத்தான்; விழாவில் பத்தினிக்

கடவுள் தோன்றி யாவருக்கும் ஆசியளித்தாள்; அறவுரையும் பகர்ந்தாள்.

சேர மன்னன் தன் வீரருக்குப் பட்டமும் பதவியும் அளித்தான்; பலருக்குப் பரிசுகளும் ஈந்தான்; போரில் இறந்தவர்தம் மைந்தருக்கும் மனைவியருக்கும் தேறுதல் கூறி ஆறுதலளித்தான். இங்ஙனம் செங்குட்டுவன் இரண்டாம் முறை சென்ற வட நாட்டுச் செலவு யாவராலும் புகழத் தக்கதாயிருந்தது.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கவரும் | விமானம் | படிமம் | வஞ்சினம் |
| காவியம் | விண்ணகம் | வழிபட | கப்பம் |
| இமயம் | வியப்பு | அளவு | குவித்து |
| குமரி | கூலம் | கடந்த | அழைப்பு |
| தன்னிகர் | பதிந்தது | சீற்றம் | தேறுதல் |

73
03.6.55
N.80

## வினாக்கள்

1. சேரன் செங்குட்டுவன் யார்? அவன் வரலாற்றைக் கூறுக.

2. செங்குட்டுவன் தன்னிகரின்றித் திகழக் காரணம் யாது?

3. வேடர்கள் பெரு வியப்புக் கொள்ளக் காரணம் என்ன?

4. செங்குட்டுவனுக்குக் கண்ணகி வரலாற்றைக் கூறியது யார்?

5. செங்குட்டுவன் வீரம் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

6. இமயமலையிலிருந்து படிமத்துக்குரிய கல்லைக் கொண்டு வந்தவன் யார்? எங்ஙனம்?

139725
600 008.

7. பத்தினிக் கடவுள் தோன்றி மறைந்த வரலாற்றைக் கூறுக.

8. சேர மன்னன் தன் படைகளுக்குச் சிறப்புச் செய்தது எங்ஙனம்?

## பயிற்சி

1. வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:—பெருவியப்பு, தன்னிகர், வழிபட, வஞ்சினம்.

2. பசுமரத்தாணி போல்—இது போன்ற சொற்றொடர்களை அறிந்து கொள்க.

## இலக்கணம்

**உயிர்மெய் எழுத்துக்கள்** :—க்+அ=க. உயிரும் மெய்யும் சேர்ந்து பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்து. மெய் முன்னும் உயிர் பின்னுமாக உயிர்மெய் எழுத்துத் தோன்றும். பதினெட்டு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிருடன் தனித்தனிச் சேர, உயிர் மெய்யெழுத்துக்கள் (18+12=216) இருநூற்றுப்பதினாறு ஆகின்றன.

———

# 11. வானூர்தி

வானூர்தி என்பது வானத்தில் பயணம் செய்யப் பயன்படும் சாதனமாகும். இதை ஆகாய விமானம் என்றும் கூறுவர். இதனைப்பற்றி நம் நாட்டு இலக்கியங்களும் கூறுகின்றன. நம் இதிகாசங்களில் ஒன்ருன இராமாயணத்திலும், ஐம் பெருங் காவியங்களில் ஒன்ருன சீவக சிந்தாமணியிலும், எட்டுத் தொகை நூல்களில் ஒன்ருன புறநானூற்றிலும் இதனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

வானூர்தி ஒரு நாளில் உண்டாகி விடவில்லை. அதனை ஒருவரே கண்டுபிடித்துவிடவும் இல்லை. அதற்கு எண்ணற்ற அறிஞர்கள் தொண்டு செய்துள்ளனர். தங்கள் வாழ்நாளையே அதன்கண் கழித்தவர் பலர். பொருளையும் பெறுவதற்கரிய உயிரையும் இழந்தவர்களும் உளர். பலர் செய்த பலவகைத் தியாகங்களால் உண்டானது, நாம் இன்று வான வெளியில் காணும் வான ஊர்தி.

வானவூர்திக்கான அடிப்படையைக் கண்டவர்கள் **ரைட் சகோதரர்கள்** ஆவர். ஒருவர் பெயர் **ஆர்வில் ரைட்**. மற்றவர் பெயர் **வில்பர் ரைட்**. வில்பர் ரைட் மூத்தவர். ஆர்வில் ரைட் இளையவர். அவர்கள் பள்ளியில் சேர்ந்து படிப்பதில் மிகுந்த ஊக்கம் காட்டவில்லை ; இளமையிலிருந்தே இயந்திரங்கள் வேலை செய்வதைப் பார்ப்பதில் தம் காலத்தைக் கழித்து வந்தனர். ஒரு முறை அவர்கள் தந்தை அவர்களுக்குக் கொடுத்த விளையாட்

டுக் கருவியே அவர்களை விமானத்தைக் கண்டு பிடிக்கும் அரிய பணியில் புகுத்தியது.


இருவரும் விடா முயற்சி கொண்டவர்கள். இளமையிலேயே தொழில் செய்து தங்களுக்கு வேண்டிய சிறு செலவுகளுக்குப் பணம் தேடலாயினர். வானில் பறக்கவிடும் பட்டங்கள் பலவற்றைச் செய்து பொருளீட்டினர். அங்ஙனம் செய்து வருங்கால் பற்பல புதிய முறைகளைக் கையாண்டு வந்தனர். நாளடைவில் விஞ்ஞான நூல்களையும் சஞ்சிகைகளையும் படிக்கலாயினர். அவற்றைக் கொண்டு வானில் பறக்கும் விமானத்தைக் காண ஆராய்ந்தனர். ஆனால் அவை பயன்படவில்லை.

ரைட் சகோதரர்கள் தம் நேரம் முழுவதையும் விமானக் கண்டுபிடிப்பில் செலவழிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை அவர்கள் ஈட்ட வேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் இளம் பருவத்திலேயே ஒரு செய்தித்தாளை நடத்தலாயினர். செய்தித் தாளுக்கான எல்லாத் தொழில்களையும் அவர்களே ஏற்று நடத்தினர். எனினும் அவர்களுக்கு நல்ல வருவாய் இல்லாமற் போயிற்று. எனவே அவர்கள் செய்தித் தாளை விடுத்து வேறொரு தொழிலை நாடலாயினர்.

அப்பொழுது மிதிவண்டி (சைக்கிள்) கண்டு பிடிக்கப்பட்டு அதில் வாணிகம் நடைபெற்று வந்தது. அந்த வாணிகம் பெருவருவாய் அளிப்பதைக் கண்டு அவர்கள் அத்தொழிலைச் செய்யத் தொடங்கினர். எதிர் நோக்கிய வண்ணம் அது அவர்களுக்குச் செல்வம் ஈட்டித் தந்தது. வாழ்க்

கைக்குச் செலவழிந்தது போக, எஞ்சியதைத் அவர்கள் தம் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தினர்.

இறுதியில் அவர்களுடைய ஆராய்ச்சி நற் பயனை அளித்தது. கி.பி. 1903-ஆம் ஆண்டு அவர் களது விமானம் பறக்கத் தொடங்கியது. அது மிகக் குறைந்த தொலைவே சென்றது. மீண்டும் ஆராய்ச்சிகள் நடந்தன. பல தோல்விகளுக்குப்



இன்றுள்ள விரைவு மிக்க வானூர்திகள்

பின் இறுதியில் வெற்றி கிடைத்தது. வில்பர் ரைட் 1908-ஆம் ஆண்டு தம் விமானத்தில் பிரான்சு நாட் டிற்குப் பறந்து சென்றார். அது இடையே எங்கும் நிற்காமல் பல கற்கள் பறந்து சென்றது. விமானம் பறக்கும் தொழிலைப் பற்றி அதுவரை எவரும் அறி யாதிருந்தனர். எனவே, மக்கள் யாவரும் வியப்பில் ஆழ்ந்து ரைட் சகோதரர்களைப் போற்றலாயினர்.

ரைட் சகோதரருக்குப்பின், பலர் ஒருவர் பின் ஒருவராக விமானத்தொழிலில் இறங்கினர். படிப்படி யாக வானூர்தி செம்மையாக்கப்பட்டது. உருவம்,

பறக்கும் வேகம், பயன்படும் விதம் ஆகியவற்றில் முன்னேற்றமடைந்தது. இப்போது வேலைக்கு ஏற்றாற்போல விமானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதனில் செல்வோருக்குப் பற்பல வசதிகள் அளிக்கப்படுகின்றன.

வானூர்தி மக்களுக்குச் செய்யும் தொண்டுகள் அளவில. இது உலகத்தைச் சிறிதாக்கி விட்டது; குறைந்த நேரத்தில் நெடுந் தொலைவு செல்ல இது பயன்படுகின்றது; அஞ்சல் எடுத்துச் செல்லுகின்றது; உணவு கொண்டு சென்று துன்பத்திலாழ்ந்தவர்களைக் கைதூக்கிக் காக்கின்றது; போர்க் காலத்தில் வானூர்தி ஆற்றும் உதவி அளவிடற்கரியது. இனி வரும் சில ஆண்டுகளுக்குள், சந்திர உலகம் செல்லவும் இது பயன்படலாமல்லவா?

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| சாதனம் | குறிப்புகள் | வானவெளி |
| விஞ்ஞானம் | மிதிவண்டி | இலக்கியம் |
| எண்ணற்ற | அரியபணி | சஞ்சிகை |
| நற்பயன் | இதிகாசம் | அறிஞர்கள் |
| விடாமுயற்சி | ஈட்ட | கையாண்டு |
| காப்பியம் | வாணாள் | புறநானூறு |
| ஏற்று | படிப்படியாக | வருவாய் |
| தியாகம் | நாளடைவில் | அளவில் |

## வினாக்கள்

1. வானூர்தியைப்பற்றிய குறிப்புகள் எவ்வெந்நூல்களில் காணப்படுகின்றன?

2. வானூர்தியைக் கண்டவர்கள் எவர்?

3. ரைட் சகோதரர்கள் இளமையில் எப்படி இருந் தனர் ?

4. ரைட் சகோதரர்கள் செய்த தொழில்கள் யாவை ?

5. ரைட் சகோதரர்களின் முதல் விமானம் பறந்தது எப்படி ?

6. இப்போது ஆகாயவிமானங்கள் எங்ஙனம் உள் ளன ?

7. வானூர்தி எங்ஙனம் பயன்படுகின்றது ?

## பயிற்சி

1. இராமாயணத்தில் உள்ள வானூர்தியின் குறிப்பை அறிந்து கொள்க.

2. ஐம்பெருங் காவியங்கள் எவையெனத் தெரிந்து கொள்க.

3. வாழ் + நாள் = வாணாள். இது போன்ற சொற் களைக் கண்டுபிடிக்க.

4. எண்ணற்ற, வானவெளி, அரியபணி, விடா முயற்சி, நாளடைவில், படிப்படியாக—இவற்றை வாக்கி யங்களில் உபயோகப்படுத்துக.

5. சந்திர உலகத்தைப் பற்றிய செய்தியை உன் ஆசிரியரைக் கேட்டு அறிந்து கொள்க.

## இலக்கணம்

ஆய்த எழுத்து:—இஃது—ஃ இது ஆய்த எழுத்து. இது மூன்று புள்ளி வடிவமாக எழுதப்படுவது. பழங்கால ஆயுதம் ஒன்று இங்ஙனம் இருந்ததால் இது இப்பெயர் பெற்றது. இது குற்றெழுத்திற்கும் வல்லின உயிர் மெய்க்கும் இடையில் வருவது.

இந்த எழுத்தைக் கொண்டு இப்போது பிறநாட்டு ஒலிகளைக்கூட எழுதிவிடலாம். இதனை உமது 14-ஆம் பாடத்தில் கண்டு அறிக.



———

# 12. பாரி வள்ளல்

கேட்டதைக் கேட்டோர்க்கு இல்லையென்னாது கொடுப்பவர்கள் வள்ளல்கள் எனப்படுவர். நம் தமிழ் நாட்டில் எக்காலத்தும் வள்ளல்களுக்குக் குறைவில்லை. நமது பண்டை நூல்கள் ஏழு வள் ளல்களைச் சிறப்பித்துக் கூறுகின்றன. அவர்கள் கடையெழு வள்ளல்கள் என்று வழங்கப் பெறுவர். அவர்களில் ஒருவன் பாரி வள்ளல்.

பறம்பு என்பது ஒரு மலை. அதைச் சூழ்ந்துள்ள நாட்டைப் பறம்பு நாடு என்று வழங்கி வந்தனர். பாரி மன்னன் அம்மலையின் மேல் கோட்டைக் கொத்தளங்கள் அடங்கிய அரண்மனை ஒன்றைக் கட்டி, அதில் வாழ்ந்து வந்தான். ;அங்கிருந்து பறம்பு நாட்டிலிருந்த முந்நூறு ஊர்களையும் செவ் வனே ஆண்டுவந்தான்.

பாரி ஒரு வள்ளல் என்று சொன்னோமல்லவா? தன்னிடம் வருபவர் எவராக இருந்தாலும் அவர் வேண்டியதை வேண்டியபடியே அவன் ஈவான். கொடுப்பதில் அவனிடம் வேற்றுமையில்லை. கொடை யைப் போலவே, அவன் போர் செய்தலிலும் வீரம் மிக்கவன். போரில் அவனை வெல்ல ஒருவராலும் முடியாது. எனவே அவனை அக்காலப் புலவர்கள் 'பாரி கொடை வீரமும் படை வீரமும் பெற்றவன்' என்று புகழ்ந்தார்கள்.

ஒரு நாள் பாரி மலைவளங் காணும் பொருட்டுத் தன் தேர் மேல் ஏறிச் சென்றான். அங்குப் பல மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. மரங்களின் மேல் குரங்குகள் தாவிக் குதித்துக் கொண்டிருந்தன.

ஒரு சில கருங்குரங்குகள் பலாப் பழத்தைப் பிய்த்து அதன் சுளைகளைத் தம் குட்டிகளுக்கும் மந்திகளுக்கும் ஊட்டிக் கொண்டிருந்தன. மற்ெருரு புறத்தில் மான்கள் களிப்புடன் துள்ளித் திரிந்தன. மலைகளின் மேலுள்ள பாறைகளின் மீது மயில்கள் ஆடிக் கொண்டிருந்தன. குயில்கள் கூவிய வண்ணம் பறந்து மகிழ்ந்தன. மலையருவிகள் 'சோ' என்று இரைச்சலிட்டுக் குயில்களின் பாட்டுக்குத் தாளம் போட்டு வருவது போல் பாய்ந்து கொண்டிருந்தன. மலையின் எல்லாப்புறத்திலும் மல்லிகை, முல்லை, இருவாட்சி மலர்கள் மலர்ந்து, நறுமணத்தை வீசிக் கொண்டிருந்தன.

மன்னன் இத்தகைய மலை வளத்தைக் கண்ணுற்று வருங்காலத்தில், ஓர் இளங்கொடி படர் கொம்பு இல்லாமல் வாடுவதைக் கண்டான். அது ஒரு முல்லைக் கொடி ; தளிர்கள் நிரம்பியது ; அரும்புகளைக் கொண்டது; படர்வதற்கு ஏற்ற கொள்கொம்பு இல்லாததால் காற்றில் தவிப்பது போல் காணப்பட்டது. அதனருகில் பாரியின் தேர் சென்றபோது, அது காற்றில் ஆடி அசைந்து கொண்டிருந்தது. இரவலன் உள்ளத்தைப் புரவலன்தானே அறிய முடியும்! எனவே அது, "அரசே, உன் நாட்டில் எல்லோரும் மகிழ்வுடன் இருக்க, தழுவிப் படரக் கொம்பில்லாது நான் மட்டும் தவிக்கலாமா?" என்று இரப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன் தன் தேரிலிருந்து இறங்கினான்; தன் தேரை அதனிடத்து விட்டு, அதனை எடுத்து அத்தேர் மேல் படர விட்டுக் குதிரைகளையும் பூட்

டவிழ்த்து விட்டான்; கால் நடையாய்த் தன் அரண்மனையை அடைந்தான். அரசன் தன் அரண்மனைக்குச் சென்று அக் கொடிக்கு ஒரு கொள் கொம்பை அனுப்பலா மல்லவா? அங்ஙனம் செய்ய அவன் மனம் ஒருப்பட வில்லை. தன் நாட்டில் உள்ள அஃறிணைப் பொருட்களும் அவதிப் படக் கூடாவென்பது அவன் எண்ணம். எனவே, அவன் தன் கடமையில் சிறிதும் காலந் தாழ்க்க விரும்ப வில்லை. இதுவே அவனுடைய கொடை வீரம்.



பாரி முல்லைக் கொடியைத் தேர்மீது படர விடுதல்

இனி அவனது படை வீரத்தைக் காண்போம். பாரிக்கு இரண்டு பெண் மக்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் கல்வி கேள்விகளில் இணையற்று விளங்கினர்; அழகில் ஒப்பு உவமை அற்று விளங்கினர்.

சேர, சோழ, பாண்டியராகிய தமிழ் நாட்டு முடியுடை மன்னர்கள் மூவரும் பாரியிடம் சென்று பெண் கேட்டனர். பாரி அவர்களுக்குப் பெண் கொடுக்க மறுத்தான். உடனே மூவேந்தர்களும் வெகுண்டு பாரியின் கோட்டையை முற்றுகையிட்டுப் போர் தொடுத்தனர். நெடுநாட்கள் வரை

போர் நடந்தது. ஒருவருக்கும் வெற்றி கிட்டவில்லை. ஆனால் பாரியின் கோட்டைக்குள் உணவுப்பொருட்குப் பஞ்சம் வரவில்லை. காரணம் என்ன ?

பாரியின் நண்பர் கபிலர். அவர் ஒரு சிறந்த புலவர். அவர் பல கிளிகளை வளர்த்து வந்தார். அவர் அவைகளை வெளியே பறக்கவிட்டு நெற்கதிர்களைக் கொண்டு வரவும் பழக்கி வைத்திருந்தார். இவ்விதம் கிடைத்த உணவை உண்டு, பாரியின் படைகள் நீண்ட நாட்கள் சலியாது போர் புரிந்து வந்தன.

கபிலர் ஒரு நாள் மூவேந்தரையும் கண்டார். அவர், “அரசர்களே, நீங்கள் எத்துணைக் காலம் முற்றுகை யிட்டாலும் பாரியை வெல்ல முடியாது. ஏனெனில், அவன் நாடு இயற்கை வளமுடையது. இயற்கைப் பொருள்கள் அவனுக்கு உதவி, ஊக்கமூட்டுகின்றன. நீவிர் அவனை வெல்ல வேண்டுமெனில், ஒரே ஒரு வழிதான் உண்டு; நீங்கள் இரவலர்போல, அவன் எதிரில் சென்று இரப்பீர்களானல், அவன் தன் உயிரையும் கொடுக்கப் பின் வாங்க மாட்டான்” என்றார். இதனைக் கேட்ட மன்னர்கள் நாணமுற்றனர் ; பின்னும் பல நாட்கள் போர் புரிந்தனர்; வெற்றியடையாததால் இரவலர் போல் பாரியிடம் சென்றனர். கொடுப்பதில் பாரி குருடனுகையால் இரவலர்களாகச் சென்ற மன்னரை அவன் வரவேற்று முகமன்கூறி இன்னுரை பகர்ந்தான். இதுதான் தக்க வாய்ப்பு என்று எண்ணிய மூவேந்தர்கள் பாரியை வஞ்சனையால் கொன்று தம் பகைமையைத் தீர்த்துக்கொண்டனர்.

நண்பனை இழந்த கபிலர் அடைந்த கலக்கத்திற்கு அளவில்லை. செய்வதறியாது திகைத்தார்; தாமும் உயிர் நீத்துப் பாரியை அடைய எண்ணினர். ஆனல், பெற்ரேரை இழந்த பாரியின் மக்களைப் பாதுகாப்பது அவர் கடமையாயிற்று. அவர்களுக்கு ஆறுதல் கூற, அவர் உயிர் வாழ வேண்டியதாயிற்று.

கபிலர் பாரியின் மக்களுக்குத் தேறுதல் கூறித் தம்முடன் அழைத்துச் சென்ருர்; அவர்களுக்குத் தக்க இடத்தில் மணமுடிக்க எண்ணினர்; குறுநில மன்னர்கள் பலரை அடைந்து வேண்டினர். ஆனல் அவர்களில் ஒருவரும் பாரியின் மக்களை மணக்க விரும்பவில்லை. முடிமன்னர்கள் மூவரும் தம் மேல் படையெடுப்பர் என்னும் அச்சமே அதற்குக் காரணமாக இருந்தது. தம் முயற்சி ஈடேருமல் போகவே, கபிலர் பாரியின் மக்களை ஒளவை வசம் அடைக்கலமாக விட்டு, எரியில் மூழ்கி உயிர்துறந்தார்.

ஒளவையார் பாரி மகளிரின் பெருமையை உணர்ந்தார்; குடிப்பிறப்பின் மேன்மையைப் போற்றிப் புகழ்ந்தார். அவர் தம் செல்வாக்கினல் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார். இத் திருமணத்திற்கு முடியுடைய மன்னர் மூவரும் வந்திருந்தார்களென்ருல் ஒளவையின் பெருமை அளவிட இயலுமோ?

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| பறம்பு | கொடை | கொத்தளம் |
| இரப்பது | வெகுண்டு | முற்றுகை |
| பிய்ந்து | கொள்கொம்பு | தவிப்பது |

| | | |
|---|---|---|
| செவ்வனே | களிப்பு | வேற்றுமை |
| ஒருப்படவில்லை | திகைத்தான் | அவதிப்பட |
| கண்ணுற்று | இரவலன் | புரவலன் |
| சலியாது | இளங்கொடி | ஈடேருமல் |
| இணையற்று | கலக்கம் | அடைக்கலம் |

## வினுக்கள்

1. வள்ளல் என்பவன் யார்?
2. பாரி வள்ளல் எங்கிருந்தான்?
3. பாரியைப் புலவர்கள் புகழ்வதெப்படி?
4. பாரி நாட்டு மலைவளத்தைப்பற்றி வரைக.
5. பாரியின் முன் தோன்றிய இரவலன் யார்? அவன் பெற்ற துன்பம் யாது?
6. பாரி முல்லைக்குச் செய்த உதவி யாது?
7. பாரியின் கொடை வீரத்திற்கு உதாரணம் கூறுக.
8. முடியுடை மன்னர் பாரியின் மேல் படை எடுத்ததேன்?
9. கபிலர் போர்க்களத்தில் பாரிக்கு உதவிய தெங்ஙனம்?
10. முடியுடை மன்னருக்குக் கபிலர் வழங்கிய அறிவுரை யாது?
11. பாரியை முடியுடை மன்னர் வென்றது எப்படி?
12. கபிலர் பாரியின் உண்மை நண்பர் என்பது எப்படி அறியலாம்?
13. ஔவை பாரி மக்களுக்கு உதவியதெப்படி?

## பயிற்சி

1. கொள் கொம்பு, கண்ணுற்று, அவதிப்பட, இணையற்று, வெகுண்டு, சலியாது—வாக்கியங்களில் பயன் படுத்துக,
2. கடையெழு வள்ளல்களை அறிந்து கொள்க.
3. கொடைமடம்—என்பது என்ன?
4. இரப்பது-இறப்பது, வேறுபாடு தெரிந்துகொள்க.
5. இரவலன் — புரவலன் — எவரெவர்?

## இலக்கணம்

(1) ர, ற—இவற்றின் வேறுபாடுகளை அறிந்து கொள்க.

(2) ல, ள, ழ—இவை ஒலியாலும் பொருளாலும் வேறுபடுகின்றன.

(3) ந, ன, ண—உச்சரித்து அறி. பொருள் வேறு பாட்டைக் கீழே காண்க:

(1) அரம் - ஒரு கருவி
அறம் - தருமம்
அரை - பாதி
அறை - அடி
இர - பிச்சையெடு
இற - சா
இரை - விலங்கு உணவு
இறை - கடவுள்

(2) இலை - இலை
இளை - மெலி
இழை - நூல்
ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம்
ஒழி - கெடு
தலை - உறுப்பு
தளை—கட்டு
தழை - இலை

(3) அண்ணம் - மேல்வாய்
அன்னம் - ஒரு பறவை
கணி - கணக்கிடு
கனி - பழம்
பாணம் - அம்பு
பானம் - குடிவகை
மண் - நிலம்
மன் - பெருமை

# 13. செய்தித்தாள்கள்

உலகத்தின் பற்பல பாகங்களிலும் நடக்கும் நிகழ்ச்சிகள் நமக்கு எங்ஙனம் தெரிய வருகின்றன ? அவற்றைச் செய்தித்தாள்கள் மூலமாகவே நாம் அறிகிறோம். இவை பல வகைப்படும். அன்றாடம் வெளிவருவனவற்றை **நாள் செய்தித்தாள்கள்** என்று கூறுவர். வாரத்திற்கு ஒருமுறை வெளிவருவன வற்றை **வாரத்தாள்கள்** என்று கூறுவர். மாதத்திற்கு ஒரு முறை வெளி வருவனவற்றை **மாதத்தாள்கள்** என்பர்.

நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் வெளி யாகும் செய்தித்தாள்கள் பல. தினமணி, சுதேச மித்திரன், நம்நாடு, தினத்தந்தி. தமிழ் நாடு, விடு தலை போன்றவை நாள் செய்தித்தாள்கள். ஆனந்த விகடன், கல்கி, தென்றல், முரசொலி, கற்கண்டு முதலியவை வாரத் தாள்களில் சில. கலைமகள், கலைக்கதிர், செந்தமிழ்ச் செல்வி, ஆனந்த போதினி போன்றவை மாதத்தாள் களில் ஒரு சில.

நாள் செய்தித்தாள்கள் நமக்கு அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகள் பலவற்றை வெளியிட்டுதவு கின்றன ; வெளி நாட்டுச்செய்திகள், நம் நாட்டு அரசியல் செய்திகள், பொருள்களின் விலைகள், விளம்பரங்கள், புகை வண்டிகளின் கால அட்ட வணைகள் ஆகியவற்றைக் கூறுகின்றன. மேலும் நாட்டில் பல விடங்களில் நடக்கும் கொலை, களவு முதலியவற்றையும் வெளியிடுகின்றன.

வாரத்தாள்களும், மாதத்தாள்களும் செய்திகளைச் சுருக்கமாகவே சொல்லும். அவை பலவகைக் கதைகள், கட்டுரைகள், நூல்களின் மதிப்புரைகள், அறிஞர்களின் எழுத்தோவியங்கள் ஆகியவற்றை வெளியிடும்; மேலும் கண்கவர் ஓவியங்களைக் கொண்டு மிளிரும். அவை நமக்கு நல்ல பொழுது போக்காக அமைவதோடு நமது அறிவினையும் வளர்க்குமாறு இருக்கும்.

நாம் செய்தித்தாள்களைப் படிக்கவேண்டும். செய்தித்தாள்கள் நமக்கு அறிவை ஊட்டுகின்றன; அறியாமையைப் போக்குகின்றன; கிணற்றுத்தவளை போல் இருக்கும் தன்மையை நீக்குகின்றன. அன்ருட உலகச் செய்திகள், பயிர்த்தொழில் பற்றிய விவரங்கள், அரசியல் விவரங்கள், கல்வியைப் பற்றிய செய்திகள், நமது நாட்டின் பிற பகுதிகளில் நடக்கும் காரியங்கள் ஆகியவற்றைப் பற்றிச் செய்தித்தாள்களின்மூலம் அறிந்துகொள்ளுகிருேம். நாள்தோறும் நாம் வாழும் உலகத்தைப் பற்றியவற்றை அறிந்து கொள்வது நம் கடமையாகும். மேனுடுகளில் செய்தித்தாள்களைப் படிக்காதவர்கள் இல்லையென்றே அறிஞர் கருதுகின்றனர். இதனுலேயே அவர்கள் பலவகைத் தொழில்களிலும் மேம்பாடு அடைகின்றனர். ஆகையால் நாம் அனைவரும் செய்தித்தாள்களைத் தினந்தோறும் படித்து வர வேண்டும்.

பல ஊர்களில் நடப்பவைகள் செய்தித்தாள்களில் எப்படி வெளியாகின்றன? செய்தித்தாள்களை வெளியிடுவோர் பெரிய ஊர்களில் சிலரை வேலைக்கு

அமர்த்தி இருக்கின்றனர். அவர்களுக்கு 'நிருபர்கள்' என்பது பெயர். அந்த நிருபர்கள் நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் அங்கங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தந்தி மூலமாகவும் அஞ்சல் மூலமாகவும் தெரிவிப்பார்கள். அவற்றைச் செய்தித் தாள்களை வெளியிடுவோர் தம் செய்தித்தாள்களில் அச்சிட்டு வெளியிடுவார்கள்.

செய்தித் தாள்களைப் படிப்பது ஒரு நல்லமுறை. படிப்பது மட்டும் போதாது. நீங்கள் விரும்பிய செய்திகளைக் கத்தரித்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைக்கவேண்டும். கல்வித் தொடர்பான கட்டுரைகள், சிறந்த சொற்பொழிவுகள் ஆகிய இவை உங்களுக்கு வாழ்க்கையில் பயன் படும். நீங்கள் கட்டுரை எழுதும் போதும் சொற்பொழிவு ஆற்றும் போதும் இவை சிறந்த துணையாக இருக்கும். செய்தித்தாள் படித்து வருவதால் நீங்கள் சிறந்து விளங்குவீர்கள் என்பதில் ஐயமில்லை.

### அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிகள் | செய்தித்தாள்கள் | அன்றாடம் |
| வெளிவருவன | விளம்பரங்கள் | அரசியல் |
| சுருக்கமாக | கட்டுரைகள் | கண்கவர் |
| ஓவியங்கள் | மிளிரும் | அமைவது |
| மேம்பாடு | நிருபர்கள் | சொற்பொழிவுகள் |

### வினாக்கள்

1. செய்தித் தாள்களுக்குள்ள பிற பெயர் யாது? அது நமக்குத் தெரிவிப்பன யாவை?

2. செய்தித்தாள்கள் பல வகைப்படும் — அவை யாவை?

3. தமிழ் மொழியில் வெளியிடப்படும் நாள் செய்தித்தாள்கள் நான்கினைக் கூறுக.

4. வாரத்தாள்களுள் ஒரு சில கூறுக.

5. நாள் செய்தித்தாள்களிலிருந்து நாம் அறிவன யாவை?

6. வாரத்தாள்கள், மாதத்தாள்கள் ஆகியவை நமக்கு அறிவிப்பன யாவை?

7. நாள் செய்தித்தாள்களால் நாம் பெறும் பயன்கள் யாவை?

8. இவற்றில் செய்திகள் வெளியாவது எப்படி?

9. இவற்றைப் படிக்கும் போது நாம் கைக்கொள்ள வேண்டிய முறை யாது?

## பயிற்சி

1. இப்பாடத்தில் குறிக்கப்படாத பிற செய்திகள் ஒரு சிலவற்றைக் கூறுக.

2. இன்றைய செய்தித்தாளைப் படித்து நீ விரும்பும் செய்தியைக் கத்தரித்துக் கொண்டு வருக.

3. மாதத்தாள் ஒன்றில் இருக்கும் சிறுவர் பகுதியில் வெளியிட்டுள்ள கதையைப் படித்துக் கூறுக.

4. கீழ்க்கண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—நியமித்து, அஞ்சல், மூலம், கைக்கொள்க.

## இலக்கணம்

ந, ன, ண--ப ந் து, ஒ ன் று, வ ண் டு.

ந்—என்பது 'து' என்ற எழுத்துடன் வந்துள்ளது.

ன்—என்பது 'று' என்ற எழுத்துடன் வந்துள்ளது.

ண்—என்பது 'டு' என்ற எழுத்துடன் வந்துள்ளது.

ந, ன, ண என்பன த,ற,ட என்னும் வல்லெழுத்துக்களுக்குப்பின் முறையே வரும். ஆதலால் ந—தன்னகரம் என்றும், ன — றன்னகரம் என்றும், ண—டண்ணகரம் என்றும் பெயர் பெறும்.

ர, ற, ல, ள, ழ, ந, ன, ண—என்ற எழுத்துக்கள் வர உன் பாட நூலை நோக்கி வகைக்குப் பத்து வார்த்தைகள் எழுதுக.

# 14. மாணிக்க நாய்க்கர்

கொங்கு நாட்டு ஊர்களில் பாகற்பட்டி என்பது ஒன்று. இது சேலம் புகைவண்டிச் சந்திப்பின் மேற்கில் நான்காவது கல்லில் இருக்கிறது. அவ் வூரில், வாழ்ந்தவர் மாணிக்க நாய்க்கர். அவர் தந்தையின் பெயர் வேங்கடசாமி; தாயின் பெயர் முத்தம்மாள். இருவரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்.



மாணிக்க நாய்க்கர்

மாணிக்க நாய்க்கர் 24-2-1871-இல் பிறந்தார். 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி, அவர் பிள்ளைப் பருவத்திலேயே சுறுசுறுப்பு, ஊக்கம், விடா முயற்சி, அஞ்சாமை, ஆராய்ச்சி முதலிய அருங்

குணங்களைப் பெற்றிருந்தார். அவரது தாயார், சிறந்த தமிழ் உணர்ச்சியை அவரது இளமை யுள்ளத்தில் ஊட்டினார். அதனாலேயே அவர் சிறந்த தமிழறிஞராக விளங்கினார்.

மாணிக்க நாய்க்கர் பிள்ளைப் பருவத்தின் தொடக்கத்தில், கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை; விளையாட்டிலும், வேடிக்கையிலும் அவர் கருத்தைச் செலுத்தினார். எனினும், நாளடைவில் கருத்துடன் படித்துத் தேர்வுகளில் தேறினார். சேலம் கல்லூரியில் சேர்ந்து கல்லூரிப் படிப்பையும் முடித்தார். அவர் பொறியியல் கல்வியைப் பெற விரும்பினார். ஆனால் அவரது ஏழ்மை அதற்குக் குறுக்காக நின்றது.

இளமையில், தாயிடம் பெற்ற தமிழ்க்கல்வி அவருக்கு உதவி செய்தது. பாகல்பட்டி மிட்டா தாரின்மேல் கவிகள் பாடினார்; தம் பொறியியல் படிப்புக்கு உதவி வேண்டும் என்பதை, அக்கவி களில் குறிப்பிட்டிருந்தார். மிட்டாதார் மகிழ்ந்து, அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். மாணிக்க நாய்க்கர் சென்னைப் பொறியியல் கல்லூரி யில் சேர்ந்து படித்துத் தேறினார்; முதன்மையாகத் தேறிப் பரிசில்களும் பெற்றார்.

பட்டம் பெற்ற மாணிக்க நாய்க்கருக்கு உடனே பொறிவலாளராக வேலை கிடைத்தது. அவர் தம் வேலையைத் திறம்படச் செய்து பேரும் புகழும் பெற்றார். அவரது ஆராய்ச்சித் திறத்துக்கு, இன்று சிறந்த பயன்களைத் தந்து விளங்கும் மேட்டூர் அணையே எடுத்துக் காட்டாகும். மேட்டூர் அணை, முதல் முதல் கட்டத் தொடங்கியது இப்போதுள்ள இடத்

திலன்று. மேனுட்டுப் பொறிவலாளர்கள் வேறிடத்தைக் குறிப்பிட்டிருந்தனர். அவ்விடத்தில் கட்டியிருந்தால், இன்று அணையே இருந்திராது. மாணிக்க நாய்க்கர் அதனைத் தக்க சான்றுகளுடன் அந்த மேனுட்டுப் பொறிவலாளர்க்கு எடுத்துக் காட்டினுர். அவர்களும் அவரது அறிவுத் திறத்தைப் பாராட்டினுர்கள் ; அவர் குறிப்பிட்ட இடத்திலேயே அணையைக் கட்டினுர்கள். ஈடும் எடுப்பும் இன்றி அது விளங்குவதை நாம் இன்று கண்டு வருகிறேம்.

மாணிக்க நாய்க்கர் குடும்பம் நல்ல தமிழறிவு பெற்ற குடும்பம். பெற்றேர் நலம் பிள்ளைக்கும் இருந்தது. அவர் சிறந்த தமிழறிவு பெற்றுத் திகழ்ந்தார் ; சங்கநூல்கள் முதல் எல்லா இலக்கியங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். சுவை மிக்க கதைகளையும் கவிதைகளையும் அவர் வரைந்துள்ளார். தம் அலுவல்களுக் கிடையே தமிழ்ச் சொற்பொழிவுகளைச் செய்து தாய்மொழியை வளர்த்து வந்தார். அவர் பல ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்று 'தமிழ் அலகைத் தொடர்' என்பது.

நமது தமிழ்மொழி 'ஸ, ஜ, க்ஷ, ஹ, ஷ முதலிய ஒலிகளையும் F, X, Z என்ற ஒலிகளையும் பெருத குறை மொழி என்று ஒரு சிலர் அறியாமையால் பழித்து வந்தனர். அதனைப் பொருத நாய்க்கர் தமிழ் எழுத்துக்களை நன்கு ஆராய்ந்தார் ; தமிழ் எழுத்துக்களிலுள்ள ஆய்த எழுத்தினைக் (ஃ) கண்டார் ; அதனைக்கொண்டு உலகத்திலுள்ள எம்மொழி எழுத்துக்களையும் எழுதிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதனை அறிஞர் கூட்டத்தில் எடுத்துக்

காட்டி விளக்கினுர். அவர்கள் நாய்க்கரது ஆராய்ச் சித்திறனைப் பாராட்டிப் புகழ்ந்தனர். இன்று ஆங் கிலப் பதம் 'காபி' என்பதை 'காஃபி' என்று எழுதி அவ்வொலியை உண்டாக்குவது நாய்க்கர் கண் டறிந்ததேயாகும். இவர் கண்ட மற்ருென்று 'ஓம்' என்னும் ஒலியிலிருந்தே தமிழ் எழுத்துக்களெல்லாம் உண்டாயின என்பதாகும்.

மாணிக்க நாய்க்கர் பல்கலைச் செல்வர். அவர் அறியாதது ஒன்றில்லை; 'கண் கண்டால் கைசெய் யும்' என்ற மொழிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். அவர் இசையில் வல்லவர்; வீணை, குழல், மத்தளம் முதலிய இசைக்கருவிகளை வாசிப் பார்; ஓவியம் எழுதுவார்; பாவைகளைச் செய்வார்; நிழற்படம் எடுப்பார். அவர் 'எத்தொழிலும் சிறந்த தொழிலே' என்னும் எண்ண முள்ளவர். அவருக் குத் தைக்கத்தெரியும்; கடிகாரம் பழுது பார்க்க அறி வார்; மரவேலை, இரும்பு வேலை முதலியனவற்றை யும் செய்வார்; 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று கூறிய பாரதி வாக்குக்கு, அவர் வழி காட்டியாக விளங்கினுர். அவர் தமிழ் நாட்டின் தவக்குறையால் 25—12—1931-இல் இறைவன் திரு வடி நிழலை அடைந்து இன்புற்ருர். ஆயினும் அவரது புகழுடல் என்றும் நிலைத்து நின்று தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் என்பது திண்ணம்.

அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கொங்குநாடு | பொறியியல் | மேனுட்டு | அலுவல் |
| சந்திப்பு | குறுக்காக | சான்று | பொருத |
| பிள்ளைப்பருவம் | பொறிவலாளர் | ஈடும் | பல்கலை |
| திண்ணம் | திறம்பட | எடுப்பும் | பாவைகள் |

## வினாக்கள்

1. மாணிக்க நாய்க்கர் ஊர், பெற்றோர் ஆகியவற்றைக் கூறுக.

2. நாய்க்கர் பிள்ளைப் பருவத்தைப் பற்றி வரைக.

3. நாய்க்கர் கல்வி பெற்ற தெங்ஙனம்?

4. நாய்க்கர் சிறந்த பொறிவலாளர் என்பதை எப்படி அறியலாம்?

5. நாய்க்கர் தாய் மொழிக்குச் செய்த தொண்டுகள் யாவை?

6. நாய்க்கர் பல்கலைச் செல்வர் என்பது எப்படி?

## பயிற்சி

1. நூலின் முகப்பில் கொடுத்திருக்கும் தமிழ் நாட்டுப் படத்தில் பண்டைய நாடுகளைப் பார்த்து அறிந்து கொள்க.

2. நாளடைவில் திறம்பட, ஈடும் எடுப்பும், பல்கலை என்ற சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. எதிர்ச் சொற்கள் வரைக:—ஏழ்மை, குறைமொழி, ஈடு, தொடக்கம்.

4. தமிழ் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட ஒரு சிலரை அறிந்து கொள்க.

## இலக்கணம்

**சொல்**:—எழுத்துக்கள் தனித்தோ தொடர்ந்தோ நின்று பொருள் தருமாயின் சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி, சொல் என்பன ஒரு பொருட் சொற்கள்.

ஆ, ஈ, வா, போ—ஓரெழுத்துச் சொற்கள். கல், கற்கண்டு முதலியன பல எழுத்துச் சொற்கள். உன் பாடத்தில் உள்ள ஓரெழுத்துச் சொற்களை எடுத்துக் காட்டிப் பொருள் கூறுக.

# 15. கடிதங்கள்

கடிதம் என்பதற்குத் திருமுகம் என்ற ஒரு பெயருண்டு. கடிதத்தைப் பெறுவோர், அதைப் படிக்கும் போது எழுதியவரின் முகம் அவர்களது மனக்கண்முன் தோன்ற வேண்டும். அங்ஙனம் நேரில் பேசுவது போல, எளிய இனிய மொழியில், கருத்துக்களை எழுதவேண்டும். தாம் எழுதப் புகும் செய்திகளைத் திருத்தமாக மனத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

கடிதத் தலைப்பின் வலப்புறத்தில் தெருவின் பெயரையும், அதன் கீழ் ஊரின் பெயரையும், அதன் கீழ் எழுதும் தேதியையும் குறிப்பிட வேண்டும். பின்னர் எழுதப்படும் கடிதத்திற்கு உரியார்களுக்கேற்றவாறு பண்புச்சொல் எழுத வேண்டும். கூறப்புகும் செய்தியை எளிய நடையில் சுருக்கமாக எழுத வேண்டும். கடிதத்தின் அடியில் எழுதியவர் கையொப்பம் இருக்கவேண்டும். பின்னர் மேலுறையில் அனுப்பப் படுவோரின் முகவரியைத் தெளிவாக எழுதவேண்டும்.

கீழே ஒரு சில மாதிரிக் கடிதங்கள் வரையப் பெற்றுள. அவற்றைக் காண்க.

## 1. விடுமுறைக் கடிதம்

15, வள்ளலார் தெரு,<br>ஈரோடு<br>23—9—1959.

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர்,<br>கலைமகள் பள்ளி,<br>ஈரோடு.

ஐயா,

என் தமக்கை தமிழரசிக்கு 27-9-1959-ஆம் நாள் சென்னையில் திருமணம் நடைபெற இருக்கிறது.

என் பெற்ருேர் நாளையே சென்னைக்குப் புறப்படப் போகிருர்கள். நானும் அவர்களுடன் புறப்பட வேண்டி இருக்கிறது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இன்று முதல் ஒரு வாரத்திற்கு 30–9–1959 தேதி முடிய எனக்கு விடுமுறை கொடுத்துதவுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இதனுடன் என் தமக்கையின் திருமணப் பத்திரிகையையும் அனுப்பி யுள்ளேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவன்,
அ. திருநாவுக்கரசு
(ஐந்தாம் வகுப்பு)

## 2. வாணிகக் கடிதம்

59, வடக்கு வீதி,
கரூர்.
21-9-1959

மேலாளர்,
அன்பு நூலகம்,
அங்காடித் தெரு,
கோவை.

ஐயன்மீர்,

அன்புகூர்ந்து அடியிற்கண்ட பாட நூல்களை உடனே வி. பி. பி. மூலமாக மேலே கண்ட என் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். உரிய கழிவுத் தொகையைக் குறைத்து அனுப்பக் கோருகிறேன்.

1. வள்ளுவர் தமிழ் வாசகம் ஆரும் வகுப்பு } 6 படிகள்
2. சமூக நூல் (எட்டாம் வகுப்பு) 6 படிகள்
3. திருக்குறள் புத்துரை—6 படிகள்

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மன்ருடியார்.

## 3. உறவினர்க்குக் கடிதம்

75, மேலவீதி,
சிதம்பரம்.
12-10-1959

அன்புமிக்க தந்தைக்கு வணக்கம். நலம். தங்கள் நலம் அறிய விரும்புகிறேன்.

நானும் தம்பியும் இன்று காலை சுகமாக இங்கு வந்து சேர்ந்தோம். எங்கள் மாமா புகைவண்டி நிலையத்திற்கே வந்து, எங்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டில் மாமி குழந்தைகள் எல்லோரும் எங்களை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். வந்ததும் வராததுமாக மாமி எங்களுக்குச் சிற்றுண்டியும் காபியும் கொடுத்தார்கள். இரவு முழுவதும் தூக்கம் இல்லாததால் தம்பி உண்டவுடன் தூங்கிவிட்டான். நானும் மாமாவும் பக்கத்தில் உள்ள காய்கறிக் கடைக்குச் சென்று, பகல் உணவுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு வந்தோம்.

சிதம்பரத்தில் புகை வண்டியை விட்டு இறங்கிய உடனே வியப்புக்குரிய ஒன்றைக் கண்டேன். நம் ஊரிலெல்லாம் குதிரை வண்டிகள் வாடகைக்காகப் புகைவண்டி நிலையத்தில் இருக்கும். இங்கு ஒரு குதிரை வண்டி கூட இல்லை. எல்லாம் ஒற்றை மாட்டு வண்டிகளே இருக்கின்றன. ஆனால் இவை நம் குதிரை வண்டிகளைவிட விரைவாக ஓடுகின்றன.

இங்கு மற்ளுெரு புதுமையைக் கண்டேன். தெருக்கள் எல்லாம் மிகவும் அகலமாக இருக்கின்றன. இவை தேரோடும் வீதிகள் என்று மாமா சொன்னர். இன்னும் இங்குப் பார்க்க வேண்டியவை பல இருப்பதாக மாமா கூறினர். பார்த்த பின்னர் அவற்றைப் பற்றி எழுதுகிறேன்.

என் அன்னைக்கு எங்கள் வணக்கத்தைச் சொல்லவும். பிற பின்; வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
ஞா. செந்தில்குமரன்

முகவரி

உயர்திரு சு. ஞானசம்பந்தன்,
18, முத்தியாலு செட்டித் தெரு,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.

### அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| திருமுகம் | கையொப்பம் | மூலமாக |
| உரியார் | விடுமுறை | கழிவுத்தொகை |
| பணிவுள்ள | உண்மையுள்ள | சுருக்கமாக |
| மாணவன் | உறவினர் | முகவரி |

### வினக்கள்

1. கடிதம் எழுதும் போது கவனிக்கப்பட வேண்டியன யாவை ?

2. பெரியோர்க்கு எழுதப்படுவனவற்றில் கவனிக்கத் தக்கவை எவை ?

## பயிற்சி

1. உங்கள் பள்ளி ஆண்டுவிழாவைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

2. நீ சென்ற இன்பச்செலவு பற்றி வெளியூரிலிருக்கும் உன் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

## இலக்கணம்

**சொல்லின் வகை:**—சொற்கள் நான்கு வகைப்படும்: 1. பெயர்ச்சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல் என்பன.

1. ஏதேனும் ஒரு பொருளின் பெயரைத் தெரிவிப்பது **பெயர்ச்சொல்.** (உ-ம்) கடிதம், கண்ணன், ஆத்தூர்.

2. ஒரு பொருளின் தொழிலைக் காட்டுவது **வினைச் சொல்.** (உ-ம்) எழுதுகிறேன், எழுதுவேன், எழுதினேன்.

3. பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் போலத் தனித்து வாராமல் அவைகளின் இடையிலும் ஈற்றிலும் வந்து பொருள் பயப்பது **இடைச்சொல்லாம்.** (உ-ம்) வீட்டுக்கு - கு புத்தகத்தை-ஐ.

4. பெயர் வினைகளை அடுத்து வந்து அவைகளின் குணத்தை உணர்த்தும் சொல் **உரிச்சொல்.** உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியவை. (உ - ம்) **சால** அழகு, **நனி** பேதை,

---

# 16. இயேசு நாதர்

இயேசு நாதர் சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதேயா நாட்டில் பெத்லகேம் என்னும் சிற்றூரில் பிறந்தார். அவர் தந்தை சூசை முனிவர்;



இயேசு நாதர்

தாய் மரியம்மாள். உலகம் வியக்கும் பெரியோர்கள் தோன்றும் நேரத்தில், வியத்தற்கரிய யாதேனும் செயல் நடைபெறும். இயேசு நாதர் பிறந்தபோது

வானிலே அற்புதமான விண் மீன் ஒன்று தோன்றியது. இவர், இருள் சூழ்ந்த நேரத்தில், கடுங் குளிர் மக்களைக் கலங்க வைக்கும் காலத்தில் மாடுகள் கட்டும் தொழுவத்தில் மனிதனாக அவதரித்தார்.

நாசரேத் என்னும் தமதூரில் சூசை முனிவரும் மரியாளும் இயேசுக் குழந்தையுடன் வாழ்ந்து வந்தனர். 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கொப்ப நல்லறிவாளராக நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார் இயேசு. தம் குலத் தொழிலான தச்சுத் தொழிலைச் செய்து வரும் தந்தைக்குத் தம்மாலான உதவிகளை இயேசு செய்து வந்தார்; பிள்ளைகள் பெற்றோர்க்கு ஆற்றவேண்டிய கடமைகளைத் தமது எடுத்துக் காட்டால் உலகினருக்கு விளக்கிக் காட்டினார்.

இயேசுவுக்குப் பன்னிரண்டாம் வயது நடந்து கொண்டிருந்தது. அவ்வமயம் எருசலேம் பதியில் திருவிழா நடந்தது. அவ்விழாவிற்குச் சூசையும் மரியாளும் தம் மகனோடு சென்றனர். நாட்டின் பல் வேறு பகுதிகளிலிருந்து மக்கள் வெள்ளமென வந்தனர். வேதனை தாங்கி வருவோரும், வேண்டும் வரம் கேட்போரும் ஆண்டவன் தரிசனம் பெறுவோரும் ஆகிய பலர் வந்து குழுமினர். அவர்களில் இயேசுவின் குடும்பமும் ஒன்று.

விழா முடிந்தது. எல்லோரும் அவரவர் ஊர்களுக்குப் புறப்படலாயினர். இயேசுவின் பெற்றோரும், தம் மகன் தம்மோடு வந்து கொண்டிருப்பதாக எண்ணிச் சென்றுகொண்டிருந்தனர். ஓரிடத்தில்

வந்து பார்த்தபோது, இயேசுநாதர் காணப்பட வில்லை. பெற்றோர்கள் திரும்பவும் எருசலேம் பதி வரை தேடிய வண்ணம் சென்றனர். இறுதியில் கோவிலுக்குள் சென்று பல்வேறு பகுதிகளிலும் தேடினர்; அங்கே ஒரு பகுதியில் இயேசுநாதர் வேதங்களிலே தலைசிறந்த பெரியார்களோடு வாதித்துக் கொண்டிருந்ததைக் கண்டனர். தாய் பெற்ற பொழுதிலும் பெரிதுவந்தாள். தந்தை இத் தகு மகனைப் பெற என்ன தவம் ஆற்றினேமோ என்று எண்ணி மகிழ்ந்தார்.

முப்பது ஆண்டுகள் கழிந்தன. இயேசுநாதர் நாட்டைத் திருத்தும் நற்பணியிலே இறங்கினர்; அறியாமையை ஒழிக்க, இரவும் பகலும் அயராது உழைத்தார்; நாட்டு மக்கள் அவரது குரலுக்குச் செவி சாய்த்தனர். அவரின் அன்பு மொழிகளும் பண்பு மிக்க கொள்கைகளும் அவர்களை அவர்பால் ஈர்த்தன.

இயேசுநாதர் செய்த செயற்கரிய செயல்கள் பல. தீரா நோயாளிகளைக் குணமாக்கினர்; இறந் தவர்களை உயிர்ப்பித்தார்; குருடர்களுக்குப் பார்வை யும், முடவர்களுக்குக் கால்களும் தந்தருளினர். இரு மீன்களையும் ஐந்து அப்பத் துண்டுகளையும் ஐயா யிரம் மக்கள் உண்ணுமாறு படைத்தார். இங்ஙனம் அவர் செய்த வியத்தகு புதுமைகளைக் கண்ட மக் கள் அவரைத் தெய்வமாகக் கொண்டாடினர்; அவர் செல்லுமிட மெல்லாம் பின் தொடர்ந்தனர்; அவரது புகழ் பாடி மகிழ்ந்தனர்.

இயேசுநாதர் ஆற்றிய உரைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. பாமர மக்களின் உள்ளங்களில் தம் கருத்துக்கள் பதிய வேண்டுமென இயேசுநாதர் எண்ணினர்; அதற்கெனப் பல உவமைக் கதைகளைக் கூறினர். அவரது உவமைக் கதைகளில் 'ஊதாரிப்பிள்ளை', 'நல்ல ஆயன்' போன்றவை மக்களின் உள்ளங்களைத் தொடுவனவாகும்.

அவருடைய சொற்பொழிவுகளில் மிகச் சிறந்தது 'மலைச்சொற்பொழிவு'. குன்றின் உயரமான பகுதியில் அவர் அமர்ந்துகொண்டு, தம் எதிரே சம தரையில் அமர்ந்திருந்த மக்களுக்கு அளித்த அறிவுரைதான் மலைச் சொற்பொழிவு எனப்படும். "மாசு மறுவற்ற தூய உள்ளத்தோடு வாழவேண்டும். அறத்தை நிலை நாட்டத் துன்பத்தையும் ஏற்கவேண்டும். துன்பத்தைக் கண்டு மகிழ வேண்டும். இவையே மோட்சம் அடையும் வழி. இவற்றால் இறைவனையும் காணக்கூடும். செய்த வினைகளுக்கிரங்குவோர் ஆறுதல் பெறுவர். அமைதியான வாழ்வு இன்பத்தைக் கொடுக்கும்." இவை இயேசுநாதர் அருளிய 'மலைச்சொற்பொழிவி'ல் ஒரு சில.

தமக்குப்பின் தம் பணியை ஏற்க அவர் பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அவரது புகழ் நாடெங்கும் பரவியது. இதனைக் கண்ட வேதகுருக்கள் பொறாமை அடைந்தனர்; அவரை ஒழித்துவிட முடிவு கட்டினர்; பொய்யான குற்றச் சாட்டுகளைப் பிலாத்துஸ் என்னும் அதிகாரியிடம் கூறினர். அவன் வேத குருக்களது வற்புறுத்துதலுக்கு உட்பட்டான்; இயேசு நாதரைச் சிலுவையில் அறைந்து கொல்லத் தீர்ப்பளித்தான்.

வேத குருக்கள் இயேசுவைப் பலபடியாகத் துன்புறுத்தினர். கல் தூணிலே கட்டியடித்தனர்; முள் முடியைத் தலையில் சூட்டி "யூதரின் அரசன்" என்று கூறி ஏளனம் செய்தனர்; சிலுவையை அவர் தோளில் சுமத்திக் கல்வாரி மலைக்கு அழைத்துச் சென்றனர். உலகை வாழ்விக்கவந்த உத்தமர், பட்ட இன்னல்கள் அளவில. இரு கள்வர்களின் இடையே அவர் சிலுவையில் அறையப்பட்டார். இறுதியாக அவர் கூறியன, "ஆண்டவரே இவர்கள் இவற்றை அறியாமல் செய்கிறார்கள். இவர்கள் பாவங்களை மன்னியும்" என்பனவாம்.

தாம் இறந்த மூன்றும் நாள் இயேசு நாதர் கல்லறையிலிருந்து உயிர்த்து எழுந்தார்; தம் சீடர்களுக்கும், பிறருக்கும் அறிவுரை பல கூறி வானுலகம் சென்றார். இயேசுநாதர் போதித்த உண்மைகளைக் கடைப்பிடித்து மக்களாக வாழ வேண்டும். அதுவே அவருக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

### அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| ஈராயிரம் | வண்ணம் | அறியாமை |
| கல்லறை | விண்மீன் | அபராது |
| கொள்கை | தொழுவம் | குழுமினர் |
| ஈர்த்தன | வானிலே | தொண்டு |
| சிலுவை | கடைப்பிடித்து | நற்பணி |

### வினாக்கள்

1. இயேசு நாதர் பிறப்பினைப் பற்றிக் கூறுக.
2. இயேசுவின் இளமையைப் பற்றி வரைக.

3. எருசலேம் பதிக்கு எவரெவர் சென்றனர் ?

4. பெற்ருேர் தேடியபோது இயேசு எங்கிருந்தார்?

5, மக்கள் இயேசுவை ஏன் விரும்பினர் ?

6. இயேசு நாதர் செய்த செயற்கரும் செயல்கள் யாவை ?

7. இயேசு நாதர் எங்ஙனம் மக்களுக்குப் போதித்தார் ?

8. மலேச்சொற்பொழிவு என்பது யாது ? அதில் கூறப்பட்டவற்றைத் தொகுத்து வரைக.

9. இயேசு நாதரைக் கொல்லத் தூண்டியது எவர்? ஏன் ?

10. வேதகுருக்கள் இயேசுவிற்கு இழைத்த இன்னல்கள் யாவை ?

11. இறுதியாக இயேசுநாதர் கூறிய சொற்கள் யாவை ?

12. நமது கடமை யாது ?

## பயிற்சி

1. ஊ நாரிப்பிள்ளே, நல்ல ஆயன் என்ற உவமைக் கதைகளே விவிலிய நூலில் காண்க.

2. 'மலேச் சொற்பொழிவு' என்பதை விவிலிய நூலில் படித்துப் பார்க்க.

3. இயேசு நாதரின் சீடர்கள் பெயர்களேத் தெரிந்து கொள்க.

4. வாக்கியங்களில் அமைக்க :—கடைப்பிடித்து, வியத்தற்கரிய, என்பதற்கொப்ப, செவி சாய்த்தனர்.

## இலக்கணம்

அறுவகைப் பெயர்கள் :

பெயர்ச் சொல் அறுவகைப்படும்.

1. பொருளுக்குப பெயராக வருவது **பொருட்பெயர்.** (உ-ம்) சூசையும் மரியாளும் சென்றனர்.

2. இடத்திற்குப் பெயராக வருவது **இடப்பெயர்**. (உ-ம்) **நாசரெத்** என்னும் ஊரில் வாழ்ந்தனர்.

3. காலத்துக்குப் பெயராக வருவது **காலப் பெயர்**. (உ-ம்) இயேசு **இரவில்** தொழுவத்தில் பிறந்தார்.

4. குணத்திற்குப் பெயராய் வருவது **குணப்பெயர்** அல்லது **பண்புப் பெயர்**. (உ-ம்) அவரது **அன்பு** மொழி மக்களை ஈர்த்தது.

5. உறுப்பிற்குப் பெயராய் வருவது **சினைப் பெயர்** (உ-ம்) குருடர்க்குப் பார்வையும் முடவர்களுக்குக் **கால்** களையும் கொடுத்தார்.

6. தொழிலுக்குப் பெயராய் வருவது **தொழிற் பெயர்**. (உ-ம்) மக்களாக **வாழ்தல்** வேண்டும்.

## 17. முத்துக் குளிப்பு

முத்து, பவளம், கோமேதகம், நீலம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், வைரம், வைடூரியம் என்பன நவமணிகள். இவற்றுள் சிறந்தது முத்தே என்பர். இது தூய்மையும் மேன்மையும் பொருந்தியதாக நம் மக்களால் மதிக்கப் படுகின்றது. திருமகளின் அருளைப் பெற வைக்கும் பெருமை முத்துக்குண்டு என்பர். மருத்துவர் முத்தினைக் கொண்டு அரிய மருந்துகளைச் செய்து மக்கள் பிணிகளைப் போக்கி உதவுவர்.

முத்துக்கள் உலகின் பல பாகங்களில் கிடைக்கின்றன; ஆஸ்திரேலியா, தென் கடல் தீவுகள், மேற்கிந்தியத் தீவுகள், ஜப்பான், காலிபோர்னியா, மெக்சிகோ முதலிய இடங்களிலுள்ள கடல்களில் கிடைக்கின்றன. நம் நாட்டில் தூத்துக்குடித் துறையில் முத்துக்கள் நிறையக் கிடைக்கின்றன.

பாண்டிய நாட்டுத் துறைமுகங்களில் நீண்ட காலமாகவே முத்துக்கள் எடுத்து வந்தனர். பாண்டிய நர்ட்டு முத்துக்களைப் பற்றி வெளிநாட்டு இலக்கியங்கள் பெருமையாகப் பேசுகின்றன. பாண்டிய நாட்டு முத்துக்களுக்கு உரோம் நகரில் நல்ல விலை இருந்து வந்தது என்று பிளினி என்னும் ஆசிரியர் கூறுகிறார். முத்துச் செல்வம் இந்திய நாட்டுக்குச் சீரும் சிறப்பும் அளித்து வந்தது என்பதை ஆன்றோர் கூற்றிலிருந்து நாம் அறியலாகும்.

முத்துக் குளித்தல் சாதாரணமாக மார்ச்சு ஏப்ரல் மாதங்களில்தான் நடைபெறும். அது கடின

மான தொழில்; அஞ்சத்தக்க தன்மையை யுடையது. முத்துச் சிப்பிகள் கடலில் சுமார் 100 அடி ஆழத்தில் இருக்கும். முத்துக் குளிப்போர் கடலின் ஆழத்தில் செல்வர்; நெடுநேரம் மூச்சுப் பிடிக்கக் கற்றிருப்பர்; கண்ணை விழித்துப் பார்த்துத் தேடி எடுத்து இடுப்பில் கட்டியுள்ள பைகளில் முத்துச் சிப்பிகளை சேகரித்துக் கொண்டு மேலே வருவர்; தாங்கள் சென்ற தோணிகளில் உள்ள ஆட்களிடம் முத்துச் சிப்பிகளைக் கொடுத்து விட்டு மீண்டும் கடலாழத்திற்குச் சென்று அவற்றைச் சேகரிப்பர்.

முத்துக் குளிக்குமிடத்திற்கே பெரிய வணிகர்கள் செல்கிறார்கள். அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட முத்துக்கள் போக எஞ்சியவற்றை அவர்கள் ஏலத்தில் எடுப்பர். முத்துக் குளிப்போர் தாங்கள் சேகரித்த சிப்பிகளில் மூன்றில் ஒரு பங்கைக் கூலியாகப் பெறுவர். அவர்கள் அவற்றை அங்குக் கூடியுள்ள வணிகர்களுக்கே விற்பர். வணிகர்கள் அவற்றை எடுத்துச் சென்று திறந்து சுத்தம் செய்து விலைக்கு விற்பர். முத்துக்கள் குறைந்தது ஐந்து முதல் ஆயிரம் ரூபாய் வரையில் விலைபோகின்றன.

இக்காலத்தில் முத்துக் குளிப்பு பல நவீன வசதிகளைப் பெற்றுள்ளது. முத்துக் குளிப்போருக்கு ஆபத்து ஏற்படாமல் காத்து வருகிறார்கள். இத்தொழில் அரசாங்கத்தாரிடமே இருப்பதால், அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| முத்து | மரகதம் | தூய்மை |
| பவளம் | மாணிக்கம் | வைரம் |
| கூற்று | கோமேதகம் | வைடூரியம் |
| திருமகள் | நீலம் | சிப்பி |
| புட்பராகம் | நவமணிகள் | மருத்துவர் |

## வினாக்கள்

1. நவமணிகள் எவை? இவற்றுள் சிறந்தது எது?
2. முத்துக்கள் எங்கு உண்டாகின்றன?
3. உலகில் எங்கெங்கு முத்துக்கள் கிடைக்கின்றன?
4. பாண்டிய நாட்டு முத்துக்களைப் பற்றி நாம் அறிவது யாது?
5. முத்துக் குளித்தல் எப்படி?
6. முத்து வாணிகம் நடப்பது எப்படி?
7. இபபோது முத்து எங்ஙனம் எடுக்கப்படுகிறது?

## பயிற்சி

வாக்கியங்களில் பயன்படுத்துக: எஞ்சிய, தூய்மை, கூற்று.

## இலக்கணம்

மூவிடம் :—"மேட்டூர் நீர்த் தேக்கத்தைப் பற்றி நீ கேள்விபட்டதில்லையா?" இதைச் சொல்வது ஆசிரியர். கேட்பது மாணவன். சொல்லப்படுவது தேக்கத்தைப் பற்றி. இவ்வாக்கியத்தில் பேசுவோன், கேட்போன், பேசப்படுவது என்ற மூன்று பொருள்கள் உள்ளன.

பேசுவோன் தன்னையும், கேட்போன் முன்னிருப்பவனையும், பேசப்படுவோன் மூன்றாமவனையும் குறிக்கும். பேசுவோன் **தன்மை இடம்**, கேட்போன் **முன்னிலை இடம்**. பேசபபடுவோன் **படர்க்கையிடம்**. எனவே இடம் மூன்றாகும்.

# 18. கொடிகாத்த குமரன்

வரலாற்றுக்கு எட்டாக்கால முதல், நம் நாடு வாழையடி வாழையாக, நம் மன்னர்களால் நன்கு ஆளப்பட்டு வந்தது. நமது நாட்டின் பல வகை வளத்தையும், செல்வச் செருக்கையும், கண்டு அயல் நாட்டார் பலர், வாணிகம் செய்ய நம் நாடு வந்தனர்; நாட்டைக் கைப்பற்றினர். இவர்களுள் இறுதியாக வந்து நாடு முழுவதையும் கைப்பற்றியவர் ஆங்கிலேயர்.



திருப்பூர் குமரன்

ஆங்கிலேயர்களது ஆட்சியை வெறுத்து அடிக்கடி கிளர்ச்சி செய்தனர்-நம் நாட்டு மக்கள். ஆனால் ஆங்கிலேயரது படைவலி முன் நம் நாட்டார்

7

புயவலி பன்முறையும் தோற்றது. இறுதியில் மகாத்மா காந்தியடிகள் தோற்றுவித்த ஒத்துழை யாமை இயக்கம், துன்புறுத்தாமை, அறப்போர் முதலியன அவர்களது ஆட்சிக்கு முடிவு கட்டின. காந்தியடிகளது போருக்குப் பல்லாயிரம் பாரதவீரர் கள் உதவினர். அவர்களில் ஒருவரே கொடிகாத்த குமரன் ஆவார். இவர் நமது நாட்டு உரிமைக்காகத் திருப்பூரில் உயிர்கொடுத்ததால், திருப்பூர் குமரன் என்னும் பெயர் பெற்ருர்.

குமரன் கி. பி. 1904- ஆம் ஆண்டு அக்டோ பர் மாதம் பிறந்தார். இவர் ஊர் சென்னிமலே; இவர் தந்தையின் பெயர் நாச்சிமுத்து; தாயாரின் பெயர் கருப்பாயி அம்மாள். இவர்கள் குடும்பம் பெரிது. எனவே குமரனது பள்ளிப்படிப்பு ஐந்தாம் வகுப்புடனே முடிந்து விட்டது.

நெசவுத் தொழிலில் போதிய வருமான மில்லா மையால் குமரன் அதனை வெறுத்தார். ஆயினும் வேறு தொழில் ஒன்றும் கிடைக்காமையால் அவர் நெய்தற்ருெழிலேக் கற்கலானுர்; பின்னர்த்திருப்பூரில் இருந்த பஞ்சு வாணிக நிலேயம் ஒன்றில் கணக்க ராக வேலே பார்த்து வரலானுர். முதலாளிகள் உயர் வாக மதிக்கத்தக்க நாநயம் திறமை முதலியன அவரிடம் இருந்தன. அவர் 1923-ஆம் ஆண்டு இராமாபாய் என்ற அம்மையாரை மணந்து, எட்டாண்டுகள் இல்லறம் நடத்தினுர்.

1931-ஆம் ஆண்டு பாரதநாடு முழுவதும் சட்ட மறுப்பு இயக்கம் நடந்தது. அதில் எண் ணற்ற வீரர்கள் கலந்து கொண்டு நாட்டுக்கு

உழைக்கலாயினர். குமரனும் இயக்கத்தீயில் குதிக்கத் துடிதுடித்தார். அவரது சுற்றத்தினர் குறுக்கிட்டு அவரைத் தடுத்து வந்தனர். பெற்ற தாயும் அவரை விடுதலை இயக்கத்துக்கு அனுப்ப விரும்பவில்லை. மணந்த மனைவியும் போகக் கூடா தெனத் தடுத்து மன்றாடி அழுதாள்.

குமரன் இவற்றிற்கெல்லாம் கலங்கவில்லை. "வீரன் ஒரு முறை தான் மாள்வான்; கோழைகள் பன்முறை மாள்வர்'' என்பது பழமொழி. குமரன் எவர் தடுத்தும் கேளாமல் மூந்நிறக் கொடி ஏந்தித் தொண்டர் படையில் சேர்ந்தார்; அஞ்சா நெஞ் சுடன் முன் வரிசையில் சென்றார்.

தொண்டர்கள் பல தெருக்களைக் கடந்து நகரச் சேவகர் அலுவலகம் நோக்கிச்சென்றனர். காவற் படையினர் தொண்டர்கள் மேல் பாய்ந்தனர்; தொண்டர்களை நன்றாகப் புடைத்தனர். குமரன் மீதும் அடி விழுந்தது. காவலர்கள் குமரன் கையி லிருந்த தேசீயக் கொடியைப் பிடுங்கினர். குமரன் விடவில்லை. அடிமேல் அடிவிழுந்தது. 'கொடியை விடு, இல்லையேல் உயிரிழப்பாய்' எனக் காவலர்கள் உறுமினர். 'உயிர் கொடுப்பேன், கொடியை விடேன்' என்றார் குமரன். காவலர்கள் விடாமல் மாற்றி மாற்றி அவரை நையப் புடைத்தனர். படு காயமுற்ற குமரன் கீழே விழுந்தார். விழுந்த நிலை யிலும் அவர் தேசீயக்கொடியை விடவில்லை. பின்னர் அவரை மருத்துவ இல்லத்துக்குக் கொண்டு சென்றனர். மருத்துவர் அவருக்கு ஒன்றும்

செய்ய இயலவில்லை. குமரன் உயிர் விடுதலை பெற்று வீர சுவர்க்கம் அடைந்தது.

குமரனைப் பாராட்டாதவர்கள் இல்லை. நம் தமிழ் நாட்டுக்குப் புகழைத் தேடித்தந்த அவரை நம் மக்கள் மறந்து விடவில்லை. அவர் உயிர் துறந்த தெருவிற்குக் 'குமரன் தெரு' என்று பெயரிட்டனர். குமரன் சிலையைத் திருப்பூரில் நான்கு தெருக்கள் சேரும் இடத்தில் நாட்டினர். நம் அரசியலாரும் குமரனின் குடும்பத்தினைப் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர். நம் உரிமை இயக்க வரலாற்றில் குமரன் பெயர் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் பெறும் என்பதில் ஐயமில்லை.

## அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வாழையடி | கிளர்ச்சி | துடிதுடித்தார் | அலுவலகம் |
| செருக்கு | படைவலி | புடைத்தனர் | மன்றாடி |
| சூழ்ச்சி | புயவலி | முந்நிறக்கொடி | உறுமினர் |
| கைப்பற்றினர் | ஒத்துழையாமை | கணக்கராக | நாநயம் |

## வினாக்கள்

1. பண்டைக் காலத்து நம் நாட்டின் நிலை யாது?
2. ஆங்கில ஆட்சிக்கு முடிவு கட்டியது யாது? எங்ஙனம்?
3. குமரன் இளமை வரலாற்றைக் கூறுக.
4. குமரன் செய்த தொழில் யாது?
5. குமரன் இயக்கத்தீயில் குதித்தபோது யார் யார் என்னென்ன செய்தனர்?
6. குமரன் உரிமைப் போரில் எங்ஙனம் பங்கு கொண்டார்?
7. குமரனைப் பாராட்டியவர்கள் எவர்? எங்ஙனம் பாராட்டினர்?

## பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:-வாழையடி வாழையாக, சூழ்ச்சி, நாநயம், குறுக்கிட்டு.

2. எதிர்ச்சொற்கள் கூறுக:-கேளாமல், அஞ்சா நெஞ்சு, நவருத, இயலவில்லை.

3. ஒரு நேசிய வீரரைப்பற்றி அறிந்துகொள்க.

4. நேசீயப் பாடல்களைப் பாடத் தெரிந்து கொள்க.

## இலக்கணம்

மூவிடப் பெயர், வினைகள் :

நான், யான் - தன்மை ஒருமைப் பெயர்
நாம், யாம் - தன்மைப் பன்மைப் பெயர்
நீ - முன்னிலை ஒருமைப்பெயர்
நீர், நீங்கள் - முன்னிலைப் பன்மைப்பெயர்

தன்மை, முன்னிலை அற்ற மற்றப் பெயர்கள் படர்க்கை.

1. நான் படிக்கிறேன்
2. நீ படிக்கிறாய்
3. அவன் படிக்கிறான்.

(1) **நான்** தன்மைப் பெயர்-படிக்கிறேன் தன்மை வினை.

(2) நீ-முன்னிலைப்பெயர் - படிக்கிறாய் - முன்னிலை வினை.

(3) அவன் - படர்க்கைப் பெயர் - படிக்கிறான் - படர்க்கை வினை.

———

# 19. பவானி அணை (உரையாடல்)

[நாமக்கல் தொடக்கப்பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியருடன் பவானி நீர்த்தேக்கத்திற்கு இன்பச் செலவாகச் சென்றனர். நீர்த்தேக்கத்தைப்பற்றி அவர்கள் பேசுகின்றனர்.]

**மதியழகன் :**—ஐயா, நாம் காணும் இந்த நீர்த்தேக்கம் ஒன்றுதான் நம் தமிழ் நாட்டில் இருக்கிறதா?

**ஆசிரியர் :**—இல்லை. இன்னும் உண்டு. மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? ஆனால் நாம் உரிமை பெற்ற பின் முதன் முதலாகத் தமிழ் நாட்டில் கட்டப்பட்ட அணை இதுதான்.

**குலசேகரன் :**—ஐயா, ஆற்றின் இடையில் அணைகள் ஏன் கட்டுகிறார்கள்? இயல்பாகவே ஆறு பாய்ந்து செல்வது போதாதா?

**ஆசிரியர் :**—போதாது. ஆற்றில் தண்ணீர் எப்போதும் போய்க்கொண்டிராது. மழை பெய்யுங் காலத்தில்தான் ஆற்றில் வெள்ளம் பெருகி வரும். அப்போது நீரைத்தேக்கி வைத்துக் கொண்டால்தான் மழையற்ற காலத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மதியழகன் :**—ஐயா! இந்த நீர்த்தேக்கத்தைப் பற்றி நாங்கள் அறிய வேண்டுவன யாவை?

**ஆசிரியர் :**—கூறுகிறேன். நம் அரசியலார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கிய முதல் வேலை இது. கோவைக்கு வடக்கே நாற்பது மைல் தொலைவில் இந்த அணை இருக்கிறது.

**மதியழகன் :**—இந்த அணைக்கு எவ்வளவு செலவாகி இருக்கும் ?

**ஆசிரியர் :**—இந்த அணை ஐந்தரைக் கற்கள் நீள முள்ளது. நம் நாட்டில் இதைவிட நீளமான அணை இல்லை. இதனைக் கட்டி முடிக்க ஏறக்குறைய பத்துக் கோடி ரூபாய் செலவாகி இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**குலசேகரன் :**—ஐயா ! இது எவ்வளவு நிலத்திற்குப் பயன்படும் ?

**ஆசிரியர் :**—இவ் வணையில் தேக்கப்பட்டிருக்கும் தண்ணீர் இரண்டுகோடி ஏக்கருக்குப் பயன் படும். இதனால் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருள்கள் விளைவிக்கலாமென்று மதிப்பிட் டுள்ளார்கள்.

**மதியழகன் :**—அணைகளால் நிலங்கள் செழிக்கின் றன. உணவுப் பொருள்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. அப்படித்தானே !

**ஆசிரியர் :**—ஆம் ; உண்மைதான். இனி இவ் வணையின் வரலாற்றைக் கேள்

**குலசேகரன் :**—ஐயா, இந்த இடத்தில் பல சிற் றூர்கள் இருந்தனவாகக் கூறுகிறார்களே ! அவ் வூர்களில் இருந்த மக்கள் கதி யாதாயிற்று ?

**ஆசிரியர் :**—ஆம் ; இந்த அணை கட்டப்படுவதற்கு முன் இங்குப் பல சிற்றூர்கள் இருந்தன. அவை இருந்த இடமே இப்போது நீர்த்தேக்க

மாக உள்ளது. அவ்வூர்களில் குடியிருந்த மக்களுக்கு, அரசினர் வேறு இடங்களைக் கொடுத்துக் குடியேற்றியுள்ளனர்.

**மதியழகன் :**—ஐயா, இந்த அணையை எப்படிக் கட்டியிருக்கிறார்கள் ?

**ஆசிரியர் :**—அணையின் நடுப்பகுதி சிமெண்டால் கட்டப்பட்டுள்ளது. அதன் இரு பக்கங்களிலும், களி மண்ணைக்கொண்டு கரைகளைக் கட்டியிருக்கிறார்கள். அணை கட்டுமுன் இந்த இடம் இருந்த நிலை வேறு. இப்போது இருக்கும் நிலை முற்றிலும் வேறு.

**குலசேகரன் :**—ஐயா, அது எப்படி ?

**ஆசிரியர் :**—அணை கட்டுமுன் இங்குக் குன்றுகள் இருந்தன ; காடுகள் இருந்தன ; பல சிற்றூர்கள் இருந்தன. இப்போது அவை மறைந்தன. நீர் நிரம்பிய பெரிய ஏரியும், இக்கால வசதிகள் பலவும் பெற்ற பெரிய நகரமும், இப்போது இங்கு இருப்பதைப் பார்க்கிறோம்.

**மதியழகன் :**—நீர்த்தேக்கம் மக்களுக்கு மகிழ்ச்சி அளித்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

**ஆசிரியர் :**—ஆம் ! அதிலென்ன ஐயம் ? இங்கிருந்த உழவர்கள் முன்பு வானத்தையும் நீர்வளமற்ற கிணறுகளையும் நம்பி இருந்தார்கள். ஆனால், இப்போது அவர்களுக்கு வேண்டிய தண்ணீர் நிறையக் கிடைக்கிறது. மெய் வருத்தமும் இல்லை. பயிர்த் தொழில் நன்கு நடைபெற்றுப் பெரும் பயனையும் அடைகிறார்கள்.

**குலசேகரன் :**—ஐயா, நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை முதல் முதல் திறந்து விட்டபோது மக்கள் எவ்வளவு மகிழ்வை அடைந்து இருப்பார்கள் !

**ஆசிரியர் :**—ஆம் ; உண்மையில் மடையின் திறப்பு விழா நடைபெற்ற பொழுது தண்ணீரைக் கண்டவுடன் அவர்கள் ஆரவாரித்து மகிழ்ந்தார்கள்.

**மதியழகன் :**—ஐயா, இப்போது நீர்த்தேக்கத்தின் நன்மையை நன்கு அறிகிறோம். இன்னும் இத்தகைய நீர்த்தேக்கங்கள் நம் தமிழ் நாட்டில் பல ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் நமது உணவுத் துன்பம் நீங்கும்.

**ஆசிரியர் :**—ஆம் ; உண்மை. நமது அரசியலார் பல ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துள்ளனர். இதுபோன்ற பல நீர்த்தேக்கங்களை வசதியுள்ள இடங்களில் அரசியலார் அமைப்பர். இனிச் சில ஆண்டுகளுக்குள் நம்மை வருத்தும் வறுமை நீங்கும்.

**சிறுவர்கள் :**—ஐயா, நம்மை ஏற்றிச் செல்லும் இயங்கி (பஸ்) வந்து விட்டது. நாம் புறப்படலாமா ?

**ஆசிரியர் :**—நல்லது. போகலாம்.

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| நீர்த்தேக்கம் | வரலாறு | சிற்றூர்கள் |
| இயல்பாகவே | குடியிருந்த | வசதிகள் |
| அரசியலார் | குடியேற்றி | மடை |
| கோவை | முற்றிலும் | திறப்பு விழா |
| ஐந்தரை | குன்றுகள் | இயங்கி |

## வினாக்கள்

1. ஆறுகளில் அணை கட்ட வேண்டியதன் தேவை யாது?

2. பவானி அணை எங்கு இருக்கிறது? அதனைப் பற்றி அறிந்ததை வரைக.

3. அணை இருந்த இடத்தில் முன் இருந்தவை எவை? இப்போது இருப்பன யாவை?

4. நம் நாட்டு உணவுப் பஞ்சம் நீங்கச் செய்யத் தக்கன யாவை?

## பயிற்சி

1. உம் பள்ளி மாணவர்களோடு பவானி அணை, மேட்டூர் அணை ஆகியவற்றை நேரில் சென்று காண்க.

2. ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்க.

3. இயங்கி என்பது மோட்டார். இது போன்ற சொற்களை அறிந்து பயன்படுத்துக.

## இலக்கணம்

சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்பது சொற்றொடர்.

பொருள் முடியாமல் இருப்பது எச்சச் சொற்றொடர். (உ-ம்) வந்த மனிதன்—பாடம் படித்து.

பொருள் முடிந்து நிற்கும் சொற்றொடருக்கு முற்றுச் சொற்றொடர் என்பது பெயர்.

(உ-ம்) முத்துக்கள் முத்துச் சிப்பியிலிருந்தே தோன்றுகின்றன.

———

# 20. பாட்டியும் பேரனும்

(நாடகம்)

**இடம் :**—காடு

**உறுப்பினர்கள் :**—ஔவையும், இடையன் உருவில் முருகனும்.

**ஔவை :**—முருகா, கடும் வெயில் கண்ணைப் பறிக்கிறது. களைப்பாக இருக்கிறேனே! அதியமான் நாட்டுக்கு இன்னும் எத்துணைத் தொலைவு செல்ல வேண்டுமோ! நல்ல வேளை! இங்கு ஒரு நாவல் மரம் இருக்கிறது. சற்றுப் படுத்து இளைப்பாறிச் செல்கிறேன்.

(மரத்தினடியில் படுக்கிருர்)

**இடையன் :**—(மரத்திலிருந்து) பாட்டி! பாட்டி! எங்கிருந்து வருகிறீர்கள்? எங்குச் செல்கிறீர்கள்?

**ஔவை :**—யார் அது? என்னையா அழைக்கிருய்? நீ யார்? எங்கிருக்கிருய்?

**இடையன் :**—பாட்டி! மரத்தின் மேலே பாருங்கள். உங்களைப் பார்த்தால் பழுத்த கிழவியாக வல்லவோ காணப்படுகிறீர்கள்? ஏன் இந்தக் கடும் வெயிலில் புறப்பட்டுள்ளீர்கள்?

**ஔவை :**—ஆம் அப்பா! கிழவிதான். அதியமானிடம் செல்லுகிறேன். அவன் நகர் இன்னும் எவ்வளவு தொலைவு இருக்கும்?

**இடையன் :**—பாட்டி! அவன் நகர் அண்மையில் தான் இருக்கிறது. ஒரு கூப்பிடு தூரம் இருக்கும். நான் சில நாவற் பழங்களைப் பறித்துப் போடுகிறேன். உண்டு களைப்புத் தீர்ந்து செல்லலாமல்லவா?

ஔவை :—அப்பனே, நீ நீடு வாழ்க. ஒரு சில பழங்களைப் பறித்துப் போடு. உண்டு செல்கிறேன்.

இடையன் :—சரி பாட்டி. உங்களுக்குச் சுடும்பழம் வேண்டுமா? அல்லது சுடாப் பழம் வேண்டுமா? சொல்லும். வேண்டிய பழங்களை விரும்பும் வரை பறித்துப் போடுகிறேன்.



ஔவையாரும் முருகனும்

ஔவையார்:—(வியப்பெய்தி, நாவற்பழம் சுடுமா? இடையன் பேசுவதன் கருத்து யாது? ஒன்றும் தோன்றவில்லையே. சரி இருக்கட்டும்). தம்பி சுடும் பழம் வேண்டாம். சுடாத பழங்களையே போடு.

இடையன் :—(மரத்தைப் பலமாக ஆட்டி அசைக்கவே காயும் கனிகளும் மரத்தினடியிலுள்ள மணலில் விழுந்தன) பாட்டி, வேண்டிய சுடாத பழங்கள் போட்டிருக்கிறேன். எடுத்து உண்ணுங்கள்.

ஔவை :—(மணலில் கிடந்த கனிகளை எடுத்து அவற்றில் ஒட்டியிருந்த மணலை ஊதுகிறார்).

இடையன்:—பாட்டி, சுடாத கனியல்லவோ கேட்டீர்கள்! ஏன் சுடுகிற கனியைப் புசிக்கப் போகிறீர்கள்? சூடால் வாய் வெந்து போம். நன்றாய் ஊதி, குளிர்ந்தபின் உண்ணும்.

ஔவை :—ஓ! சுடாத பழமென்றது காயைத்தானா! ஆ! என்னே! என் பேதைமை! இதனை யான் அறியாமற் போனேனே! எருமை மேய்க்கும் இடையன் என்னை வென்று விட்டானே! என் கல்வியின் நிலைதான் என்ன? இத்தோல்வி என்னை இனித் துயில விடாதே? முருகா! இதுவும் உன் சோதனை தானோ?

இடையன் :—(தன் உண்மை உருவம் பெற்று) ஔவையாரே! வருந்தாதீர். நாமே இடையன் உருவில் வந்தது. நும்முடன் விளையாடவே இவ்வுருவை ஏற்றோம். நுமக்குச் சமமான கவிஞர் இவ்வுலகில் ஏது?

ஔவை :—(மண்ணில் வீழ்ந்து வணங்கி எழுந்து) முருக பெருமானே! என்னே என் அறிவீனம்! நும்மை இடையன் என்று இகழ்ந்தேனே! என் பிழையை மன்னித்தருள்வீரா? என்னே நும் திருவிளையாடல்!

முருகன் :—அம்மையே! நாம் செந்தமிழால் வைதாரையும் வாழ வைப்போம் என்பதை நீர் அறியீரா? எப்போதும் என்னையே துதிக்கும் உமக்கு என்ன கேடு நேரும்! உலக மக்களுக்குரிய

அறங்களை நீர் கூற நான் கேட்கவே இங்கு வந்தேன். ஏதேனும் கூறுக.

**ஒளவை :**—முருக பெருமானே, என்னே நும்மருள்! நும் கருத்தை அறிய அறியேன். கட்டளையிட்டருள்க.

**முருகன் :**—அம்மையே, உலகிற்கொடியது எது?

**ஒளவை :**—நெடிய வேலாய்! உலகில் வறுமைதான் கொடியது. இளமைக் காலத்தில் உண்டாகும் வறுமை அதை விடக் கொடியது. அதனினும் கொடியது தாங்க முடியாத நோய். அதை விடக் கொடியது அன்பிலா மனைவியைப் பெற்றிருப்பது. அதனினும் கொடியது அவள் இடும் உணவை இன்பமுடன் உண்ணுவதாகும்.

**முருகன் :**—மகிழ்ந்தோம். அம்மையீர், இனியது யாது?

**ஒளவை :**—ஒப்பற்ற வேலனே! தனிமைதான் இனிது. அதனைவிட இனிது கடவுளைத் தொழுதல். அதனைவிட இனிது அறிவினருடன் பேசி மகிழ்தல். அதனை விட இனிது அவர்களை எப்போதும் கண்டு மகிழ்தல்.

**முருகன் :**—நன்று நன்று. உலகில் பெரியது எது?

**ஒளவை :**—முருகா, உலகம் பெரிது. அதனைப் படைத்தவன் நான்முகன். நான்முகனைப் படைத்தோன் திருமால். திருமால் பாற்கடலில் பள்ளி கொள்பவன். பாற்கடலைப் பருகியவன் அகத்திய முனி. அவன் மண் கலசத்தில் பிறந்தவன். அது பூமியிற் சிறு பகுதி. பூமி

அரவினது ஒரு தலைச் சுமை. அரவம் உமையவள் சிறுவிரல் கணையாழி. உமை இறைவனின் உடலில் ஒரு பாதி. இறைவன் அடியவரிடத்து ஒடுக்கம். அடியவர் பெருமை அளவிட முடியாது ?

**முருகன் :—** தமிழ் மூதாட்டியே, உலகில் அரியது எது ?

**ஔவை :—** பெருமானே, மானிடராகப் பிறப்பது அரிது. பிறப்பினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறப்பது அரிது. அவை நீங்கிப் பிறப்பினும் ஞானம் கல்வி ஆகியவற்றைப் பெறுதல் அரிது. அவற்றைப் பெரினும் தானம் தவம் ஆகியவற்றைச் செய்தல் அரிது……அவற்றைச் செய்வோர் வானுலகில் நன்கு வாழ்வர்.

**முருகன் :—** அருந் தமிழ்ச் செல்வியே, நாம் மகிழ்ந்தோம். நும் செவ்விய உரைகள் உலகிற்கே உறுதியளிக்கும் தன்மையன. நீர் நெடுங்காலம் வாழ்ந்து செந்தமிழ்ப் பணி செய்வீராக. (மறைதல்)

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| கடும்வெயில் | கூப்பிடு தூரம் | தோல்வி |
| பறிக்கிறது | சுடும்பழம் | சோதனை |
| களைப்பு | சுடாப்பழம் | ஏற்றேம் |
| இளைப்பாறி | வியப்பெய்தி | அறிவீனம் |
| அண்மை | படைத்தவன் | திருவிளையாடல் |
| கணையாழி | ஒடுக்கம் | பருகியவன் |

### வினாக்கள்

1. ஔவை வெயிலின் கடுமையைப் பற்றிக் கூறிய வற்றைக் கூறுக.
2. இடையன் ஔவையை நோக்கிக் கூறியன யாவை?
3. சுட்டபழம் சுடாத பழம் — விளக்குக.
4. இடையன் தன்னை வென்று விட்டதாக ஏன் ஔவை எண்ணினாள்?
5. ஔவையை முருகன் தேற்றியதெங்ஙனம்?
6. கொடியன யாவை?
7. இனியது யாது?
8. உலகில் பெரியது எது?
9. உலகில் அரியது எது?
10. முருகன் ஔவையை வாழ்த்தியதெப்படி?

### பயிற்சி

1. ஔவையார் வரலாற்றைப் படிக்கவும்.
2. உனக்குத் தெரிந்த ஔவையார் கதையைக் கூறுக.
3. நீ ஔவையார் நூல்களைப் படித்திருக்கிறாயா?
4. இந்த நாடகத்தை நடித்துக் காட்டுக.
5. ஔவையார் இயற்றிய நூல்களைத் தெரிந்து கொள்க.

### இலக்கணம்

நிறுத்துக் குறிகள் :—

[,] காற் புள்ளி

தெனாலி என்ற ஊரில், இராமன் என்னும் பெயருடன் ஒருவன் இருந்தான். விகட கவிகளைக் கோமாளிகள் என்றும், விகடர் என்றும், விதூஷகர் என்றும், மாடவியர் என்றும் கூறுவதுண்டு.

காற்புள்ளிகள் இடப் பெற்றுள்ள இடங்களைக் கவனிக்கவும்.

[;] அரைப் புள்ளி

தெனுலிராமன் அரசன் அவையில் இருப்பான்; நகைச்சுவை ததும்பப் பேசுவான்; யாவரையும் நகைக்கச் செய்வான்.

அரைப் புள்ளி இடப்பெற்றுள்ள இடங்களை அறிந்து கொள்க.

[.] முற்றுப் புள்ளி

அவன் மனைவி அரசியிடம் சென்றுள்.—வாக்கிய முடிவில் முற்றுபபுள்ளி வருவதைக் காண்க.

[?] வினுக்குறி

நீ வருகிருயா?—வினுக்குறியை வினு வாக்கியத்தின் இறுதியில் காணலாம்,

[!] விபப்புக்குறி, ஆ! ஆ! ஐபோ!

இக்குறி உணர்ச்சிச் சொற்களுக்குப் பின்வரும்.

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து :

### 1. தேவாரம்

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ் சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதி யாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

—அப்பர்

### 2. திருவாசகம்

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே.

—மாணிக்க வாசகர்

### 3. திவ்யப்பிரபந்தம்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

—பொய்கையாழ்வார்

### 4. தேம்பாவணி

அறக்கடல் நீயே அருட்கடல் நீயே
அரும்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே
திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே நிகர்கடந் துலகின்
நிலையுநீ யுயிருநீ நிலைநான்
பெறக்கடல் நீயே தாயுநீ யெனக்குப்
பிதாவுநீ யனைத்துநீ யன்றே.

—**வீரமாமுனிவர்**

## 5. சீறாப் புராணம்

திருவினுந் திருவாய்ப் பொருளினும்
[பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

—**உமறுப்புலவர்**

## 6. திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.
3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.
4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்(கு)
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்
மனக்கவலை மாற்றல் அரிது. [கல்லால்

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்
பிறவாழி நீந்தல் அரிது. [கல்லால்

9. கோளில் பொறியில் குணமிலவே எண்
தாளை வணங்காத் தலை. [குணத்தான்

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

—திருவள்ளுவர்

## குறிப்புரை

**1. அப்பர் :—**சைவசமய குரவரில் ஒருவர். இயற் பெயர் மருள் நீக்கியார். ஊர் - திருவாமூர். பெற்றோர் - புகழனார், மாதினியார். தமக்கை - திலகவதி. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இறைவனால் நாவுக்கரசர் என்ற பெயர் பெற்றவர். வேறு பெயர்-வாகீசர்.

**அரும்பொருள்:—**மடநெஞ்சு - இளமை பொருந்திய மனம். தாழ்த்த - வணங்க. சென்னி - தலை. மாமலர் - சிறந்த மலர். வீழ்த்தவா - போக்கவா. வினையேன் - தீவினையுடையவன்.

**2. மாணிக்கவாசகர் :**—சைவ சமய குரவர் நால்வரில் ஒருவர். இயற்பெயர் - வாதவூரர். ஊர்-திருவாதவூர். காலம் - 6-ஆம் நூற்றாண்டு. ஆசிரியர் சூட்டிய பெயர் - மாணிக்கவாசகர்.

**அரும்பொருள் :**—எந்தை-என் தந்தை, பிரான்-தலைவன். அஃது-தந்தை, தாய், தலைவன். முந்தி-முன்னர். சிந்தை-மனம்.

**3. பொய்கையாழ்வார்:**—முதலாழ்வார்கள் மூவரில் ஒருவர். காஞ்சிபுரத்தில் பிறந்தவர். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இயற்பா, முதல் திருவந்தாதி, மூன்றுந் திருவந்தாதி முதலியவற்றைப் பாடியவர். இவர் காலம் 8-ஆம் நூற்றாண்டாகும்.

**அரும்பொருள் :**—வையம்-உலகம். தகளி-அகல். வார்-நீண்ட, வெய்ய - வெம்மை. செய்ய - செம்மை. ஆழி - சக்கரம். இடர்-துன்பம். சொல்மாலை - துதிப் பாடல்கள்.

**4. வீரமா முனிவர்:**—இத்தாலி நாட்டவர்; நம் நாட்டுக்கு ஏசுவின் பணிபுரிய வந்தவர். இயற்பெயர் - ஜோசப் பெஸ்கி. தந்தை-கண்டால்போ பெஸ்கி. தாய்-எலிசபெத் பெஸ்கி. பல நூல்களை இயற்றியுள்ளார். காலம் : 18-ஆம் நூற்றாண்டு. வேறு பெயர் : தைரிய நாதர்.

**அரும்பொருள்:**—கருணாகரன்-கருணைக்கு இருப்பிடமானவன். திறம்-வலிமை. திரு-செல்வம். ஞானநிறம் - அறவொளி. நிகர்-ஒப்பு.

**5. உமறுப்புலவர்:**—ஊர்-எட்டையபுரம். தந்தை-சேகு முதலியார். ஆசிரியர்-கடிகை முத்துப்புலவர், காலம் : கி. பி. 17-ஆம் நூற்றாண்டு.

அரும்பொருள் :—சீரு-வாழ்க்கை வரலாறு. திரு-செல்வம். பொருவு-ஒப்பு. புரந்த-காத்த. கருத்தன்-தலைவன். பெருந்தலம்-உலகம். பூதலம்-பூமி.

6. திருவள்ளுவர் :—வாழ்க்கை வரலாறு பற்றிய உண்மைகள் தெரியவில்லை. இவர் சென்னையிலுள்ள மயிலையிலும் மதுரையிலும் வாழ்ந்தவர் என்பர். இவருக்குத் தேவர், நாயனர், தெய்வப புலவர் என்ற பல பெயர்களுண்டு.

அரும்பொருள் :—ஆதிபகவன் - கடவுள். வாலறிவன்-கடவுள், நன்மை + நாள் - நற்ருள். மலர்மிசை ஏகினுன்-கடவுள். மாணடி - சிறந்த பாதங்கள். வேண்டுதல் வேண்டாமை இலான்-கடவுள். யாண்டு - எக்காலத்தும். இடும்பை-துன்பம். இருவினை-இன்ப துன்பங்கள். இறைவன்-கடவுள். இருள்-மயக்கம். பொருள்சேர்-மெய்ம்மை சேர்ந்த. பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி. வாயில்-வழி. ஐந்து-ஐந்து ஆசைகள். அவித்நான்-அறுத்தவன். தனக்குவமை இல்லாதான்-கடவுள். மாற்றல்-நீக்கல். அறவாழி அந்தணன் - கடவுள். கோள்இல்-இயக்கம் இல்லாத. எண் குணத்தான்-கடவுள். பிறவிப பெருங்கடல்-பிறவியாகிய பெரிய கடல்.

## வினுக்கள்

1. கடவுள் எவற்றை எவற்றிற்குத் தந்துள்ளதாக அப்பர் கூறுகிருர் ?

2. சிந்தையாலும் அறிவரும் செம்மல் யார் ? அவர் இயல்பை மாணிக்கவாசகர் கூறுவதெங்ஙனம்?

3. பொய்கையாழ்வார் ஏற்றிய விளக்கின் தன்மையை வரைக.

4. வீரமாமுனிவர் கடவுள் தனக்கு எவ்வெவ் வகையாக இருப்பதாகக் கூறுகிருர் ?

5. உமறுப்புலவர் கடவுள் தன்மையைக் கூறுவ தெப்படி ?

6. திருக்குறள் கடவுள் வாழ்த்தில் இறைவனைக் குறிக்கும் சொற்ருெடர்களைத் தொகுத்து வரைக.

7. 'அகரமுதல எழுத்தெலாம்'—இதனுல் அறிவது யாது ?

8. கற்றதனுல் ஆய பயன் என் ?

9. நிலமிசை நீடு வாழ்பவர் எவர் ?

10. எவர்க்கு யாண்டும் இடும்பை இல ?

11. எவர்க்கு இருவினையும் சேரா? இருவினை யாவை ?

12. பொறிவாயில் ஐந்தவித்தார் எவர் ? நீடு வாழ் பவர் எவர் ?

13. மனக்கவலை போக வள்ளுவர் கூறும் வழி யாது?

14. பிறப்பிணைக் கடக்கச் செய்யத் தக்கது யாது?

15. இறைவன் அடி எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது ? அதன் பயன் யாது ?

## II. நீதி:

### 1. திருக்குறள்

#### வான்சிறப்பு

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்(து)
உண்ணின்று உடற்றும் பசி. (1)

#### நீத்தார் பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (2)

#### அறன்வலியுறுத்தல்

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (3)

#### இல்வாழ்க்கை

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (4)

#### வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (5)

#### புதல்வரைப் பெறுதல்

மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல். (6)

#### அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (7)

### இனியவை கூறல்

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். (8)

### செய்ந்நன்றியறிதல்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (9)

### அடக்கம் உடைமை

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (10)

—திருவள்ளுவர்

## 2. நீதி வெண்பா

### இனியவை கூறல்

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்கடின
வன்மொழியி னாலிகழும்மண் ணுலகம்-நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபம்தான்
ஏதபரா தம்செய்த தின்று. (1)

### எண்ணற்ற கண்கள்

கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அநந்தம் விழியென் றறி. (2)

### நஞ்சிருக்கும் இடங்கள்

ஈக்கு விடந்தலையில் எய்துமிரும் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். (3)

### உத்தமர் இயல்பு

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (4)

### கற்றவரை அறியும் விதம்

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே--காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (5)

## 3. அறநெறிச்சாரம்

### பத்து அறங்கள்

மெய்மை பொறையுடைமை மென்மை தவமடக்கம்
செம்மை யொன்றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதம் தரித்தலோ டின்ன
அறம் பத்தும் ஆன்ற குணம். (1)

### நடு நிலை காணுமுறை

காய்த லுவத்த லகற்றி ஒரு பொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றாது தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். (2)

### கல்வியின் இன்றியமையாமை

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். (3)

### தற்புகழ்ச்சியை ஒழி

பலகற்ளேம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்ருர் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்
கச்சாணி யன்னதோர் சொல். (4)

### இடவேறுபாட்டால் மாறும் பொருள்

பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்—ஓம்பற்
கொளியாம் உயர்ந்தார்கண் ஞானம் அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு. (5)

—முனைப்பாடியார்

## 4. ஆசாரக் கோவை

### வைகறைச் செயல்கள்

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. (1)

### ஆசிரியரிடம் ஒழுகும் முறை

நின்றக்கால் நிற்க அடக்கத்தால் ; என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் ; பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக ; மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால். (2)

### சொல்லும் முறை

விரைந்துரையார் ; மேன்மே லுரையார் ; பொய்யாய
பரந்துரையார் ; பாரித் துரையார்—ஒருங்கனைத்தும்
சில்லெழுத்தி னலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. (3)

### செய்யத்தகாதன

நிரல்படச் செல்லார்; நிழல்மிதித்து நில்லார்
உரையிடை ஆய்ந்துரையார்; ஊர்முனிவ செய்யார்
அரசர் படையளவும் சொல்லாரே என்றும்
கடைபோக வாழ்துமென் பார். (4)

### இல்வாழ்க்கை ஒழுக்கம்

நந்தெறும்பு தூக்கணம்புள் காக்கை என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும். (5)

—பெருவாயின் முள்ளியார்

### குறிப்புரை

1. **திருக்குறள்:**—வான்சிறப்பு-மழையினது சிறப்பு. விண்-மழை. இன்று-பெய்யாது. வியன்- அகன்ற, உடற்றும்-வருத்தும். நீத்தார்-முனிவர். அறன்- அறம். படரத்த-துன்பத்திலடைந்த. துவ்வார்-வறியர். பெருந்தக்க-மேம்பட்ட பொருள்கள். ஆற்றும்-செய்யும். உதவி-கைம்மாறு. எல்லாம்-எல்லாப பொருளாலும். என்பு-உடம்பு. அகன்-அகம், மனம். முகன்-முகம். நன்றி-முன் செய்த நன்மை. நன்று-அறம். யா-காக்கப்படுவன எல்லாவற்றையும். சோகாப்பர்-துன்புறுவர். இழுக்கு-குற்றம்.

2. **நீதிவெண்பா :**—ஆசிரியர் இன்னரென்பது தெரியவில்லை. அரும்பொருள்:—மதுரவாக்கு-இன்சொல். சுகம்-உலகம். ஏது-என்ன. கர்த்தபம்-கழுதை. அபராதம்-கெடுதி. அநந்தம்-முடிவில்லாத, கணக்கில்லாத. மூன்று விழி--அறிவுக் கண்ணோடு மூன்று. ஈவோர்க்கு ஏழுவிழி-ஊனக்கண் இரண்டும் நகக்கண் ஐந்தோடு ஏழு விழிகள். எய்தும்-உண்டாகும். இருந்தேள்-கருந்தேள். பை-

பசுமையான. துர்ச்சனர்-கெட்டவர். அங்கம்-உடல். சின்னம்பட-நிலைகுலையும்படி. நலிந்தாலும் - துன்புற்றாலும். நபந்து-மிளிர்ந்து. நீடு இசை-இனிமை மிக்க இசைக்குரல். கோலம்-உருவம். வாக்கு-பேச்சு. ஆக்கை நயம்-உடம்பழகு.

3. அறநெறிச் சாரம் :—ஆசிரியர்-முனைப்பாடியார். சமயம்-அருக சமயம். பொறை-பொறுமை. மேன்மை--பெருமை. செம்மை - நடுநிலைமை. ஒன்றின்மை-தனக்கென ஒன்று இல்லாமை. திறம்பா-மாறுபடாத. ஆன்ற-மேலான. காய்வது-வெறுப்பது. உவப்பது-விரும்புவது. ஆய்தல்-ஆராய்ந்தறிதல். கெடும்-மறையும். ஏமாப்பு-இன்பம் செய்வது. பிறிது-வேறு. கூடப்பெறின்-கூடப்பெற்றால். அலர்கதிர்-பரந்தகதிர். காக்கும்-மறைக்கும். அச்சு ஆணி-தேர்ச்சக்கரத்தின் இருசின் ஆணி. (கடையாணி) நச்சு-விடம். அமுதம்-பால். களி-மயக்கம். தேம்-இனிமை. படுதல்-பொருந்துதல். ஒளி-அறிவினை வளர்க்கும்.

4. ஆசாரக் கோவை:—ஆசாரங்களது கோவை அல்லது ஆசாரங்களைக் கோத்த கோவை. இயற்றியவர்-பெருவாயின் முள்ளியார். இவரது வரலாறு அறியப்படவில்லை.

அரும்பொருள் :—வைகறை - விடியுமுன் பத்து நாழிகை காலம். சிந்தித்து-ஆராய்ந்து. வாய்வதில் - வாய்ப்பு உடைத்தாவதன்றி. முந்தையோர்-பண்டையோர். பெருந்தக்கார் - நன்மாணுக்கர். நின்றக்கால் - பாடஞ் சொல்லுதலை நிறுத்தினால். ஏவாமை-எழுந்துபோ என ஏவுதற்குமுன். கேட்க - கேட்டிடுக. சொல்லொழிந்தக்கால் - யாதொன்றும் சொல்லாவிடின். பரந்து - பரக்க. பாரித்து - பரப்பி. ஒருங்கனைத்தும் - முழுவதும். செவ்வி - தக்க காலம். கடைபோக - ஒருதன்மையாக. நிரல்பட-வரிசைப்பட. நிழல்-ஒருவருடைய நிழல். உரை

யிடை - பேசும்போது. முனிவ-வெறுக்கத் தக்கவை. படை அளவை - படையின் தொகை. நந்து - ஆக்க முள்ள. தம் கருமம் - நம்முடைய செய்கை. அப்பெற்றி- அம்மூன்றின் தன்மை போல. பெற்றி-தன்மை.

## வினாக்கள்

1. வானின் சிறப்பை நும் பாடத்தில் வந்துள்ள திருக்குறள் எங்ஙனம் கூறுகிறது?

2. பெரியர் யார்? சிறியர் எவர்?

3. இன்பம் எது? பிற யாவை?

4. இல்வாழ்வான் எவ்வெவர்க்குத் துணையாவான்?

5. பெண்ணின் சிறப்பை வள்ளுவர் கூறுவது எப்படி?

6. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது?

7. அன்பிலார் அன்புடையார் ஆகியோர் இயல்பு களைக் கூறுக.

8. ஈதலின் நன்று யாது? எங்ஙனம்?

9. எதனை மறத்தல் தகும்? எதனை மறத்தல் கூடாது?

10. எதனைக் காக்க வேண்டும்? ஏன்?

11. குயில், கழுதை இவற்றின் செயலால் நீதி வெண்பா அறிவுறுத்துவது எவற்றை?

12. எவரெவர்க்கு எத்துணைக் கண்கள்? எப்படி?

13. ஈ, தேள், அரவு இவற்றிற்கு விடம் உள்ள இடங்கள் எவை?

14. உத்தமர் இயல்பு யாது? எவற்றைப் போல?

15. கற்றவரை அறியும் விதம் யாது?

16. ஆன்ற குணமான பத்து அறங்கள் யாவை?

17. ஒன்றை எங்ஙனம் ஆராயத் தகும்?

18. மக்களாகப் பிறத்தல் சிறந்ததாவது எப்போது?

19. 'அலர் கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்' இதனுல் அறிவது யாது?

20. பாம்பு, பசு ஆகியன உண்ணும் நீரால் உண்டாவன யாவை? இவற்ருல் அறிவன யாவை?

21. காலையில் செய்வன எவை என ஆசாரக் கோவை கூறுகிறது?

22. ஆசிரியரிடம் ஒழுகும் முறைகளைக் கூறுக.

23. பிறரிடம் பேசும் முறை யாது?

24. செய்யத்தகாதன யாவை?

25. இல்வாழ்வார் கடைப்பிடிக்கத்தக்க மூன்று யாவை? எவற்றைப் போல?

———

## III. கதைப்பகுதி:

### 1. பஞ்ச தந்திரம்

1. மற்ெருரு நகர்க்குச் செல்லும்
வழியில் ஓர்மணல் தடத்தில்
சற்ெருரு கணப்போ(து) அங்கே
தரித்து அவணிருந்து நெஞ்சில்
உற்றகா ரியங்கள் கோடி
உன்னினன் ‘ இந்த மாவை
விற்றுநாம் ஆடு வாங்கி
மேய்க்கில் ஓரிரண்டு குட்டி

2. போடுமவ் விரண்டில் ஒன்று
பொருகடாத் தன்னை விற்று
நாடுபெண் ஆடு இரண்டு
நயவிலை யாகக் கொள்வோம்
ஆடுஒரு நாலாம் அந்த
ஆடுகள் இரண்டு இரண்டாப்
போடுமக் குட்டி யோடே
பொருந்திய பன்னிரண் டாமே

3. பன்னிரண்டு ஆடும் விற்றுப்
பசுக்கள் ஓரிரண்டு கொள்வோம்
தன்னிலே பட்டி மேய்ந்து
தருக்கியே இரண்டு ஈனும்
மன்னுபால் நெய்யும் விற்று
மற்றிரு பசுவும் கொள்வோம்
அன்னவப் பசுக்கள் ஆறும்
ஆறு சேங்கன்று நல்கும்

4. மூவணை ஏரும் பூட்டி
முன்னுள நிலங்கள் எல்லாம்
ஓவற வளங்கள் ஆக
உழுதுநாம் பயிர்கள் இட்டே
மேவு தானியங்கள் எல்லாம்
விலைகளைக் குறைய விற்றுக்
காவலன் அறிக்கை யாலே
கனக்கவோர் வீடுகட்டி

5. இருந்துநாம் பணமும் காசும்
ஏரொடு பொருளும் தேடிப்
பொருந்திய இரவ லர்க்குப்
போசனம் இடுவோம்; இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும்
வலியவே தருவர். அந்தத்
திருந்திழை யாளும் நாமும்
செருக்கியங் கிருக்கும் நாளில்

6. அப்படி இருக்கும் நாளில்
அந்தியில் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணுள் செல்லக்
குழந்தையு மழுநா மோடி
இப்படி அடிப்போம் அங்கே;
என்று ஒருதடி எடுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி
சிதறிட அடித்திட் டானே.

—**வீரமார்த்தாண்ட தேவர்**

### குறிப்புரை

**வீரமார்த்தாண்ட தேவர் :** இவர் பஞ்ச தந்திரக் கதைகளைத் தமிழில் பாக்களாகப் பாடியவர்; கடந்த நூற்றுண்டில் வாழ்ந்தவர்; பஞ்சதந்திரம் என்பது ஐவகை உபாயங்கள் என்ற பொருள்படும். இந்நூலில் பல கதைகள் உள்ளன. இவை பல நீதிகளை விளக்கிச் சொல்கின்றன.

1. தடம்-வழி. கணம்-விநாடி. உன்னினன்-எண்ணினன். தரித்து-தங்கி. உற்ற-பொருந்திய. மாவை-பொரிமாவை.

2. பொருகடா - போர்செய்யும் ஆட்டுக்கடா. நய விலை-குறைந்த விலை.

3. மன்னு-நிலைபெற்ற. சேங்கன்று-காளைக்கன்று.

4. மூ அணை-மூன்றுசோடி. ஓஅற-குற்றம் நீங்க. காவலன் அறிக்கையாலே - மன்னனது ஆணைப்படி. கனக்க-பெரிதான.

5. இரவலர்-வறியோர். போசனம்-உண்டி, உணவு. திருந்திழையாள் — பெண்.

6. அந்தி-மாலை நேரம். கொப்படர் கண்ணுள் - மனைவி. சிதறிட-நாலாப் பக்கமும் சிதறி ஓட.

### கேள்விகள்

1. பிரம்மசாரி கட்டிய மனக் கோட்டை யாது?
2. "தோண்டி" உடையக் காரணம் என்ன?
3. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

## 2. குலவிச்சை

முடியுடை மன்னர் தம்முள்
    முதல்வனுய் உறையூர் ஆண்ட
கடிமலர் மாலை யண்ணல்
    கரிகால னென்னும் சோழன்

மிடியினுக் கிடியே யாகி
    மீளியாய் மிளிர்ந்து நந்தம்
படியினைப் புரந்து வந்தான்
    பகைவரும் ஒருங்கு வாழ்த்த (1)

காட்டினைக் கெடுத்து நாட்டைக்
    கண்டனன் பொன்னி தன்னில்
நாட்டினன் கால்வாய் என்றும்
    நண்ணிட உழவர் ஓதை
ஓட்டினன் வறுமை நோயை
    ஒள்ளியர் மக்க ளானார்
ஏட்டள விருந்த கல்வி
    எங்ஙனும் பெருக வைத்தான் (2)

மன்னவன் அவையை நாடி
    வந்தனர் இருவர் ஓர்நாள்
முன்னிய வழக்கைக் கூற
    முடிநரை யுற்ற மூத்தோர்
அன்னவன் இளமை காண
    அகன்றனர் அகந்தை தன்னால்
'இன்னவன் இதனின் நீதி
    இயம்பிட வலனோ' என்றே (3)

கருதிய முதியோர் கொண்ட
    கருத்தினை முகத்தால் தேர்ந்து
மருவிய இளமை தன்னை
    மாற்றிட மனத்துட் கொண்டு
பொருவிலா முதியோ னென்று
    போந்தவர் பலரும் செப்ப
அருநரை முடித்து வந்தான்
    அறிந்திலர் எவரும் அம்மா! (4)

வழக்கினைக் கொணர்ந்த வல்லோர்
வந்தனர் அரசன் ஏவ
சழக்கினை ஆய்ந்து நேர்ந்த
சதியினை எடுத்துக் கூறி
மழுக்குடை முதியோர் தங்கள்
மதியினை மாற்ற அன்னோர்
விழுக்குடை வேலி னனை
வியந்தனர் போற்றி ஏத்தி. (5)

—பாப்பிறையனார்

## அரும்பொருள்

(1) குலவிச்சை-குலவித்தை. முடியுடை மன்னர்-சேரன், சோழன், பாண்டியன். முதல்வனாய்-சிறந்தவனாய். கடி-வாசனை, மிடி - வறுமை. மீளி - வீரன். மிளிர்ந்து-விளங்கி. படி-பூமி. புரந்து - காத்து. ஒருங்கு - சேர்ந்து.

(2) கெடுத்து-அழித்து. கண்டனன் - உண்டாக்கினான். பொன்னி-காவிரி. ஓதை-உழுதலால் உண்டாகும் ஒலி. ஒள்ளியர்-நல்லவர்.

(3) முன்னிய-தமக்குள் உண்டான. அன்னவன்-கரிகாலன். காணு-கண்டு. அகந்தை-கர்வம். இன்னவன்-இவன். இதனின்-இந்த வழக்கின். இயம்பிட-கூற. வலனோ-வல்லவனோ.

(4) கருதிய - எண்ணிய. தேர்ந்து - அறிந்து. மருவிப-பொருந்திய.பொருவிலா-ஒப்பிலாத. போந்தவர்-அவைக்கு வந்தவர். நரை-நரைமயிரை, முடித்து - அணிந்து.

(5) ஏவ-கட்டளையிட. சழக்கு-வழக்கு. ஆய்ந்து-ஆராய்ந்து. ஏத்தி - புகழ்ந்து.

## வினாக்கள்

1. கரிகாலன் தலைநகராய்க் கொண்ட ஊர் யாது?
2. கரிகாலன் ஆட்சி செய்தது எங்ஙனம்?
3. 'இன்னவன் இதனின் நீதி இயம்பிட வலனே' —இதனைக் கூறியது யார்? கூறியதேன்?
4. கரிகாலன் மாறுவேட மணிந்தது எங்ஙனம்?
5. முதியோர் மதியை மாற்றியது யார்? எங்ஙனம்?

## பயிற்சி

1. இக் கதையினை ஒரு நாடகமாக எழுதி நடிக்க.
2. இக்கதையை 14 வரிகளுள் சுருக்கி எழுதுக.
3. இப்பாடல்களை இசையுடன் படிக்கக் கற்றுக் கொள்க.
4. கரிகாலனது முழு வரலாற்றை அறிந்துகொள்க.

# IV. பல்சுவைப் பகுதி

## 1. நாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே--அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே--அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்தது இந்நாடே—இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ--இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ.

--பாரதியார்

## 2. நாய்

(1) வீட்டு வாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்
ஆட்டுக் கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன்
(2) உண்ட சோற்றை எண்ணி
உயிரும்விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய் போல்
வாய்த்ததுணை உண்டோ.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## 3. விண்மீன்

(1) வானத்து நீலப் பட்டாடை—அதில்
வாரி இறைத்த முத்துக்கள்
மேனி சிலிர்த்திடும் கண்டால்—அவை
விண்மீன்கள் என்று சொல்வார்கள்.

(2) மீன்என்று சொல்லுவ தேனோ?—அவை
மின்னிடும் காரணம்—தானோ?
நீர்நிலை மீன்கள் நம்மீன்கள்—அவை
நீல வானக்கடல் மீன்கள்.

--பாரதிதாசன்

## 4. காற்று

(1) காற்றை யாரே கண்டனர் மண்மேல்!
காணேன் யானே, கண்டனை யோநீ?
ஆனால், அறிவம் அலறும் இலைகள்
ஊடே கலந்து உலுற்றும் அதனை.

(2) வாயுவைக் கண்டோர் வானோர்தாமோ!
யாரும் இல்லை. பாரில் தருக்கள்
தலையினைச் சாய்த்துச் சான்றோர்போல
வணங்கப் பாயும் வன்மை யிலையேல்.

—பாப்பிறையனார்

## குறிப்புரை

1. பாரதியார் வரலாற்றுக் குறிப்பை உரைநடைப் பகுதியில் காண்க.

அரும்பொருள் :—குலாவி-விளையாடி. முந்தையர் - மூதாதையர். வந்தனை - வணக்கம். வந்தேமாதரம் - வணக்கம் தாயே.

**2. தேசிக விநாயகம் பிள்ளை** :- இவர் நாஞ்சில் நாட்டுத் தேரூரில் பிறந்தவர். பெற்றோர் - சிவதாணுப்பிள்ளை-ஆதிலட்சுமி. குலம்-வேளாளர். பிறப்பு 1876; இறப்பு-1954. இயற்றிய நூல்கள்-மலரும் மாலையும், ஆசிய சோதி, மருமக்கள் வழி மான்மியம் முதலியன.

**அரும்பொருள்** :—கிடை - மந்தை. மண்டலம் - உலகம். வாய்த்த - கிடைத்த.

**3. பாரதிதாசன்** :— இவர் புதுச்சேரியில் வாழ்பவர். தந்தை-கனகசபை. பிறப்பு: 29-4-1881. இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியாரிடம் கொண்ட அன்பு காரணமாகப் பாரதிதாசன் என்ற புனைபெயர் கொண்டார். இயற்றிய நூல்கள் : பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு முதலியன.

**அரும்பொருள்** :—மேனி-உடல். விண்மீன்-நட்சத்திரங்கள்.

**4. பாப்பிறையனார்** :— இக்காலக் கவிஞருள் ஒருவர்; சேலம் தூயமரி உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக உள்ளவர்; தமிழில் வித்துவான் பட்டமும் M.A., B.T., என்ற பட்டங்களும் பெற்றவர்; பள்ளிக்குரிய பாடநூல்களை எழுதிவருபவர்; தனிப்பாடல்கள் பல இயற்றியுள்ளார். இயற்பெயர், சு. நாகராசன் என்பதாம்.

**அரும்பொருள்** :—மண்மேல்-உலகில். அலறும்-ஒலிக்கும். ஊடே-வழியே. உஞற்றும்-அலைக்கும். தரு-மரம். சான்றோர்-மேலோர். வன்மை-வலிமை.

## வினாக்கள்

1. நம் நாட்டின் பெருமையைப் பாரதியார் எங்ஙனம் கூறுகிறார்?
2. நாயின் இயல்பு கூறப்படுவது எங்ஙனம்?
3. விண்மீன்-மீனெனப் பெயர் பெற்றதேன்?
4. காற்று உள்ளது என்பதை எப்படி அறியலாகும்?

———

139725
600 008.

TTR
876

427

3.465/L

# VALLUVAR TAMIL VACHAKAM

FOR STANDARD V

BY

VIDWAN S. NAGARAJAN, M.A., B.T.,

★

Grams: 'BOOKS' Phone: 399

SIVALINGAM PUBLISHING HOUSE

Post Box No. 96,

ERODE.

Copy Right] 1960 [Price 95 nP.